@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

ஆகஸ்ட் 2018

Vol.2, Issue 2 | Price ₹35 | Annual Subscription ₹420



Rotary




*With Best compliments from*

# PDG John Daniel

**Secretary, South Asia Reception, Rotary Convention, Toronto**



# உள்ளே


**12** **TRFக்கு ரூ100 கோடி தந்த கலியுக கர்ணன்!**
TRFயிற்கு $100 கோடி தரும் RC பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ்யின் தலைவர் D ரவிசங்கரைப்பற்றி படியுங்கள்.

**20** **டொராண்டோ மாநாட்டில் ரோட்டரி அமைப்பினர் உற்சாகம்**
25,000 ரோட்டரியினர் பங்கேற்ற ரோட்டரி கன்வென்ஷனைப்பற்றி தெரிந்துக்கொள்ளுங்கள்.

**24** **$372.6 மில்லியன் வசூல்: ரோட்டரி ஃபவுண்டேஷன் சாதனை**
TRFஅறங்காவலர்கள் தலைவர் பால் நெட்ஸல் டோரண்டோ கன்வென்ஷனில் TRFயின் தற்போதைய செயல்திறன் குறித்து விவரித்தார்.

**36** **ட்ரினிடாட், பறவைகளின் பூமி**
வெனிசுயேலா அருகில் உள்ள ட்ரினிடாட் பற்றி அறிந்துக்கொள்ளலாம்.

**56** **வாட்டர் வீல்கள் தண்ணீர் எடுப்பதை எளிதாக்குகிறது**
பாம்பே ஹேங்கிங் கார்டன் சங்கத்தினர் மஹாராஷ்ட்ர கிராமங்களில் தண்ணீர் சேகரிக்கும் வழியை எளிதாக்குகின்றனர்.


**64** **வண்ணமயமான அரக்குக் கைவினை அழிந்துவிடும் நிலையில்...**
ஜெய்பூரின் பாரம்பரிய கலையான அரக்கு வேலைப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை


**70** **தவறான பழக்கத்தை விட்டு விடுங்கள்!**
கெட்ட பழக்கங்களை தெரிந்தே வழக்கமாக கொண்டிருப்பது குழியில் இழுப்பதற்கு சமம். அச்சுவாதியமான பிரதேசத்திலிருந்து வெளியேற சில வழிமுறைகள்.

**72** **உள்ளங்களின் சங்கமம்**
புத்தகங்கள் எப்படி நம் சொந்த கருத்துகளிடமிருந்து மாறுபட்டு முற்றிலும் புதிய கோணத்தை காண்பிக்கிறது என்பதைப் பற்றி அறியலாம்.

















**படங்கள்:** டோரண்டோ மாநாட்டின் துவக்கவிழாவில் ஓர் நடனக்காட்சி.

**படம்:** மைக் தான்

## நல்ல அமைப்பு, சிறந்த உள்ளடக்கம், பாலின சமஉரிமை கட்டச்செய்தி

*ஜூலை மாத இதழின், புதிய அமைப்பு, அட்டைப் பக்கம் மற்றும் அதன் குறிப்பிடத்தக்க கட்டுரை ஆகியவை மிகச்சிறப்பாக உள்ளது. ரோட்டரியின் உள்ளேயும், வெளியேயும் பாலின சமன்பாட்டை அதிகமாக வலியுறுத்தும் ஆசிரியரின் குறிப்பு,ரோட்டரியில் அதிகமான பெண் உறுப்பினர்களை சேர்க்க வேண்டிய தன் அவசியத்தை விவரிக்கிறது.*

*இந்த ஆண்டின் கருத்து உந்து சக்தியாக இருங்கள் ஆகும். மேலும் பஹாமியன் நல்லியல்பு மற்றும் உறுதியான தலைமைக்கும் சரியான சமநிலையை வலியுறுத்தி, அத்தகைய ஒரு பயனுள்ள கருத்தை தேர்ந்தெடுத்ததற்காக நாம் RI தலைவர் பேரி ராஸினுக்கு கடமைபட்டிருக்கிறோம். அவர் ஒரு தொலைநோக்குப் பார்வையுள்ள நிர்வாகி மற்றும் அவரது திறமையான தலைமையின் கீழ், ரோட்டரி புதிய உயரங்களை எட்டவிருக்கிறது.*

*ரஷீதா பகத்தின், பெண்களுக்கு சிறகுகள் கொடுக்கப்படுகிறது என்ற கட்டுரை, நீதிபதி ஸ்வாதி சவானை , ‘‘விவாகரத்தான பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான ஒரு புதுமையான திட்டத்தை’’ வெளிச்சத்துக்கு கொண்டு வர வைத்துள்ளது. நிச்சயமாக, இந்த திட்டத்தை மற்ற சங்கங்களாலும் பின்பற்ற முடியும். பள்ளிப்படிப்பைக் கைவிட்ட சிறுமிகளுக்கு மறுவாய்ப்பு என்ற இன்னொரு கதை, RC அங்களேஷ்வரால் வழங்கப்படும் ஒரு திறனுள்ள மற்றும் பயன்படக்கூடிய திட்டப்பணியாகும். மற்ற அனைத்து கட்டுரைகளும் படிக்கத் தகுந்தவை.*

M T *பிலிப்,* RC *திருவனந்தபுரம் புறநகர்* — D 3211




*மிகவும் ஈர்க்கத்தக்க புதிய வடிவமைப்புடன் கூடிய முன் பக்கத்திற்கு வாழ்த்துக்கள். நமது ரோட்டரி பயணத்தின் 114வது வருடத்தை வரவேற்க இது ஒரு சிறந்த வழி. புதிய தோற்றம் ரோட்டரி நியூஸை தெளிவாக, சிறப்பாக மற்றும் மிகவும் தனித்துவமாகவும் காட்டுகிறது. அது தனிச்சிறப்பு மிக்க ஒரு இடத்தை அடையப் போகிறது என்று நான் நம்புகிறேன். அது நமது அமைப்பின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்திக் காட்டக்கூடியது. நல்லதுக்காக நாம் நம்மை புதுப்பித்துக் கொண்டே இருப்போம். உங்களுக்கும் உங்கள் முழு குழுவிற்கும் வாழ்த்துக்கள்.*

DG A V *பதி* — D 3201

*ஆசிரியரின் குறிப்பும் பெண்களுக்கு அதிகாரமளிப்பது குறித்து புனேயின் நீதிபதி ஸ்வாதி சவான் வேர் விமன் ஆர் கிவன் விங்க்ஸ் (பெண்களுக்கு சிறகுகள் வழங்கப்படும் இடம் இது) அவர்களின் நேர்காணலும் தான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.*

*நமது சமுதாயம் அமைதியான மற்றும் நிலையான வாழ்க்கை வாழப் போராடும் அர்ப்பணிப்புள்ள மற்றும் தன்னலமற்ற பெண்கள் இருப்பதால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. வேலை மற்றும் வீடு இரண்டிலும் இவர்கள் சிறந்த வெற்றியாளர்களாக தங்களை நிரூபிக்கின்றனர். அவர்கள் திறமையுள்ளவர்கள் மற்றும் அனைத்து சூழ்நிலைகளையும் சமநிலையில் வைத்திருக்கக் கூடியவர்கள் . ரோட்டரியில், சமீபத்திய ஆண்டுகளில் மாவட்ட மற்றும் சங்கத் தலைமையை ஏற்றுள்ள பலப் பெண்களை நாம் நல்ல உதாரணங்களாகக் காணலாம். ரோட்டரியில் மட்டுமில்லாமல் பிறவற்றிலும் உள்ள பெண்களைப் பற்றியும் மற்றும் அவர்களுடைய சிறப்புத் திறமைகளைப் பற்றியும் சுவாரஸ்யமான கட்டுரைகளை*

### ஒரு திட்டப்பணி திரும்பச் செய்யப்படும்

இலைத் தட்டு திட்டப் பணியின் (மகளிர் வாழ்வாதாரத்தை மேம் படுத்துதல்) கதையை வெளியிட்டதற்கு RC மண்டி உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. இக்கதையை கிரண் ஜெஹ்ரா அருமையாக வெளிப்படுத்தியுள்ளார், இந்த சுற்றுச் சூழலுக்கேற்ற இலைத் தட்டுகள் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் என்பதையும் அவர் நன்கு விளக்கியுள்ளார். திட்டத்தின் விவரங் களை வழங்கும்படி மாவட்டத்தில் உள்ள பல சங்கங்கள் என்னைக் கேட்டுள்ளனர், அதைக் கொண்டு அவர்களும் அவர்களுடைய சமூகத்தில் அத்தகைய திட்டப்பணியைத் தொடங்கலாம்.

சுரேந்தர் மோகன்,
RC மண்டி — D 3070

RI தலைவர் மற்றும் RID செய்தி உண்மையில் ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்கிறது. ரோட்டரியின் அனைத்து சேவை வழிகளிலும் ரோட்டரிக்குப் பங்களிப்பு அளிக்க, புதிய மற்றும் பழைய உறுப்பினர்களை ஊக்குவிக்க அனைத்து ரொட்டேரியன்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. சங்க பிரசிடென்ட் முன்னிலையில் இருந்து வழிநடத்த வேண்டும்.

Dr NRUK கர்த்தா
RC திருவனந்தபுரம்
புறநகர் — D 3211

*தொடர்ச்சியாக இடம்பெறச் செய்த ஆசிரியருக்கு நன்றி.*

R *சீனிவாசன்,* RC *மதுரை மிட்டவுன்* — D 3000

*நீதிபதி ஸ்வாதி சவானுடனான நேர்காணல் சுவாரஸ்யமாகவும், தகவல் நிறைந்ததாகவும், ஊக்க மளிக்கும் ஒன்றாகவும் இருந்தது. சமுதாயத்தில் உள்ள ஏமாற்றப்பட்ட மற்றும் விவாகரத்து செய்யப்பட்ட பெண்களின் பிரச்சினைகளை நீதிபதி தெளிவுபடுத்துகிறார். ஜீவனாம்ச ஒழுங்கை நடைமுறைப் படுத்துவதே இங்கு பிரதான பிரச்சினை. ஆண்கள் விவாகரத்தான மனைவிகளுக்கு பராமரிப்பு தொகை செலுத்தாமல் அதற்கு பதிலாக சிறைக்கு செல்லக் கூட தயாராக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தச் சூழலில், ஸ்வயம் சித்தாவின், விவாகரத்துச் செய்யப்பட்ட பெண்களுக்கான சில பயனுள்ள வேலைவாய்ப்புகளில் பயிற்சி யளிக்கப்படும் புதுமையான திட்டப்பணியால் அவர்கள் சுதந்திரமாக மற்றும் அமைதியாக வாழக்கூடும்.* PRIP *கல்யாண் பானர்ஜி கூட்டத்தில் பரிந்துரைத்த படி, விவாகரத்தான பெண்களுக்கான இந்த நடைமுறைத்திட்டப்பணியில், இந்தியா முழுவதிலும் உள்ள ரோட்டரிச் சங்கங்கள் பங்கெடுக்க முன்வர வேண்டும்.*

S *லக்ஷ்மணன்*
RC *அம்பாசமுத்திரம்* — D 3212

## பெண் தலைவர்கள் தேவை

பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான உங்கள் முயற்சி பாராட்டுக்குரியது. வரும் ஆண்டுகளில், தலைவருக்கான போட்டியில் பலப் பெண்கள் மாவட்ட கவர்னர்களாக இருக்கும் ஒரு சூழ்நிலையை ரோட்டரியில் நாம் அனுபவிக்கப் போகிறோம். 'பெண்கள் விலையைப் பற்றிய உணர்வுள்ளவர்கள்' என்ற உங்கள் அறிக்கை பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. பாலின சமநிலை மெய்பிக்கப்பட்ட உடன், சமூகத்தில் தற்போது நிலவும் குழப்பம் மற்றும் அராஜகம் முடிவுக்குக் வரும்.

அருண் குமார் டாஷ்
RC பரிபாடா — D 3262

## ரொட்டேரியனாக பெருமிதம்

ரோட்டரி ஒரு கொடையாளிக்கு மிகச் சிறப்பாக மரியாதை அளிக்கிறது என்ற கட்டுரையில் (ஜூன் மாத இதழ்), நான் PRIP கல்யாண் பானர்ஜியின் ஒரு அறிக்கையை கவனித்தபோது ஆச்சரியமாக இருந்தது, அதில் அவர், "ஒரு இத்தாலிய ரொட்டேரியன், மிகப்பெரிய பூகம்பத்தால் சேதப் படுத்தப்பட்ட கட்ச் (Kutch)ன் நிவாரண பணிக்காக $1 மில்லியனுக்கான ஒரு காசோலையை உடனடியாக அளித்தார். அவர் பணம் எப்படி செலவழிக்கப்பட்டது என்று என்னிடம் கேட்கவுமில்லை, இந்தியாவுக்கு செல்லவும் இல்லை. இது ரோட்டரியில் மட்டுமே நடக்கும்." என்று கூறினார். ரொட்டேரியனாக இருப்பது பெருமைக்குரிய விஷயமாகும்.

N ஜகதீசன், RC ஏலுரு — D 3020

## உலகத் தரம் வாய்ந்த உள்ளடக்கம்

ரோட்டரி நியூஸ் இதழின் ஒரு வழக்கமான வாசகர். உலகத் தரம் வாய்ந்த உள்ளடக்கம், கட்டுரைகள் மற்றும் மாவட்டங்களில் செய்யப்படும் ரோட்டரி திட்டப் பணிகளின் பட்டியல் ஆகியவற்றைக் கொண்ட ஒரு இதழை வெளியிட்டதற்கு உங்களையும் உங்கள் ஆசிரியர் குழுவையும் பாராட்டுகிறேன். ஒவ்வொரு மாதமும் 10-ந் தேதி நான் இதழைப் பெற்றவுடன், பெரும்பாலான கட்டுரைகள் ஈடுபாட்டை ஏற்படுத்தக்கூடியவையாகவும் சுவாரஸ்யமானவையாக இருப்பதால், அதைக் கீழே வைக்க முடிவதில்லை.

நிபுன் பட்டேல், RC. கங்காரியா
அஹமதாபாத் — D3054

## சமூக ஊடகங்களில் ரோட்டரியை விளம்பரப்படுத்த!

ரொட்டேரியன்களாகிய நம் அனைவருக்கும், சமூகங்களில் நம் சங்கங்கள் சாதித்த வேலைகள் பற்றிய அற்புதமான நூற்றுக்கணக் கான கதைகள் உள்ளன. ஒவ்வொரு சங்கமும், ரோட்டரிச் சங்கங்களின் தொடர்பிற்கு அப்பால் சமூக ஊடகங்களை திறம்பட பயன்படுத்தி நல்ல பெயரைப் பரப்பச் செய்யும் நேரமிது.

சங்கங்கள், திட்டப்பணிகள் மற்றும் நிகழ்ச்சிகளை ரோட்டரி அல்லாத இணையதளங்கள் மற்றும் நெட்வொர்க்கிங் குழுக்களில் நல்ல படங்களோடு பதிவு செய்ய வேண்டும். ஒரு சங்கம், சமுதாயத்தில் ரோட்டரி பற்றிய ஒரு நேர்மறையான பொதுத் தோற்றத்தை இதன் மூலம் திறம்பட உருவாக்க முடியும்.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — D 3262



## அறக்கட்டளைக்கு ரூ.100 கோடி

RC *பெங்களூரு ஆர்ச்சார்ட்ஸ்,* D 3190 *பிரசிடென்டான, ஹரா பில்டர்ஸ் நிறுவன ரொட்டேரியன்* D *ரவிசங்கர்* TRF*க்கு ரூ.100 கோடி நன்கொடை அளித்துள்ளார். மேலும் ஒரு சிறந்த உலகத்திற்கு வேலை செய்ய* TRF*க்கு உதவும் ஒரு உன்னதமான காரணத்திற்காக அவர் அளித்த பெரும் நன்கொடைக்கு தலைவணங்குகிறேன்.*

*ஹஸ்முக் படேல்,* RC *புனே வெஸ்டெண்ட்* — D 3131

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:* rotarynews@rosaonline.org ; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakhar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |

### Executive Committee Members (2018–19)

DG Rajiv Sharma — RI Dist 3030
Chair – Governors Council

DG Pinky Patel — RI Dist 3060
Secretary – Governors Council

DG Subhash Jain — RI Dist 3012
Secretary – Executive Committee

DG A Venkatachalapathy — RI Dist 3201
Treasurer – Executive Committee

DG Shashi Sharma — RI Dist 3141
Member – Advisory Committee



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# ஓர் FIFA வருத்தமும், ஓர் பெருந்தன்மை மகிழ்ச்சியும்

FIFA உலகக் கோப்பை அல்லது ரஷ்யா 2018லிருந்து அடையாளச் சின்னமான விம்பிள்டன் வரையில் எடுத்துக் கொள்ளலாம், இங்கு தான் டென்னிஸ் விளையாட்டின் ராஜா ரோஜர் ஃபெடரர், இரண்டு செட் முன்னணியில் மற்றும் ஒரு போட்டி புள்ளியை தென்னாப்பிரிக்க வீரர் கெவின் ஆண்டர்சனிடம் இழந்து போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இன்று வரை ஃபெடரர் ஒரு விம்பிள்டன் போட்டியில் கூட தோல்வியைத் தழுவியதில்லை, ஆனால் எதிரில் இருந்த போட்டியாளரின் நம்பிக்கையின் சக்தி வென்றுவிட்டது. ஆன்டர்சன் பின்னர், “நான் நம்பிக்கையோடு இருக்க வேண்டுமென்று என்னிடமே சொல்லிக் கொண்டிருந்தேன். இன்று எனது நாளாக இருக்கப் போகிறது என்று சொல்லிகொண்டேன்’’ என்றார்.


ஃபெடரர் ஏன் தோற்றுபோனார், ஏனெனில் “தற்காப்பு, கடினமான டென்னிஸ் விளையாடினாரா அல்லது அவரது விளையாட்டு போய்விட்டதா’’ என்று யாரோ ட்விட்டரில் கருத்து தெரிவித்தது போல, எதனால் அவர் தோற்றார் என்று நமக்குத் தெரியாது.

கால்பந்தில் ரொனால்டோ மற்றும் மெஸ்ஸி போன்ற கால்பந்து ஜாம்பவான்கள் தங்கள் திறமை மற்றும் நிபுணத்துவம் மிகவும் தேவைப்பட்ட போது இருவரும் முக்கியமான பெனால்டி ஷாட் அடிக்கத் தவறினர் மற்றும் வல்லமைமிக்க மெஸ்ஸி இந்தத் தொடர் முழுவதும் ஒரே ஒரு கோல் மட்டுமே அடித்திருந்தார். மேலும் வலிமையான அர்ஜென்டினா மற்றும் பிரேசில், போர்ச்சுகல் மற்றும் ஸ்பெயினும்கூட தொடக்கச் சுற்றுக்களிலேயே வெளியேறியது.

ஆனால் பின்னர் வேறு திறமையால் மேன்மை அடைகின்றனர். உதாரணமாக ஃபெடரரை எடுத்துக்கொள்ளுங்கள். மே 3, 2016ல், “ரோஜர் ஃபெடரர் ஏன் இன்னொரு கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை இனி எப்போதும் வெல்ல மாட்டார்’’ என்ற தலைப்பில் இங்கிலாந்து நாளிதழான தி டெலிகிராப்ல் நம்பத்தகுந்த விவாதங்களை முன்வைத்து “ஃபெடரர் ஓய்வு பெறுவதற்கு முன்பு, தனது 17 ஸ்லாம்கள் பட்டங்களுடன் விளையாட்டை முடிக்க வாய்ப்புள்ளது’’ என்றது. எனினும், ஜனவரி 2018ல் ஆஸ்திரேலிய ஓபனில் தனது 20வது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை ஃபெடரர் வென்றார்.

ஃபெடரரிடம் அகந்தை இல்லாமல் இருப்பதால் தான் அவர் அன்பிற்குரியவராக இருக்கிறார், மற்றும் இதுவே ரோட்டரியிலும் காணப்படுகிறது. சமீபத்தில் நான் ஒரு ரொட்டேரியனிடம் பேசினேன், அவர் தன்னை “பாமரன் என்றும் சராசரிக்கும் குறைவான அறிவுடையவர் என்றும்’’ விவரிக்கிறார். ஆனால் TRFக்கு ரூ.100 கோடி($14.7மில்லியன்) நன்கொடை அளித்ததன் மூலம் ரோட்டரி உலகத்தை வியப்புக்குள்ளாக்கியவர் RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் பிரசிடென்ட் D ரவிசங்கர். ‘‘கொடை வள்ளல்’’ குணம் போன்ற வார்த்தைகளை “பெரிய வார்த்தை’’ என்று கூறி, “நான் 4ம் வகுப்பில் இருந்தபோது இழந்த எனது தந்தையாக எண்ணி என்னுடைய பணத்தை இந்த சமூகத்திற்கு கொடுக்கிறேன்’’ என்று அவர் வளர்ந்து வரும் போது கடந்து வந்த கடுமையான நிலைமையை விவரிக்கிறார். இந்த இதழில் அவரது கதையைப் படியுங்கள், இந்த மனிதனின் பணிவைக் கண்டு நீங்கள் அசந்து போவீர்கள். பள்ளிக்கூடங்களை கட்டுவது, கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு சுகாதாரம் மற்றும் மருத்துவ கவனிப்பு அளிப்பது போன்றவற்றை இந்தியாவில் மட்டுமல்லாமல், பாகிஸ்தானில் கிராமப்புற பள்ளியிலும் வழங்குவதற்கு அவரது ஒரு விரல் அசைவின் மூலம், அவரது கனவுகளை நிறைவேற்றுவதற்காக 100 கோடி ரூபாய் கொடுக்க முடியும்... “ஏனெனில் பிரிவினை எங்களை பிரிப்பதற்கு முன் நாம் எல்லோரும் ஒரே மக்களாகத் தான் இருந்தோம்.’’

ரஷீதா பகத்



# வலுவான அமைப்பை உருவாக்க உங்கள் வீட்டிலிருந்து தொடங்குகள்

BE THE INSPIRATION

அன்புள்ள ரோட்டரி நண்பர்களே,

உலகை மாற்ற வேண்டுமா? முதலில் வீட்டுக்குப் போய் குடும்பத்தை நேசியுங்கள் என்ற பழமொழி உண்டு. அப்படியானால், வீட்டுக்கு வெளியே உள்ள உலகத்தை முற்றிலுமாகப் புறக்கணிக்கவேண்டும் என்பதல்ல, மாறாக, தனது தேவைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தம்.

சேவை மட்டுமே நமது குறிக்கோள் என்று எடுத்துக் கொள்ளும்போது, உரியவர்களுக்கு பலன் கிடைக்கும் வகையிலான திட்டங்கள், பெருந்திட்டங்களில் ஈடுபடத் தோன்றும். ஆனால், அதைச் செம்மையாகச் செய்ய வேண்டுமானால், நமது வீட்டை ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டும். ரோட்டரி கொள்கைகளுக்கு ஏற்ப செயல்படுவது என்றால், ரோட்டரியில், பிறரை மதித்துச் செயல்படுவது, திட்டமிட்டுச் செயல்படுவது, நமது ஆதாரங்களைச் சரியாகப் பயன்படுத்துதல் ஆகியவை ஆகும். ஆற்றல் மிக்க, செயல்படும், ஆரோக்கிய எண்ணமுள்ள ரோட்டரி உறுப்பினர்களைக் கொண்டதாக ரோட்டரி அமைப்பு ஆரோக்கியமாக இருக்கச் செய்யவேண்டும்.

ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கை கடந்த 20 ஆண்டுகளாக உலக அளவில் 12 லட்சம் பேர் என்றே இருக்கிறது. வளர்ச்சிஅடையவில்லை. உறுப்பினர்களுக்கோ வயதாகிவருகிறது. பல ரோட்டரி சங்கங்கள் இருக்கின்றன. ஆனால், தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் குறிக்கோள், ஊக்கம் இல்லை. உலகளவில் செயல்படுகிறோம் என்றும், ரோட்டரி ஃபவுண்டேஷனின் திட்டங்கள் குறித்தும் அறியாத ரோட்டரி சங்கங்கள் பல இருக்கின்றன. அவற்றில் எப்படி இடம்பெறுவது என்று கூடத் தெரியாமல் இருக்கின்றன. உறுப்பினர்களில் பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே உள்ளனர். சேவை புரியவிரும்பும் பெண்களுக்கான அமைப்பாகச் செயல்படுவது குறித்த தெளிவும் இல்லை.

முதலில் ரோட்டரி சங்கம் என்பது உறுப்பினர்களை மையமாகக் கொண்டு இயங்கும் அமைப்பாகும். நாம் வகுக்கும் இலக்குகைகளை அடைய வேண்டுமானால், முதலில் உறுப்பினர்கள் தேவை. உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டியது நமது எல்லோரது கடமையும் ஆகும். ஆக்கமுள்ள உறுப்பினர்களைச் சேர்ப்பது மட்டுமல்ல, ரோட்டரியால் மதிப்பு கிடைப்பதை உணரும் வகையில் புதிய உறுப்பினர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

யாராவது ரோட்டரி கூட்டத்திற்கு வந்து, தயங்குபவருக்கு அவர்களுக்கு கூட்டத்தில் பங்கு இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ரோட்டரி திட்டம் குறித்து நீங்கள் ஆர்வமாக இருந்தால், அதைக் குறித்து உங்களது ரோட்டரி சங்கம் அறிந்திருப்பதுடன் அதில் ஈடுபடுவதையும் அறிந்திருக்க வேண்டும். உங்களது சமுதாயத்திற்கு ஒரு தேவை இருந்தால், இந்த வாரக் கூட்டத்திலேயே விவாதியுங்கள். நமது ரோட்டரி சங்கம் வலுவாக இருக்க வேண்டும் என்றால், அதை வீட்டிலிருந்து தொடங்குங்கள். ரோட்டரி அமைப்பில் தூண்டுகோலாக இருங்கள்.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# உறுப்பினர்களை தக்க வைக்க அவர்களை ரோட்டரி பணியில் ஈடுபடுத்துவோம்

அன்புள்ள ரொட்டேரியன்களே,

கல்லூரி காலங்களில் ‘30 நாட்கள்’ புத்தகங்கள் பிரபலமாக இருந்தது நினைவுக்கு வருகிறது. எந்த மொழியையும் முப்பதே நாட்களில், அதாவது ஒரே மாதத்தில் கற்றுத் தேர்ந்து விடலாம் என்பதுதான் அதன் சிறப்பு. அதைப் போல் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். ரோட்டரி ஆண்டில் ஒரு மாதம் முடிந்துவிட்டது. இன்னும் 11 மாதங்கள்தான் உள்ளன.

அமெரிக்க கவிஞர் ராபர்ட் ஃப்ராஸ்டின் உறங்குவதற்குள் நான் செல்ல வேண்டிய பாதை வெகு தூரம் (Miles to go before I sleep) புகழ்பெற்ற கவிதை வரிகள் நினைவுக்கு வருகின்றன. நிறைய செய்ய வேண்டியுள்ளது. காலம் நமக்காகக் காத்திருக்காது.

புதுமையின் ஆதாரம் பன்முகத் தன்மை. அத்துடன் ரோட்டரியின் முக்கிய விழுமியங்களில் அது ஒன்றாகும். பல்வேறு இன, மொழி, பண்பாட்டுப் பின்னணியில் உள்ளவர்களைக் கொண்ட ரோட்டரி சங்கங்கள் சமுதாயத்திற்குப் பரந்துபட்ட புரிதலை அளிக்கின்றன. அத்துடன், சவால்கள், அதற்கான தீர்வுகள் ஆகியவை குறித்த புரிதலையும் அளிக்கின்றன. வளர்ச்சியுடன் அதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். ரோட்டரி சங்கங்களிலிருந்து உறுப்பினர்கள் அண்மையில் விலகுவது குறித்து உலக அளவில் விரிவான ஆய்வு நடத்தப்பட்டது.

உறுப்பினர்கள் ரோட்டரியில் சேர்ந்து ஓராண்டுக்குள் விலகுவதற்குக் காரணம், உறுப்பினர் ஆவதற்கு முன்பு அவர்களது பொறுப்புகள் விளக்கப்படவில்லை என்பதும், உறுப்பினர் ஆன பிறகு ரோட்டரி குறித்து முறையாகத் தெரிவிக்கப்படுவதில்லை என்பதும் அந்த ஆய்வின் மூலம் தெரியவந்தது.

அதே சமயம் புகழ்பெற்ற சில சங்கங்களில் உறுப்பினர்கள் தொடர்ந்து நீடிப்பது அதிகமாக உள்ளது. காரணம், தங்களது மதிப்பு அங்கே அறியப்படுவதை உணர்கிறார்கள். மேலும், அவர்களது பங்களிப்பு மாற்றத்துக்கு வழிவகுக்கிறது என்பதையும் உணர்கிறார்கள். மேலும், அந்தந்த நகரங்களில் உள்ள பொருளாதார, தொழில் மேம்பாடுகளில் புதிய வகைப்பாடுகளையும் உருவாக்குகிறார்கள்.

இன்று, பல்வேறு துறைகளில் தொழில், வர்த்தகம் விரிவடைந்து வரும் சூழலில் வாரந்தோறும் புதுப்புது வகைப்பாடு உருவாகி வருகிறது. உறுப்பினர்களைத் தக்கவைக்கும் வெற்றி என்பது உறுப்பினர்கள் தொடர்ந்து நீடிப்பதும் அவர்கள் செயல்படுவதும் மட்டுமல்ல. அவ்வாறு நீடிக்கும் உறுப்பினர்கள் சங்கத்தின் நடவடிக்கையில் தினமும் உற்சாகமாக ஈடுபடுவதுதான். இரு மாதங்களுக்கு ஒரு முறை கூடி திட்டங்களை வகுப்பது, அதில் உறுப்பினர்கள் ஒருவொருக்கு ஒருவர் கலந்துரையாடுவது, ஆகியவை திட்டமிடப்பட வேண்டும். ஒருவருக்கு ஒருவர் தங்களது பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து கொண்டு அதற்கேற்ப வெற்றிகரமான குழு அமைய இது உதவும்.

ஆக்கப்பூர்வமான உறுப்பினர்களை சங்கத்தின் கூட்டங்கள், சேவைத் திட்டங்கள், சமுதாய நிகழ்வுகள் வரவழைப்பதை ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயத்துக்கு உங்களது ரோட்டரி சங்கம் உதவ முடியும்.

கடந்த 113 ஆண்டுகளாக ரோட்டரி இயக்கம் வரலாறு படைத்து வருவதுடன் உலகத்தை இணைத்து வருகிறது.

ரோட்டரி நெஞ்சில் உறுப்பினர்களையும் உறுப்பினர்கள் நெஞ்சில் ரோட்டரியையும் நிலையாக வைத்திருப்போம் என்ற முழக்கத்தின் மூலம் ரோட்டரியை வலுப்படுத்துவோம். ரோட்டேரியன்கள் ஒவ்வொருவருக்கும் உத்வேகம் அளியுங்கள். அனைவரும் இணைந்து உலகத்தை மாற்றுவோம்.



C பாஸ்கர்

இயக்குநர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# உங்கள் ஃபவுண்டேஷனுக்கு நீங்கள் தேவை

TRFல் நிதி இல்லாமல் நமது பல பணிகள் நடந்திருக்காது. உலகம் முழுவதும் ரோட்டரியின் பல்வேறு முயற்சிகள், செயல்களுக்கு அறக்கட்டளை பின்புலமாக இருக்கிறது. 2025ம் ஆண்டில் TRFயின் நிதியை 2.025 பில்லியன் டாலராக (சுமார் ரூ.13,925 கோடி) உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிதி திரட்டுதற்கான இலக்கு 380 மில்லியன் டாலராக (சுமார் ரூ.2,613.26 கோடி) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது நமக்குப் பெரிய சவாலாகும்.

கடந்த ஆண்டுகளில் ரோட்டரி செய்த சேவைகள் ஒவ்வொன்றையும் உங்களது நிதி உதவி சாத்தியமாக்கியது. அதற்கு இணையாக உங்களது பங்களிப்பும் மிகவும் முக்கியமானது. நீங்கள் இல்லாமல் ரோட்டரி ஒன்றும் இல்லை. ஃபவுண்டேஷனுக்கு நீங்கள் தேவை. உங்களது நிதி ஆதரவு போலவே படைப்பாற்றலும் திறமையும் தேவைப்படுகிறது.

கடந்த மாதம் ரோட்டரிக்கும் எனக்கும் உண்டான உறவைப் பற்றிக் குறிப்பிடுகையில், சாதாரண உறுப்பினராக இருந்த நான் கமிட்டித் தலைமைப் பதவியை ஏற்ற பிறகு எப்படி குறிக்கோளுடன் செயல்பட ஆரம்பித்தேன் என்பதைக் கூறியிருந்தேன். ஆனால், அதற்காக உங்களது ரோட்டரி வாழ்க்கையை மாற்றும் வகையில் யாராவது உங்களைக் கமிட்டி தலைவராகவோ சங்க நிர்வாகியாகவோ மாற்ற வேண்டும் என்றும் காத்திருக்க வேண்டாம். உங்கள் எல்லோருக்கும் முன்னேற்றம் காணவும் செயல் வீரராக மாறுவதற்கும் ரோட்டரியில் தனி இடம் உண்டு.

மாவட்ட ஒதுக்கீட்டு நிதிக்கான தகுதியைப் பெறும் சேவைத் திட்டங்களில் உங்களது ரோட்டரி சங்கத்துடன் ஈடுபடுவது ஒரு வகை ஆகும். உங்களது சங்கத்தின் ஏதாவது திட்டம் விருப்பமானதாக இல்லாவிட்டால், புதிய திட்டத்தைப் பெறுவதற்குச் செயல்படுங்கள். உங்களது ஆற்றலைக் கண்டறியும் புதிய வழிமுறைக்கு வாய்ப்பாக ஒவ்வொரு கூட்டத்தையும் கருதுங்கள். நல்ல உலகத்தை அமைப்பதற்காக எப்படி இணைந்து செயல்படலாம் என்பது குறித்து உங்களைப் போன்ற சிந்தனையுள்ள சக ரோட்டரி உறுப்பினர்களுடன் தீவிர விவாதத்தை மேற்கொள்ளுங்கள்.



ரான் D பர்டன், ஃபவுண்டேஷன்
அறக்கட்டளைத் தலைவர்

ஹேம்பர்க் மாநாடு

# அங்காடிகளும் உணவகங்களும்:

கண்டுலா மியதகே



ஜெர்மனி ஹேம்பர்க் நகரில் கடந்த 15 ஆண்டுகளில் காபியகங்கள், அலங்காரக் கடைகள் ஏராளமாக திறக்கப்பட்டுவிட்டன. 2019ம் ஆண்டு RI மாநாடு ஜூன் 1ம் தேதி முதல் 5ம் தேதி வரையில் நடைபெறுகிறது. கோடைக்காலத்தில் நடைபெறும் மாநாட்டின்போது, இதமான சூரிய வெளிச்சத்தில் (Auenalster) அல்ஸ்டெர் ஏரிக்கரையில் அல்ஸ்டெர் க்ளிஃப் (AlsterCliff) என்ற உணவகத்தில் காலைச் சிற்றுண்டியை இயற்கையோடு ரசித்துக்கொண்டே அருந்தலாம். கம்பு பிரெட்டில் மேலைநாட்டு முட்டைப் பொரியல், குட்டி இறால் உணவைக் கலந்து சாப்பிடலாம்.

அங்கிருந்து போஸெல்டார்ஃப் (Poseldorf) என்ற இடத்திற்கு நடந்து செல்லலாம், உணவகங்கள், கலைப் பொருட்கள், பழங்காலப் பொருட்கள், பெண்கள் அழகு சாதனக் கடைகள் உள்ளன. ஃபார்டாம் (Fahrdamm) தளத்திலிருந்து நீராவிப் படகில் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அகலமான தெருக்கள் கொண்ட நகரான ஜங்க்ஃபெர்ன்ஸ்டீக் (Jungfernstieg) சென்று வரலாம்.

இந்த தெருக்களில் நொறுக்குத் தீனிகளை உண்ண ஏராளமான கடைகள் உண்டு. அது மட்டுமின்றி Apple, Herm's, Gucci போன்ற சர்வதேச கடைகள் உள்ளன. அத்துடன் சாக்கோலேடர் லேஸெய்ஃபெர் (Chocolaterie Leysieffer) வணிக நிலையமும், உலகப் புகழ் பெற்ற டெடி பியர் (teddy bear) தயாரிப்புக்குப் பெயர்போன ஸ்டெஃப் (Steiff) செல்லத் தவறவேண்டாம். செங்கல் உற்பத்தி வளாகமான லேவன்டிஹாஸ் (Levantehaus) என்ற இடத்துக்கும் செல்ல வேண்டும். பிறகு, பிரபல கட்டடக் கலை வல்லுநர் ஹாடி டெஹெரானி (Hadi Teherani) வடிவமைத்த ஐரோப்பிய பாதையையும் காணவேண்டும். புதிய வடிவமைப்பு, அலங்காரப் பொருட்களுக்கு காரோலினெவியெர்டெல் (Karolinenviertel) என்ற இடத்துக்குச் செல்லவேண்டும். அவை முழுக்க முழுக்க உள்ளூர் இளம் வடிவமைப்பாளர்கள் நடத்தும் வணிக வளாகமாகும். பின்னர், க்ரெசென்ஸ் வில்லா (Gretchens Villa) என்ற இடத்தில் ஜெர்மனியின் பிரத்யேக பாலாடைக் கேக் (cheesecake) சுவைத்துப் பாருங்கள்!

2019ம் ஆண்டு ரோட்டரி மாநாட்டுக்குப் பதிவு செய்து கொள்ள இணையதளம் : Hamburgriconvention.org

2019 HAMBURG

# தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

- ரோட்டரி சங்க மற்றும் மாவட்ட அலுவலர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை *MyRotary* என்ற வலைதளத்தில் பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- ரோட்டரி சங்க மற்றும் மாவட்ட அலுவலர்கள் தங்களது சங்க மற்றும் மாவட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள், ஆவணங்களை *https://my.rotary.org/en/manage/club-district-administration/club-administration* என்ற இணையத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர் களின் விவரங்கள், அறிக்கைகள், நிலுவைகள், நன்கொடைகள் குறித்த தகவல்கள், புதிய சங்கம் ஆகிய விவரங்களைப் பதிவேற்றம் செய்யலாம்.

- RI (இந்தியா) 26 பெருநிறுவனங் களுடன் இணைந்து அக்டோபர் 2016 முதல் மொத்தம் $1.36 மில்லியன் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நிதியாக (CSR Fund) பெற்றிருக்கிறது. 2017-18ம் ஆண்டில் மொத்தம் $0.93 மில்லியன் நிதியை 19 பெருநிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ளது.

  - ❖ கெஸ்டாம்ப் ஆட்டோமோடிவ் இந்தியா பிரைவேட் லிட் (D3131).
  - ❖ ஏரெஃப் இன்ஜினயர்ஸ் பிரைவேட் லிட் (D3012).
  - ❖ நைனி குரூப் (D3110) ஆகியவை அடிக்கடி நன்கொடை வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

- **பயிற்சிக்கான ஆதாரங்கள்**
  ஏதாவது பயிற்சிக் கூட்டம் நடத்த உதவி தேவையா? RI அமைப்பின் இணையதளத்தில் *(https://my.rotary.org/en/learning-reference/learn& role/trainers)* For Trainers என்ற பிரிவில் விவரங்கள் கூட்டம், பயிற்சி, இணைய வழிக் கருத்தரங்கு நடத்துவதற்கான திட்டம், சங்கப் பயிற்சியாளரின் பணிகள் தரப்பட்டுள்ளன. ஆன்லைன் வழிப்பயிற்சி கூட்டங்கள் உள்ளிட்ட பல விவரங்கள் இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன.

- **Membership Minute மற்றும் இதர செய்தி மடல்கள்**
  Membership Mnute என்ற செய்தி மடல் மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படுகிறது. அதில், பல உறுப்பினர் மேம்பாட்டுக்கான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. ரோட்டரி உறுப்பினர் குறித்த அண்மைக்கால ஆய்வும், தகுதியான உறுப்பினர் களை அடையாளம் காண்பதற்கான யோச னைகளும், புதிய உறுப்பினர் களை உத்வேகம் அளிப்பதற்கான வழிகளும் உறுப்பினர்களைத் தக்க வைத்துக் கொள்ளும் யோசனை களும் இடம்பெற்றுள்ளன. இந்த செய்தி மடல்களைப் பெறுவதற்கு பதிவு செய்ய இணையதளம்: *https://my.rotary.org/en/news-features/newsletters.*

- **வெற்றிக்கு உதவும் சமூக ஆய்வு முறை**
  பல்வேறு மனிதாபிமான உதவி களுக்காகவும் தொழில்பயிற்சிக் கும் உலகளாவிய மானியத்துக்கு விண்ணப்பிக்கும் சங்கங்கள், மாவட்ட அமைப்புகள் முதலில் கட்டாயமாக சமுதாய அளவில் ஆய்வு நடத்தி முடிவுகளை விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

- **நிதிக்கான பணியாளர் ஆதரவு**
  உலகளாவிய மானியத்துக்கு விண்ணப்பிக்கும் போது RI தலைமையிடத்தின் பணியாளர்ளை அணுகலாம். அவர்கள் ஆரம்ப கட்ட ஆய்வுகளை நடத்தலாம். ஃபவுண்டேஷன் நிதி பெற திட்டங்களைத் தயாரிக்க உதவலாம். இது தொடர்பாக மேலும் அறிந்து கொள்ள மின்னஞ்சல்: *grants@rotary.org*

- **People of Action பிரசாரம் மூலம் கதை சொல்லுதல்**
  ரோட்டரி சங்கங்கள் மேற் கொள்ளும் சிறந்த பணிகளை மக்களிடையே எடுத்துச் செல் வதற்குச் சிறந்த வழி சம்பந்தப்பட்ட தகவல்களைச் சேகரித்து உரிய வகையில் காட்சிக் கதைகளாகவும் தயாரித்து வழங்குவதுதான். மக்கள் செயல்பாட்டு பிரசாரம் (People of Action) என்பதன் அடிப்படையில் அமைய வேண்டும்.

## மாவட்ட அமைப்புகளும் ரோட்டரி சங்கங்களும் எப்படிப் பங்கேற்கலாம்?

- செயல்பாட்டுப் பணியாளர் (People of Action) குறித்த கதைகளை தி ரோட்டேரியன் மற்றும் ரோட்டரி நியூஸ் *(The Rotarian* and *Rotary News)* பத்திரிக்கைக்கு Brand Centre மூலம் உள்ள சங்கத்தின் சமூக சேவைத் திட்டங்களை விளம்பரப் படுத்துங்கள்.
- People of Action (செயல்பாட்டு பணியாளர்கள்) விளம்பரங்களுக்கு Brand Centre ல் பார்க்கலாம். இவற்றை உங்கள் சங்க உறுப்பினர்களுடன் பகிருங்கள்.
- மாவட்ட தகவல் நிபுணர்கள் தொடர்ந்து பணிசெய்யட்டும். அவர்கள் உங்கள் சங்கம் குறித்து நல்ல படைப்புகளை உருவாக்கட்டும். அவை ரோட்டரி இன்டர்நேஷனல் தெற்காசிய அலுவகம் (RISAO), ரோட்டரி இன்டர்நேஷனல் (RI) ஆகியவற்றுடன் பகிர்ந்து கொள்ளப் படவேண்டும்.■

# TRFக்கு ₹100 கோடி தந்த கலியுக கர்ணன்!

ரஷீதா பகத்



Rtn D *ரவிசங்கர் மனைவி பௌலாவுடன்.*



TRFக்கு ரூ.100 கோடியை அள்ளிக் கொடுத்து அசத்தியிருக்கிறார் RC பெங்களூர் ஆர்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர்.

அதைப் பற்றிக் கேட்டால், 50 வருடத்துக்கு முன் தன் வாழ்க்கைச் சம்பவத்தை நினைவுகூர்ந்து கூறுகிறார்: மிகவும் வறுமையில் அரசுப் பள்ளியில் படித்த என்னிடம் என் ஆசிரியர் “எவ்வளவு முடியுமோ அது வரையில் பிறருக்குக் கொடுத்து உதவு.” என்றார். அதுதான் என் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது என்றார்.

தொடர்ந்த அவர், 90 சதவீதம் பேருக்கு நான் இப்படி அளிப்பது பிடிக்கவில்லை. எதுவாக இருந்தாலும் சரி, குழந்தைகளுக்கும் உங்களது எதிர்காலத்துக்கும் வைத்திருப்பது போக அளவுக்கு மேல் சேர்த்து வைத்தால், அது விஷம் போலத்தான் என்றார் ரவிசங்கர்.

ஒரு முறை வருமான வரி ஆணையரான என் நண்பர், “ஏன் இவ்வளவு பணத்தை அள்ளிக் கொடுக்கிறாய்” என்று கேட்டார். அதற்கு நான் “பெரிய அரசியல்வாதியோ, பணக்காரனோ சம்பாதித்த பணத்தைப் போகும்போது எங்கே எடுத்துச் செல்கிறார் என்று சொல். அங்கே என் பணத்தைப் போட்டு வைக்கிறேன்” என பதிலளித்தேன் என்று சிரித்தபடி கூறுகிறார் ரவிசங்கர்.

ரவிசங்கரின் தத்துவம் எளிமையானது. தேவைக்கு மேல் குழந்தைகளுக்கு செல்வத்தை விட்டுச் சென்றால், அது அவர்களைக் கெடுத்துவிடும். அதே சமயம் மறுபுறம் உணவின்றி பசியோடு பல ஏழைகள் சாகிறார்கள். என்னிடம் உள்ள செ ல்வத்துக்கு நான் காப்பாளன்தானே

*நான் ரோட்டரி சங்கத்தின் தலைவராகக் கருதிக் கொள்வதில்லை, சக பணியாளர் என்றே நினைத்துக் கொள்வேன். ஒவ்வொரு ரோட்டேரியனும் தலைவர்தான்.*

*பசி எடுத்தால், யாரவது நண்பன் வீட்டுக்குப் பசிக்கிறது என்பேன். அவர்களும் ரொட்டியோ ஏதாவதோ கொடுப்பார்கள்.*

ஒழிய சொந்தக்காரன் இல்லை. அது சமூகத்துக்குச் சொந்தம் என்று நம்புகிறேன். அதைக் நான் கொண்டு வரவும் இல்லை, கொண்டு போகவும் முடியாது என்று கூறுகிறார்.

மாவட்ட ஆளுநராக சுரேஷ் ஹரி நியமிக்கப்பட்ட நிகழ்ச்சியில் இவ்வளவு பெரிய தொகையை அளிப்பது குறித்து D ரவிசங்கர் அறிவித்தார். அப்போது, புதிய மாவட்ட ஆளுநர், ரவி ஓர் அற்புதமான மனிதர். அதிலும் கடந்த இரு ஆண்டுகளாக அவர் வித்தியாசமான மனிதராக உருவாகியுள்ளார் என்று புகழ்ந்தார்.

இந்த நன்கொடை தொடர்பாக மாவட்ட தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வையடுத்து, கடந்த ஓராண்டாகவே விவாதித்து வருவதாகக் கூறிய சுரேஷ் ஹரி, அடுத்தடுத்து நடந்த கூட்டங்களில் சிறிய அளவில் கடனுவதவித் திட்டம், வாகா எல்லையில் அமைதித் தூண் நிறுவுவது, முதியோர் இல்லம் அமைத்தல், அமைதி-தீர்வுக்கான ரோட்டரி மையம் (Rotary Peace Centre) தொடங்குவது ஆகியவை குறித்து பேசி வந்தார் என்றும் கூறினார்.

இப்படியெல்லாம் கூறிய அவர், அந்தக் கூட்டத்தில், 2018-19ம் ஆண்டு பல திட்டங்களுக்காக ரூ.100 கோடி அளிக்கப் போவதாக அறிவித்து இன்ப அதிர்ச்சியில் ஆழத்திவிட்டார். அப்போது, அந்த நிதியை தனது திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஃபவுண்டேஷனுக்காக அளிக்கலாம் என்று யோசனை கூறினேன் என்றார் சுரேஷ் ஹரி.

ரவிசங்கரின் தாராள மனத்தைப் பாராட்டிய RID C பாஸ்கர், ஒரு பரிசைக் கொடுக்கும்போது, மனதாரக் கொடுக்க வேண்டும். அதுவும் சரியான நபருக்கு, சரியான நேரத்தில்,

*பில் கேட்ஸ் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளித்தால் எல்லோரும் நல்லது என்று சொல்வார்கள். சாதாரண மனிதனான ஆள் இப்படி தன் சொந்த வருவாயில் 70 சதவீதத்தைக் கொடுத்து விட்டால், ''ஆஹா, அற்புதம்'' என்றெல்லாம் போற்றிப் புகழ்கிறார்கள்.*

சரியான இடத்தில் எதையும் எதிர்பார்க்காமல் கொடுக்கவேண்டும் என்று பகவத்கீதை அறிவுறுத்துகிறது. பல நாடுகளில் மக்கள் அடிப்படைத் தேவைகளும் இல்லாமல் தவிக்கிறார்கள். மறுபுறம் அளவுக்கு அதிகமாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்களிடம் இருப்பதைப் பகிர்ந்து கொண்டாலே, உலகில், பசி, நோய், பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்றார்.

## ரவிசங்கரின் இளமைப் பருவம்

ரவிசங்கரின் தத்துவத்தை அறிந்து கொள்ளக் கேட்கும்போது, அவர் வெளிப்படையான உண்மைகளைக் கூறினார்.

அவரது தந்தை காமேஷ் சுதந்திரப் போராட்ட தியாகி. வினோபா பவேயின் பூதான் இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர். தன்னிடம் இருந்த சுமார் 8 ஏக்கர் நிலத்தைத் தானமாகக் கொடுத்துவிட்டார்.

எனது தந்தை பொறியியல் படிப்பை முடிக்கும் சமயத்தில் பிரிட்டிஷ் ஆட்சியைக் கண்டிக்கும் வகையில் பிரிட்டிஷ் அரசின் பாடப் புத்தகங்களைத் தீயிட்டு எரித்தார். கைதாகி 4 ஆண்டு சிறையில் இருந்தார். விடுதலைக்குப் பிறகு அவரது தியாகத்துக்காக தாமிரப் பத்திரம் வழங்கப்பட்டது. பொறியாளர் வேலையும் கிடைத்தது. ஏழு உடன் பிறப்புகளும் வசதியாக வாழ்ந்தோம். ஆனால், நான் 4வது படிக்கும்போது, திடீரென்று தந்தை காமேஷ் இறந்துவிட்டார். குடும்பமே தத்தளித்தது. அம்மா ஏழு பேரையும் வளர்க்க சிரமப்பட்டார். அப்பா வேலை செய்த கம்பெனியில் இரண்டு சகோதரர்களுக்கு வேலை கிடைத்தது என்றார் ரவிசங்கர்.

## சமூகமே தந்தையானது!

தந்தையை இழந்து வாடிய எங்களுக்குத் தந்தையைப் போல் உதவியது இந்த சமூகம்தான். அப்படியிருக்க எனது தந்தையைப் போன்ற சமூகத்துக்கு ரூ. 100 கோடி தருவதில் என்ன இருக்கிறது? என்றார் உணர்ச்சி மேலிட. அவர் கூறுவது உயர்வு நவிற்சியாகத் தோன்றக் கூடும். ஆனால், அவரது வாழ்க்கை மிகவும் நெகிழ்ச்சியானது.

ரவிசங்கர் B.A. முடித்துவிட்டு, வணிக மேலாண்மை, சந்தை மேலாண்மையில் டிப்ளமோ படித்தார் என்றாலும், அது எளிதில் கைகூடவில்லை.

அவரே தொடர்ந்து கூறினார்: நான் அந்த அளவுக்கு நன்றாகப் படிப்பவன் இல்லை. 10ம் வகுப்பில் இரண்டு முறை தோல்வியடைந்தேன். அப்பா இறந்த பிறகு, மோசமான சகவாசத்தில் விழுந்தேன். திருடினேன். கள்ள சினிமா டிக்கெட் விற்றேன். பின்னர் அம்மாவின் அழுகையும் சோகமும் என்னை மாற்றியது.

1972ல் பெங்களூர் நேஷனல் கல்லூரியில் B.A. பொருளாதாரம் படித்தேன். அங்கேதான் என் ஆசிரியர் டாக்டர் நரசிம்மையா என்ற தியாகியால் ஈர்க்கப் பட்டேன். அவர்தான் பிற்காலத்தில் பெங்களூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் உயர்ந்தார்.

வறுமை காரணமாக 50 காசுக்கு வேர்க்கடலை தின்றேன். பசி எடுத்தால், யாரவது நண்பன் வீட்டுக்குச் சென்று அம்மா பசிக்கிறது என்பேன். அவர்களும் ரொட்டியோ ஏதாவதோ கொடுப்பார்கள். இப்படி சமூகம்தான் எங்களைக் காப்பாற்றியது. நல்ல மனிதர்கள்தான் பசியை ஆற்றினர். அவர்களில் பலர் இறந்துவிட்டனர். அவர்களுக்கு நான் திருப்பிச் செலுத்தியாக வேண்டும்.

இதெல்லாம் தத்துவம் என்று நினைக்கிறீர்களா.

*புத்திசாலித்தனத்தில் நான் சராசரிக்கும் கீழே உள்ளவன். ஒருவர் பொய்யனாகவோ, திருடனாகவோ இருக்க வேண்டுமானால், புத்திசாலித்தனம் கொஞ்சம் தேவை.*

புத்திசாலித்தனத்தில் நான் சராசரிக்கும் கீழே உள்ளவன். ஒருவர் பொய்யனாகவோ, திருடனாகவோ இருக்க வேண்டுமானால், புத்திச ாலித்தனம் கொஞ்சம் தேவை. நான் ஒரு சாதாரணமானவன்.

1980ல் ஒரு சாதாரண கம்பெனியில் ரூ.105 சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். வீட்டிலிருந்து அதிகாலை 5 மணிக்கே புறப்பட்டு மூன்று பஸ்களைப் பிடித்து 8.30 மணிக்கு அலுவலகம் செல்வேன். முன்தினம் பழையசோறு அல்லது கஞ்சிதான் மதிய லஞ்ச். இடையில் பஸ்ஸுக்குக் காத்திருக்கும்போது ஒரு வாழைப்பழம்தான் உணவு. கடைசியில் ரியல் எஸ்டேட்



ஸ்ரீதர் பாரதி

தொழிலில் இறங்கினேன்.

### தொழிலில் வெற்றி

ரியல் எஸ்டேட் தொழிலில் பல இடையூறுகளைச் சந்தித்தேன். சமாளிக்கவும் பழகிக் கொண்டேன். மோசமானவர்கள் கூட எனக்கு நல்லது செய்தார்கள்.

ரவிசங்கருக்குத் திருமணம் ஆகி மனைவி வந்தபிறகு, தன்னம்பிக்கை அதிகரித்தது. அவரது காதல் கதையைக் கூறினார்.

1980ம் ஆண்டுகளில் கல்லூரி மாணவியாக பௌலாவின் அழகு கவர்ந்தது. கோவாவைச் சேர்ந்தவள் அவள். ஆனால், அவளை அடைய நான் ஒன்றும் ஷாருக்கானோ அம்பானியோ அல்ல. நானே அவளை அடைய முடிந்தால், என்னால் யாரையும் முட்டாளாக்க முடியும் என்று நினைத்துக் கொண்டேன். கடைசியில் 1988ல் அவளைத் திருமணம் செய்து கொண்டேன் என்று கூறியபடி சிரித்தார்.

ரவிசங்கரின் தொழில் மெல்ல வளர்ந்தது. என் அப்பா சுதந்திரப் போராட்ட வீரர் என்பதால், அப்போதைய முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டேவுக்கு என்னைப் பிடித்துப் போக பல உதவிகள் செய்தார். அதையடுத்து, மைசூர் பேப்பர் மில்ஸ் நிறுவனத்தில் வேலை செய்த BHN ஹரியின் நட்பு கிடைத்தது. அவர் கூட்டாளியானார். ஹரா ஹவுசிங் என்ற எனது நிறுவனம் அவரை சேர்த்து கொண்ட பின் ஹரி & ரவி ஹவுசிங் என்று மாறியது. எனக்கு புத்திசாலியானவரை விட நேர்மையானவர்தான் தேவைப்பட்டது. புத்திசாலியானவர் சாதாரணமான என்னை ஏமாற்றிவிடுவார் என்பதுதான் காரணம் என்றார்.

### ரோட்டரி வாழ்க்கை

ரோட்டரியில் ரவிசங்கர் சேர்ந்தது ஏன்?

எல்லோரும் எனது தொழிலைப் பற்றியே ஏதாவது கேட்டு தொல்லை செய்தனர். எனக்கு வெறுத்துப் போனது. டாக்டரிடம் போனாலும் சரி, முடிவெட்டுபவரிடம் போனாலும் சரி, ஏன் கழிவறைக்குப் போனால் கூட, "ரியல் எஸ்டேட் மார்க்கெட் எப்படி போகுது சார்? என்ன ஆச்சு?" என்று தொழிலைப் பற்றி

> *குழந்தைகளுக்கும் உங்களது எதிர்காலத்துக்கும் வைத்திருப்பது போக அளவுக்கு மேல் சேர்த்து வைத்தால், அது விஷம் போலத்தான் என்றார்*

எதையாவது கேட்டு படுத்தினார்கள்.

Rtn ரமேஷ் சாரியைச் சந்தித்தேன், "இப்படி தொழில் பற்றியே கேட்டு உயிரை வாங்குகிறார்கள். வெறுப்பாக இருக்கிறது. சமுதாயத்துக்கு ஏதாவது செய்யலாம் என்று நினைக்கிறேன்" என்று கூறினேன். அவர் அதற்கு



*RC பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர் மற்றும் அவர் மனைவி பௌலா அவர்களை DG சுரேஷ் ஹரி (இடதில்) PDG ஆஷா ப்ரசன்னகுமார் முன்னிலையில் கௌரவிக்கிறார்.*

# ரவிசங்கரின் மனைவி பௌலா பேசுகிறார்:




கடந்த ஜூன் 30ம் தேதி சாதாரண நடுத்தர வகுப்புக் குடும்பத்தின் மன நிறைவுடன் காலையில் எழுந்தேன். அன்றைய தினம் மாலையில் ரோட்டரி நிகழ்ச்சியில் பாராட்டு விழா. அங்கேதான் அதிர்ச்சி காத்திருந்தது. என் கணவர் டகோஜு ரவிசங்கர் ரூ.100 கோடி நிதியை TRF நன்கொடையாக வழங்கினார். இந்த அரிய செயலைப் பாராட்டும் வகையில், நாங்கள் இருவரும் மேடைக்கு அழைக்கப்பட்டோம். ஒரு கணம் இது கனவா, நிஜமா தெரியவில்லை. என்னை நானே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன்.

ரவி எப்போதும் பரோபகர உள்ளம் கொண்டவர். அவருக்கே உரிய பாணியில் ஆடம்பரமின்றி, வழங்கி உதவுவார். முப்பது ஆண்டுகளுக்கு முன் எங்கள் இருவருக்கும் திருமணம் ஆனபோது, சாதாரண ஸ்கூட்டர் தான் வைத்திருந்தார். வாடகை வீட்டில்தான் குடியிருந்தோம். கடுமையாக உழைத்து சம்பாதித்ததைக் கொண்டு பெங்களூருவில் தனது பெற்றோர் பெயரில் முதியோர் இல்லத்தைக் கட்டினார். அது முற்றிலும் இலவசமாக நடத்தப்படுகிறது. இருந்தாலும் தரமான உணவு, சகல வசதிகளுடன் தான் இயங்கி வருகிறது.

அது மட்டுமல்ல. வடகிழக்கு மாநிலப் பகுதியில் குழந்தைகளின் கல்விக்காக பள்ளிக்கூடங்களையும் விடுதிகளையும் கட்டித் தந்திருக்கிறார். அதுவும் இலவசம்தான். அதே சமயம் அவருக்குப் பெரிய கனவு இருப்பதையும் அறிவேன். பல ஆண்டுகளாக இப்படி உழைக்கிறாரே, இன்னும் உழைத்துக் கொண்டிருக்கிறாரே அதெல்லாம் இதுபோன்ற நல்ல காரியங்களுக்காகத்தான் செய்கிறாரோ என்று நினைத்து வியப்படைவேன்.

ரவிக்கு எப்போதும் வேலை, வேலை, வேலைதான். தினமும் 18 மணி நேரத்துக்கு மேல் உழைக்கிறார். இப்போது கூட நேற்று அதிகாலை 4 மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு கோவா வழியாக மஹாராஷ்டிர மாநிலம் மால்வான் நகருக்குச் சென்றார். அங்கே வேலையை முடித்துவிட்டு, இன்று காலை 9 மணிக்குத் திரும்பி வந்தார். உடனே, நேரடியாக கோலார் தங்க வயலுக்குச் சென்று அங்கே மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். கோலார் தங்க வயல் பகுதியில் சயனைடு ரசாயனம் காரணமாக நிலம் மாசுபட்டுள்ளது. அப்பகுதி மக்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது. அதை மாற்றி, பசுமையான நிலமாக மாற்றுவதற்காக அவர் பாடுபட்டு வருகிறார். அவருக்கும் அதனால் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. ஆஸ்துமாவினால் அவதிப்பட்டு வருகிறார். ஆனால், பொதுமக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதே அவரது லட்சியமாக இருக்கிறது என்று பெருமை பொங்கக் கூறுகிறார் பௌலா.



Rtn D *ரவிசங்கர் மனைவி பௌலா மற்றும் மகள்கள் ஏக்தா மற்றும் சம்தா உடன்.*

மகிழ்ச்சி அடைந்து, "பேசாமல் ரோட்டரியில் சேர்ந்துவிடுங்கள்" என்று யோசனை கூறினார். அவர்தான் ரோட்டரியில் என்னை இணைத்தார்.

ரோட்டரி எனக்கு என்ன செய்தது என்று கேட்கிறீர்களா? ரோட்டரி என்பது என்னைப் பொறுத்தவரையில் நல்ல அனுபவம் தந்தது. ஒரு பஃபே விருந்து போல. உங்களுக்கு எது பிடிக்குமோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பணியாற்றலாம். தனிமையில் இருப்பவராக இருந்தாலும், ஓய்வாக இருக்க விரும்பினாலும் அனைவரையும் இணைக்கும் தளமாகும். வாழ்க்கையை மாற்றக் கூடியதும் ஆகும். பல நல்ல காரியங்களைச் செய்ய வாய்ப்பளிக்கும் இடமும் ரோட்டரிதான் என்றார் ரவிசங்கர்.

## ரவிசங்கரின் மகத்தான பணிகள்

ரோட்டரி பணிகளில் ரவிசங்கர் ஈடுபடத் தொடங்கியதை அடுத்து அவர் மகத்தான தொண்டுகளை நிறைவேற்றியிருக்கிறார்.

கர்நாடகத்தில் முதியோர் இல்லம் கட்டித் தந்தது, வடகிழக்கு மாநிலங்களில் பள்ளிகளை அமைத்துத் தந்தது என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அவரது பணிகள் எல்லை கடந்தவை. பாகிஸ்தான் லாகூர், இஸ்லாமாபாத் பகுதிகளில் கிராமப்புறங்களில் பள்ளிகளைக் கட்டித் தர உள்ளார். அது மட்டுமின்றி, பாகிஸ்தானில் உள்ள ரோட்டரி மாவட்ட ஆளுநர்களுடன் தொடர்புகளையும் வலுப்படுத்தியுள்ளார்.

அவர்களிடம் பேசும்போது, பாகிஸ்தான் பிரிவினை நம்மைப் பிரித்திருக்கலாம். ஆனால், நாம் இருவரும் ஒரே ரத்தம். மக்கள் இணைந்தால், அரசாங்கம் பிரிக்கவோ தடுக்கவோ முடியாது. மரணப் படுக்கையில் இருந்தாலும் இத்தகைய பணிகளைச் செய்து கொண்டே இருப்பேன். காரணம் மதத்தின் பெயரால் தேவையில்லாமல் சிக்கல்களை ஏற்படுத்தி வருகிறோம் என்று கூறியுள்ளார். இது மிகப் பெரிய சமாதானப் பணியின் அடையாளம்.

ரவிசங்கர் தற்போது கோலார், சிக்கபல்லபூர் ஆகிய இடங்களில் ஒரு கோடி மரக்கன்றுகளை நடும் பணியைத் தொடங்கியுள்ளார். ஓய்வுபெற்ற IAS, அதிகாரி அமர் நாராயண் இதற்கு உதவி வருகிறார். அவரிடம் நாம் இணைந்து பணியாற்றலாம் என்று கூறினேன். அவர் இசைந்தார். நான் ரோட்டரி சங்கத்தின் தலைவராகக் கருதிக் கொள்வதில்லை, சக பணியாளர் என்றே நினைத்துக் கொள்வேன். ஒவ்வொரு ரோட்டேரியனும் தலைவர்தான். நான் தலைவர்களை வழிநடத்த முடியாது. அவர்களுடன் இணைந்துதான் செயல்பட முடியும். இப்போது அரசாங்கத்தையும் இத்திட்டத்தில் இணைத்துச் செயல்பட இருக்கிறோம். இது ஐந்தாண்டு காலத் திட்டமாகும். பள்ளிகளுக்கு மரக்கன்றுகளைக் கொடுத்து மாணவர்களை நடச் செய்து, தலைமை ஆசிரியர்கள் அதைப் பராமரிக்கச் செய்யப் போகிறோம்.

## சமூக மந்திரம்

என் மகள்கள் ஏக்தா, சமதா இருவரும் 9, 5 வயது சிறுமிகளாக இருந்தபோது அவர்களிடம், "நான் சமுதாயத்திலிருந்து நிறைய சம்பாதித்து விட்டேன். ஆகையால், சமுதாயத்திற்கு நான் திருப்பித் தர வேண்டியிருக்கிறது" என்று கூறுவேன். அந்தச் சிறிய வயதிலும் அவர்கள், "நானா (அப்பா),

# ரோட்டரியைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

ஸ்ரீதர் பாரதி



*மிகப் பெரிய தொகையை நன்கொடையாக அளிக்க, ரோட்டரி ஃபவுண்டேஷனைத் தேர்ந்தெடுத்தது ஏன்? என்று கேட்டதற்கு, ரவிசங்கர், நான் பல மோசடிக்காரர்கள், ஏமாற்றுப் பேர்வழிகளுடன் வளர்ந்தவன். நல்லவன் யார் கெட்டவன் யார் என்று அறிந்துகொள்ள முடியும். ரோட்டரி வெளிப் படையான நேர்மையான தன்னார்வத் தொண்டு நிறுவனம்.*

*சில தன்னார்வ அமைப்புகள் மோசடியானவை. பணத்தை முறைகேடாகப் பயன்படுத்துகிறார்கள். அதனால்தான் மக்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை நன்கொடையாக அளிக்கத் தயங்குகிறார்கள். ஆனால், ரோட்டரி நேர்மையான உண் மையான இயக்கம் என்றார் ரவிசங்கர்.*

*ரோட்டரி குறித்து ரவிசங்கர் கூறிய இன்னொரு விஷயமும் மனத்தைத் தொட்டது. நான் மத நம்பிக்கை அல்லாதவன். குறுகிய சாதி, மத வழக்கம் போன்ற செயற்கையான தடை களின் மீது நம்பிக்கை சிறிதும் இல்லை. தேவாலயங்களில் பிரார்த்தனைக்கும் போவேன். எனது மூன்று சகோதகரிகளில் இருவர் முஸ்லிம்கள். ஒருவர் குஜராத்தி. அவர்கள் மூவர் மீதும் அளவற்ற பாசம் உண்டு என்றார்.*
*நான் இந்தப் பணத்தைக் கண்ணை மூடிக்கொண்டு அளிக்கிறேன். காரணம், மாவட்ட ஆளுநர் சுரேஷ் ஹரி, நேர்மையான மனிதர். அவர் மீது மிகுந்த நம்பிக்கை உண்டு. இந்தப் பணத்தை எதற்கெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்று அடையாளம் கண்டிருக்கிறார். கல்வி, சுகாதாரம், சுற்றுப்புற ஆரோக்கியம், பழங்குடியினர் மேம்பாடு, சி று நிதியுதவி, மத நல்லிணக்கத் தொண்டு, அடிப்படையில் மகிழ்ச்சிப் பள்ளிகள் என நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் திட்டம் என்றார்.*

*இந்த நிதி முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று கண்காணிப்பீர்களா என்று கேட்டதற்கு, நிச்சயமாக. காரணம், ஒவ்வொரு காசும் வியர்வை சிந்தி சம்பாதித்தது. ஒரு வேளை எதிர்பாராத விதமாக இந்த நிதி தவறானவர்களின் கைகளுக்குப் போய்விட்டால், உடனே ரோட்டரியை விட்டு வெளியேறவும் தயங்கமாட்டேன் என்று திடமாகப் பதிலளித்தார் ரவிசங்கர்.*

*தன்னைச் சாதாரணமானவராகக் கூறிக் கொண்ட அவர் கம்பீரமாக உயர்ந்து தென்பட்டார்.*

> *நீங்கள் விரும்பியபடியே செய்யுங்கள். நாங்கள் படித்து எங்களது சொந்தக் காலில் நிற்கிறோம். கவலைப்படாதீர்கள்*

நீங்கள் விரும்பியபடியே செய்யுங்கள். நாங்கள் படித்து எங்களது சொந்தக் காலில் நிற்கிறோம். கவலைப்படாதீர்கள்" என்று சொல் வார்கள். இப்போது அவர்களுக்கு 27, 23 வயது ஆகிறது. அந்த எண்ணத்தைத் துளியும் மாற்றிக் கொள்ளவில்லை என்கிறார் ரவிசங்கர்.

அவர்களது திருமணம் குறித்து கேட்டதற்கு, ரவிசங்கரின் மனைவி பௌலா, அவர்கள் "சொந்தக் காலில் நிற்கிறோம். அப்போது பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்கிறார்கள். மூத்தவள் வேலை பார்த்து சம்பாதித்து, கல்விக் கடன் பெற்று, ஆஸ்திரேலியா மெல்பனில் மேற்படிப்பு படிக்கிறாள். ஆனால், அப்பாவிடம் வாங்கிய பணத்தைத் திருப்பித் தருவதற்காக இப்போது அங்கே பகுதிநேர வேலை செய்துவருகிறாள் என்றார்.

இளைய மகள் சமதா தனது கல்லூரிப் படிப்புக்கோ, இமயமலை சாகசப் பயணத்துக்குத் தேவையான உபகரணங்களோ வாங்க வேண்டுமானாலும், பணம் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறாள். அப்படி த்தான் அவர்களை வளர்த்திருக்கிறோம். நாங்கள் எளிமையான நடுத்தரக் குடும்ப வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்து வாழ்கிறோம். வாழ்க்கையில் தேவை தவறில்லை. பேராசைதான் தவறு. அதே சமயம் என் மனைவிக்கும் மகள்களுக்கும் ஏதாவது தரவேண்டும் என விரும்புகிறேன். எனது உடைகள் கூட சாதாரணமானவை. எனது நண்பர்கள் ஆடம்பரமானதை அணிந்தால் கவலைப்படுவதில்லை.

பல ஆண்டுகளாக வாடகை வீட்டில்தான் வசித்துவந்தேன். அம்மாதான், "ரவி, உன் அப்பா கடைசி வரையில் சொந்தமாக வீடு கூட வாங்கவில்லை. அதைப் போல் நானும் வாடகை வீட்டில்தான் சாகப் போகிறேனோ...?" என்று வருத்தத்துடன் கூறுவார். அதனால், அவருக்கு மகிழ்ச்சி தருவதற்காக 1997ம் ஆண்டு சொந்தமாக வீடு வாங்கினேன்.

அத்துடன் குடும்பத்தினரிடம் அன்பு காட்டுவதற்காக பென்ஸ் ஆடம்பர கார் வாங்கினேன்.

இனிமேல் இதுமாதிரி கார் வாங்க மாட்டேன். பழைய கார்தான் வாங்குவேன். புதிய காருக்குச் செலவிடும் பணத்தில் வடகிழக்கு மாநிலங்களில் மூன்று பள்ளிக்கூடங்கள் கட்டலாம் என்றார் ரவிசங்கர்.

ரவிசங்கர் ஏற்கெனவே சில பள்ளிக் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார். மணிப்பூர் கிராமத்தில் மியான்மர் எல்லைப் பகுதியில் 350 மாணவர்களுக்காக ரூ. 27 லட்சத்தில் இரண்டு ஏக்கர் நிலத்தில் பள்ளியைக் கட்டியிருக்கிறார். அதை தன்னார்வ அமைப்பை நடத்தி வரும் ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி நிர்வகித்து வருகிறார்.

அவரது அமைப்பின் பெயர் “கல்வியின் மூலம் அமைதி” (Peace through Education) ஆகும். வடகிழக்கு மாநிலச் சிறுவர்கள் தீவிரவாதத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க கல்வி கற்பிக்க முயன்று வருகிறார் அவர். அதைப் போல் போதைப் பழக்கத்துக்கு ஆளாகி, HIV பாதித்தவர்களின் குழந்தைகளுக்காக ஒரு பள்ளி கட்டியிருக்கிறேன் என்றார் ரவிசங்கர்.

இது பாராட்டத் தக்க பெரிய பரோபகாரச் செயல் என்று சொன்னதும், சட்டென்று மறுத்த ரவிசங்கர், அப்படியெல்லாம் பெரிய வார்த்தை கூறாதீர்கள். இது சாதாரணம். சமூகத்துக்கு நான் செய்ய வேண்டியதைச் செய்கிறேன். அவ்வளவுதான் என்று தன்னடக்கத்துடன் கூறினார்.



## ரூ.100 கோடி

சரி, திடீரென்று ரூ. 100 கோடி அளிப்பதாகக் கூறிவிட்டீர்களே, உங்கள் மனைவி என்ன சொன்னார் என்று கேட்டோம்.

நான் எதையுமே பெரிதாகத்தான் நினைப்பேன். இது சிறு வயதிலிருந்தே இருக்கும் குணம். முதலில் இப்படி நன்கொடை பற்றி அறிவித்தபோது, இரண்டு பெண்களுக்குத் தாயான அவள் கவலைப்படுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், என் மகள்தான் அவளிடம், “அப்பா இத்தனை ஆண்டுகளாக நம்மை நன்றாகத்தானே கவனித்துக் கொண்டுவந்தார்? வாழ்க்கை ஒரு முறைதானே வாழ முடியும்? அவர் விரும்புவதைச் செய்யட்டும்” என்று சமாதானம் செய்தாள். அத்துடன், “அப்பா, உங்கள் மனத்துக்கு என்ன தோன்றுகிறதோ அதையே செய்யுங்கள். எங்களைப் பற்றிய கவலை வேண்டாம். நாங்கள் எங்களைப் பார்த்துக் கொள்கிறோம்” என்று கூறினாள்.

மனைவியும் கடைசியில் சமாதானம் அடைந்தாள். அற்புதமான பெண் அவள். பொறாமையோ பேராசையோ கிடையாது. நகை நட்டு கேட்டதில்லை. புன்னகைதான்.

இளைய மகளும் ஆஸ்திரேலியாவில் மேல் படிப்பிற்காகப் பணத்தைச் சேமித்து வருகிறாள். அவள் இந்த வீட்டின் மீதும் உரிமை கொண்டாடவில்லை. அவள், “நீங்கள் இந்த வீட்டை விட்டுவிட்டுப் போனால், அதை விற்றுவிட்டு, அந்தப் பணத்தில் காஷ்மீரில் பள்ளிக் கூடம் கட்டுவேன்” என்று கூறியிருக்கிறாள். இப்படிப்பட்ட குடும்பத்தைப் பெற்றதற்காக நான் நெகிழ்ந்துபோனேன்! என்று உணர்ச்சி மேலிடக் கூறினார்.

நீங்கள் RI அளிக்கும் தொகை, மெலிந்தா பில்கேட்ஸ் அறக்கட்டளைக்கு அடுத்து பெரிய நன்கொடையாகும் என்று ரவிசங்கரிடம் கூறியபோது, இது மாதிரி புள்ளி விவரத்தை அறியவில்லை. இதில் எந்த உத்தியும் எனக்குத் தெரியாது. கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன், அவ்வளவுதான் என்று பதிலளித்தார்.

தொடர்ந்து கூறிய பௌலா ரவிசங்கர், பில் கேட்ஸ் மாதிரி பெரிய பிரமுகர் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளித்தால் எல்லோரும் நல்லது என்று சொல்வார்கள். ஆனால், சாதாரண மனிதனான டகோஜு ரவிசங்கர் மாதிரி ஆள் இப்படி தன் சொந்த வருவாயில் 70 சதவீதத்தைக் கொடுத்துவிட்டால், “ஆஹா, அற்புதம்” என்றெல்லாம் போற்றிப் புகழ்கிறார்கள். அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் நான் வெளியே வரவில்லை 2என்று கூறி சிரித்தார் ரவிசங்கர்.■



# டொராண்டோ மாநாட்டில் ரோட்டரி அமைப்பினர் உற்சாகம்

ஜெயஸ்ரீ

ரோட்டரியின் 109ஆவது மாநாடு நடைபெற்ற கனடா தலைநகர் டொராண்டோவுக்கு உலகின் பல பகுதிகளிலிருந்தும் 25,652 பேர் வந்திருந்தனர். விமான நிலையம் முதல் உணவகங்கள், பொது இடங்கள் என எல்லா இடங்களிலும் ரோட்டரி மாநாடு பற்றிய பேச்சுதான்!

விமான நிலையத்திலிருந்து மாநாட்டு அமர்வுகள் நடைபெற்ற மையங்களில் எங்கே சென்றாலும், ரோட்டரி அமைப்பினரைக் காண முடிந்தது. நான் போகிற வழியில் ஏதாவது ஒரு நாட்டைச் சேர்ந்த யாராவது ஒருவர் அறிமுகம் ஆகி, இந்தியாவுக்கு வந்ததைப் பற்றியோ ரோட்டரி மாநாட்டின் அனுபவத்தையோ பேசுவார்.

மாநாட்டில் RIPN மார்க் மெலோனி, உலகின் ஏதாவது பகுதியிலிருந்து வரும் பரிச்சயமில்லா தவரின் அறிமுகம் பெறவும், உரிமையோடு அழைக்கவும் ரோட்டரி உதவுகிறது என்றார்.

அதிகமான மாநாடுகள் நடைபெற்ற தில் சிகாகோவுக்கு அடுத்த இடம் டொராண்டோவுக்கு. இங்கு ஐந்தாவது முறையாக ரோட்டரி மாநாடு நடைபெறுகிறது. முதல் முறையாக 94 ஆண்டுக்கு முன் நடந்தது. அதைத் தொடர்ந்து 1942, 1964, 1983ம் ஆண்டுகளில் நடந்திருக்கிறது.

2018ம் ஆண்டு மாநாடு, 178 நாடுகள் பங்கேற்ற வண்ணமான கொடி அணிவகுப்புடன் தொடங்கியது. அதையடுத்து, ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மறைந்த சாம் ஓவோரிக்கான சர்வதேச சிறப்பு விருதினை RI தலைவர் இயான் ரிஸ்லி வழங்கினார். அதை ஓவோரியின்

*RI தலைவர் இயான் ரிஸ்லி RI கௌரவ விருதை நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் ஹெலன் க்லார்க்கிற்கு வழங்குகிறார்.*



மனைவி நோராவும், மகனும் பெற்றுக் கொண்டனர்.

ரிஸ்லியின் பேச்சு கடந்த கால நிகழ்வுகளை அசைபோடுவதாகவும் தன்னுடன் பணியாற்றியவர்களைக் குறிப்பிடுவதாகவும் அமைந்தது. நான் அக்கவுண்டன்ட் வரவு, செலவு விவரங்களைக் சரியான பேலன்ஸ் ஷீட்தான் விரும்புவோம். ரோட்டரியில் ஆண்டு இறுதியில் பேலன்ஸ் ஷீட்டை விட, நாம் செய்த பணிகளால் சமூகத்தில் நல்ல பலன் ஏற்பட்டுள்ளதா என்பதைக் காண்பதுதான் என்றார்.


அமெரிக்கா இவான்ஸ்டன் நகரில் உள்ள RI தலைவர் அலுவலகம் குறித்துப் பேசிய ரிஸ்லி, அங்கே பொறுப்பில் இருந்தபோது, உலகெங்கும் தினந் தோறும் ரோட்டரி அமைப்பினர் ஏற்படுத்தும் மாற்றங்களை கவனித்தோம். இப்போது உலகம் முழுவதும் 35 ஆயிரம் ரோட்டரி சங்கங்கள் மூலம் 12 லட்சம் உறுப்பினர்கள் சமூகப் பணியாற்றி வருகின்றனர் என்றார்.

மரக்கன்றுகளை நடுவது ரோட்டரி மரபாக இருந்தாலும், இதுவரை நட்புறவுக்காக மரக்கன்று நட்டு வந்தோம். இனி, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதை ரோட்டரி தனது சமூகப் பணிகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டுள்ளது. நமது புவியையும் சூழலையும் காப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார் ரிஸ்லி.

இயான் ரிஸ்லி 60 நாடுகளில் பயணம் செய்து, 180க்கும் மேற் பட்ட மரங்களை நட்டிருக்கிறார். ரோட்டரியில் என்ன மாற்றங்களை ஏற்றுக் கொண்டாலும் ரோட்டரியின் நான்கு *விழுமியங்களை*, தனக்கு மிஞ்சிய சேவை மனப்பான்மை, லட்சியம் ஆகிய *விழுமயிங்கள்* வரை யறுக்கப்பட வேண்டும். அதுதான் ரோட்டரியின் தனித்தன்மையும் நம்மை வித்தியாசப்படுத்துவதும் ஆகும் என்றார் ரிஸ்ஸெலி. ரோட்டரியன் தனித்துச் செயல் படமுடியாது. நமது பங்களிப்பு தனித்துச் செய்வதை விட இணைந்து செய்யும்போதுதான் குறிப்பிடத்தக்கதாக இருக்கும் என்று உரையை நிறைவு செய்தார்.

**எழுச்சியுரை**

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட




மாயிக் தோர்ன்

பேரி ரஸின் பேசுகையில், மாற்றத்துக்கு உரியவராக நீங்கள் மாறுவதற்காக உங்களுக்கே சவால் விடுத்துக் கொள்ளுங்கள். அந்த உற்சாகம் அனைவரையும் தொற்றிக் கொள்ளட்டும் என்று அழைத்தார்.

தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடும் ஹைதி நாட்டு மக்களுக்குக் குடிநீ ர் வழங்க வகை செய்ய அந்நாட்டு அரசுடன் மேற்கொள்ளும் ஒத்துழைப்பு உள்ளிட்ட அம்சங்களை அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

உத்வேகமாக இருங்கள் என்ற தாரக மந்திரம் ரோட்டேரியன்கள், ரோட்டராக்டுகள், ரோட்டரியனர் அல்லாதோர், இளைய தலைமுறை யினர் என அனைவருக்கும் உற்சாகம் ஊட்டும். சமூக ஊடகங்களில் சொல்வதுடன் நிறுத்தாதீர்கள். செயல்படுங்கள் என்றார்.

ரோட்டராக்ட் இயக்கம் குறித்து பேசிய ரஸின், உலகம் முழுதும் 10 ஆயிரம் ரோட்டராக்ட் சங்கங்களும், இரண்டரை லட்சம் ரோட்டராக்ட் உறுப்பினர்களும் உள்ளனர். ஆனால், அவர்களில் கொஞ்சம் பேர்தான் ரோட்டரி சங்கத்தினராக வருகிறார்கள். ரோட்டரி சங்கங்களில் 27 சதவீதம்தான் ரோட்டராக்ட் சங்கங்களுக்கு ஆதரவு அளிக்கின்றன. இவையெல்லாம் இரு மடங்காக உயர வேண்டும். 2019ம் ஆண்டு நடைபெற இருக்கும் பன்னாட் டுக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதிகள் (DRRs) பங்கேற்க வாய்ப்பு தரப்படும் என்று அறிவித்தார்.

ரஸின் பேசுகையில் உலகம் முழுவதும் நம் சமுதாயத்திலும் நமக்குள்ளும் நிலையான உறுதியான மாற்றத்துக்காக மக்கள் இணைந்து செயல்படும் உலகத்தை நாம் காணப் போகிறோம் என்ற புதிய தொலைநோக்கு அறிக்கையை வெளியிட்டார்.

ஒரே வரியில் சொல்லப் போனால், அதுதான் ரோட்டரி. நாம் சிந்தனையாளர்களோ, கனவு காண்பவர்களோ மட்டுமல்ல. செயல்வீரர்கள் என்பதை நமது தொலைநோக்குப் பிரகடனம் தெரிவிக்கிறது. நமது இறுதியான நிலைப்பாடு நீண்டகாலத்துக்கானது. உலகத்தை மாற்ற குறிக்கோள் எது என்று ரோட்டரியினர், ரோட்டரி அல்லாதோர் புரிந்துகொள்ள உதவுவது ஆகும் என்றார்.

எல்லாத் திட்டத்திலும் நீடித்த தன்மை மிக முக்கியம் என்பதை விவரித்த அவர், இந்தக் கூட்டத்தில் நீங்கள் பெற்ற உற்சாகத்தைத் திரும்பிச் செல்லும்போது கொண்டு சென்று, நல்ல உலகம் அமைய உங்களது ரோட்டரி அமைப்புகளிலும் அதை ஏற்படுத்துங்கள் என்றார்.

டொராண்டோ எனக்குச் சொந்த ஊர் போல என்று பேசிய ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக நியமனம் பெற்ற மலோனி, அனைத்து வயதினரும் சேவை புரிவதுடன் தலைமையும் தாங்க வேண்டும். இன்றைய குடும்பங்களையும் இணைக்க வேண்டும். ரோட்டராக்ட் அமைப்பினர் அதிகம் ஈடுபடவேண்டும் என்றார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் பொதுச் செயலாளர் ஜான் ஹியுகோ பேசுகையில், இரண்டாம் உலகப் போரின்போது, தனது பெற்றோர் உக்ரைன் நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு அகதிகளாக வந்த வாழ்க்கைச் சம்பவங்களை நினைவுகூர்ந்தார். வீடு வாசல் இழந்து ஜெர்மனியில் அகதிகளாகத் தங்கிய துயரமான வாழ்க்கையைப் பெற்றோர் எனக்குச் சொல்வார்கள். எங்களை வரவேற்று வாழவைத்த அமெரிக்காவுக்குத் திருப்பிச் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. அதுதான் சமூக சேவைக்குத் தூண்டியது என்றார்.

உலகின் பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேசிய தலைவர்கள் சிறப்பிக்கப்பட்டனர். ஹைதி நாட்டுப் பிரதமரும் ரோட்டேரியனுமான ஜாக் கை லாஃபோன்டன்ட் தனது நாட்டில் குடிநீர், சுகாதார பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கை கழுவு (HANDWASH) என்ற திட்டத்தைச் செயல்படுத்த தனது அரசுக்கும் ரோட்டரிக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்து அறிவித்தார்.

இளம்பிள்ளை வாத ஒழிப்பில் ரோட்டரி மேற்கொண்டு வரும் பணிகளை பிரிட்டிஷ் இளவரசி ஆனி பாராட்டினார்.

### மகளிர் சக்தி

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ்மனைவி லாரா புஷ், குழந்தைகளின் கல்வி குறித்து பேசினார். மகளிர்க்கு அதிகாரமளிக்கவும் பொருளாதார சுதந்திரத்திற்கும் குழந்தை கல்விதான் முக்கியம் என்றார்.

நோய்க்கு எதிரான பணி, சுத்தமான குடிநீர் அளித்தல், கல்வி, அமைதி ஆகியவற்றில் ரோட்டரியினர் பணிகளுக்கு நன்றி என்றார். இன்னும் நிறைய செய்யவேண்டியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாயிக் தோர்ன்



RIPN *மார்க் மலோனி.*

நியூசிலாந்து முன்னாள் பிரதமர் ஹெலன் கிளார்க்கும், ரிஸ்லியும் ஐநா சபை நீடித்த மேம்பாட்டு இலக்குக் குழுவின் பிரதிநிதியும் கலந்துரையாடினர். அதில், பாலின சமத்துவம் குறித்தும் சூழல், வறுமை, பசி, அமைதி ஆகியவற்றுக்கு இடையிலான முக்கிய பிரச்சினைகள் ஆகியவை இடம்பெற்றன.

பொது வாழ்வில் பெண்களின் பங்களிப்பு குறித்துப் பேசிய ஹெலன், நான் நியூசிலாந்து நாடாளுமன்றத்துக்கு 1981ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மொத்தம் 92 உறுப்பினர்களில் 8 பேர் மட்டுமே பெண்கள். இத்தனைக்கும் 125 ஆண்டுகளுக்கு முன் போராட்டம் நடத்தி, பெண்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுத் தந்த முதல் நாடு நியூசிலாந்து என்றார்.

ஐநா சபையின் 10ஆவது தலைமைச் செயலராக வருபவர் பெண்ணாக இருப்பார். அப்படி வலுவானவரை ஆதரிப்போம் என்று குறிப்பிட்டார். சமத்துவம், நீடித்த வளர்ச்சிக்காகப் பாடுபடும் நியூசிலாந்து முன்னாள் பிரதமர் ஹெலனுக்கு RI கவுரவ விருதினை ரிஸ்லி அளித்து சிறப்பித்தார்.

இந்த மாநாட்டின் நிகழ்ச்சியில், உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தலைமை இயக்குநர் டாக்டர் டெட்ரோஸ் அதனம் கெப்ரியசுஸ், யுனிசெப் ஆசியா பிரிவின் தலைவர் டாக்டர் காரைல் ஸ்டென், ஃபிஸ்டுலாவிலிருந்து விடுதலை என்ற நிறுவனத்தின் (Freedom from Fistula Foundation) நிறுவனர் ஆன் குளோக் ஆகியோர் பேசினர்.

இந்த மாநாட்டை ஒட்டி, ரோட்டராக்ட் சங்கத்தின் 50ஆவது ஆண்டு விழாவும், ரோட்டராக்டர்களாக இருந்து ரோட்டேரியன்களாக உயர்வு பெற்றவர்களின் குழு அமர்வும் நடைபெற்றன. அந்தக் குழு அமர்வை ரோட்டரி இன்டர்நேஷனலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட (RIDE) ஒலயின்கா பாப் லோலா நெறிப்படுத்தினார்.

ரோட்டரி முன்னாள் உலகளாவிய சேவை விருதினை நியூ ஜெர்சி மூர்ஸ்டவுன் ரோட்டரி சங்கம் ஆதரவு பெற்ற கல்வியாளர் ஜான் கவுல்ஃபீல்டுக்கு ரிஸ்லி, ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவல் குழுத் தலைவர் பால் நெட்ஸெல் ஆகியோர் வழங்கிச் சிறப்பித்தனர்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# மதுரை ரோட்டரி சங்கத்தினர் சீனா ரோட்டரி சங்கத்திற்குப் பயணம்

எம் எஸ் சுந்தரவேல்



*ரோட்டரி சங்கத் தலைவர்கள் இவான் ஹுவாங், SB ராஜ்குமார் தங்கள் சங்கக்கொடிகளை பரிமாறிக் கொள்கிறார்கள். சுமதி ராஜ்குமாரும், Rtn. MS சுந்தரவேல் அவர்களும் உடன் உள்ளனர்.*

ரோட்டரி சங்கத்திற்கு சீனாவில் நீண்ட வரலாறு உண்டு. 1919ம் ஆண்டு சீனாவில் முதல் ரோட்டரி சங்கம் ஷாங்காய் நகரில் தொடங்கப்பட்டது. ஆசியாவிலேயே இரண்டாவது ரோட்டரி சங்கமாகும். ஆங்கிலம் பேசும் அமெரிக்கர்கள், பிரிட்டிஷ்காரர்களைக் கொண்டு இயங்கிய சங்கம், பல நாட்டவர்களை இணைத்துக் கொண்டு, சீனாவின் முன்னணி வர்த்தகர்களைக் கொண்டதாக மாறியது.

சீனாவில் ரோட்டரி சங்கம் சிறப்பாக இயங்கியது. 1949ம் ஆண்டு சீனப் புரட்சி வரையில் 33 ரோட்டரி சங்கங்கள் உருவாயின. 1949ம் ஆண்டுக்குப் பிறகு, ரோட்டரி சங்கத்தினர் கூடுவது கடினமாகி விட்டது. இடம்பெற்றிருந்த பல உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். மீதமிருந்த ரோட்டரி சங்கங்களை 1952ம் ஆண்டு RI அமைப்பு கலைத்துவிட்டது.

2006ம் ஆண்டு ரோட்டரி சங்கங்கள் புத்துயிர் பெற்றன. மேற்கு ஷாங்காயில் உள்ள ரோட்டரி சங்கத்திற்கு RI அமைப்பு 2014ல் டிசம்பரில் அங்கீகரம் அளித்தது. RI தலைவராக இருந்த கேரி ஹுவாங் புதிய சங்கத்தை 2015ம் ஆண்டு மே மாதம் அமைத்தார். சீனாவில், மேற்கு ஷாங்காய் ரோட்டரி சங்கம் மான்ட்ரீன் மொழியில் இயங்கும் முதல் ரோட்டரி சங்கமாகத் திகழ்ந்தது. 1948ம் ஆண்டு நவம்பர் 16ம் தேதி உருவாக்கப்பட்ட பழைய மேற்கு ஷாங்காய் ரோட்டரி சங்கத்தின் வழிமுறைகளைப் பின்பற்றியது.

சீனாவின் தனித்தன்மை காரணமாக, அந்த அமைப்பு சிறப்புப் பிரதிநிதி யின் ஆளுகைக் கீழ் இயங்கும் மாவட்டத்தை (defacto district) போன்ற அமைப்பாகக் கருதப்பட்டது. அந்த பிரதிநிதியே மாவட்டத்தின் ஆளுநராக (defacto District Governor) இயங்கினார்.

மதுரை மேற்கு ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த 20 ரோட்டேரியன் கள் ஷாங்காய் நகருக்குப் பயண மானோம். தற்போதைய சிறப்புப் பிரதிநிதி ரோட்டேரியன் - ஷாங்காய் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ஃப்ராங்க் யீயைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. மேற்கு ஷாங்காய் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ரோட்டேரியன் ரிச்சர்ட் 2018-19ம் ஆண்டில் ஆளுநராக இருப்பார்.

மேற்கு ஷாங்காய் சங்கத்தினர் மதுரை உறுப்பினர்களுக்கு உற்சாகமான வரவேற்பை அளித்தனர். வரவேற்புக் குழுவில் இடம்பெற்ற ரோட்டேரியன்கள் சங்கத் தலைவர் (இவான்) சுங்-ஹன் ஹுவாங், செயலர் சோ யின் செங், பட்டயத் தலைவர், தற்போதைய துணை ஆளுநர் (AG), வரவிருக்கும் மாவட்ட ஆளுநர் (DG) ரோட்டேரியின் எம்மா, திட்டத் தலைவர் கில் ஷு, ராய் சூ, துணை ஃபெலோஷிப் தலைவர் ரோட்டேரியன் லைன்னா வாங் இடம் பெற்றிருந்தனர். அவர்தான் மொழிபெயர்ப்பாளராக இருந்து உதவினார்.


மதுரை சங்கத் தலைவர் ராஜ் குமாரும், ஷாங்காய் சங்கத் தலைவர் இவான் ஹுவாங்கும் ரோட்டரி கொடிகளையும், தங்களது மகிழ்ச்சி யையும் பரிமாறிக் கொண்டனர்!

(கட்டுரை ஆசிரியர் மேற்கு மதுரை ரோட்டரி சங்கத்தின் (D 3000) முன்னாள் தலைவர்)

# $372.6 மில்லியன் வசூல்:

## ரோட்டரி ஃபவுண்டேஷன் சாதனை

ஜெய்ஸ்ரீ



*TRF அறங்காவல் குழுத் தலைவர் பால் நெட்செல்*

ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு கடந்த ஓராண்டில் மொத்தம் $372.6 மில்லியன் நிதி திரட்டப்பட்டுள்ளது. இது உலகம் முழுதும் உள்ள ரோட்டரி சங்கத்தினருக்கு நன்றி என்று உற்சாகமாக அறிவித்தார் ஃபவுண்டேஷனின் அறங்காவல் குழுத் தலைவர் பால் நெட்செல். கனடா தலைநகர் டொராண்டோவில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டில் சிறப்புரையில் அவரது அறிவிப்பு அங்கே பலமான கைத்தட்டலைப் பெற்றது. இந்த ஆண்டு இளம்பிள்ளை வாத ஒழிப்புக்கு $150 மில்லியன், ஆண்டு நிதிக்கு $135 மில்லியன் உள்பட மொத்தம் $360 மில்லியன் வசூலிப்பது என்ற இலக்கை இது விஞ்சிவிட்டது.

சென்ற ஆண்டு ரோட்டரியின் நூற்றாண்டு. அதையொட்டி $304.00 மில்லியன் திரட்டப்பட்டது. இந்த ஆண்டு அவ்வளவு வசூலாகுமா என்ற எண்ணம் இருந்தாலும் 2017-18ம் ஆண்டில் கூடுதலாக இருக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. நீங்கள் (ரோட்டேரியன்கள்) அந்த சவாலை ஏற்று செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை இருந்தது. காரணம், உலகம் முழுதும் அதற்கான தேவை இருக்கிறது என்றார் நெட்செல்.

கடந்த நூற்றாண்டில்

$4.4 மில்லியன் மனிதாபிமானப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு உலகளாவிய நிதியைக் கோரி 168 நாடுகளிலிருந்து வந்த 1,200 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ரோட்டரி ஃபவுண்டேஷன் எப்படி பல்வேறு சேவைகளை மேற்கொண்டு, உலகில் வேகமான மாற்றத்தைக் கொண்டுவருகிறது என்று பலர் முன்பு வியப்படைந்தனர்.

பன்னாட்டுப் புரிதலுக்கான பல நிறுவனங்கள் 1930ம் ஆண்டுகளில் தொடங்கப்பட்டன. பட்டதாரிகளுக்கு கல்வி உதவித் திட்டங்கள்1940ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டன. இதையடுத்து 1945ம் ஆண்டு சான்பிராஸ்கோ நகரில் ஐ.நா. சபை பிரகடனம் கையெழுத்தாகும் நிகழ்வில் இடமும் கிடைத்தது. 1960ம் ஆண்டுகளில் சர்வதேச அளவில் ரோட்டரி சங்கங்களும் மாவட்டங்களும் கூட்டாகச் செயல்பட ஆரம்பித்தன.

2000ம் ஆண்டுகளிலோ உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் அமைதி, பிரச்சினைத் தவிர்ப்பு, தீர்வும் தீர்மானமும் ஆகியவற்றைத் தங்களது பணியாக ஏற்பதற்கான ரோட்டரி அமைதி மையங்கள் (Rotary Peace Centres) உதவத் தொடங்கின.

இன்றைக்கு 1,162 பட்டதாரிகளும் நூற்றுக்கும் மேற்பட்ட புதிய ரோட்டரி அமைதித் தூதர்களும் (Rotary Peace Fellows) இணைந்துள்ளனர் என்று நெட்செல் கூறினார்.

*இந்தியாவின் ஆதித்ய பிர்லா சமூக மேம்பாடு - ஊரக வளர்ச்சி குழுமத் தலைவர் ராஜஸ்ரீ பிர்லாவின் தாராளமான மனப்பான்மை பாராட்டத்தக்கது.*

**பால் நெட்செல்**
TRF *அறங்காவல் குழுத் தலைவர்*

போலியோ நோய் ஒழிப்புப் பணியில் ரோட்டரி அமைப்பின் பங்கு முக்கியத்துவம் கொண்டது என்று குறிப்பிட்ட அவர், இதைச் சாதிப்பதற்கு டொராண்டோ பெரிதும் உதவியது என்றார்.

1950ம் ஆண்டுகளில் டாக்டர் ஜோனஸ் சல்க் போலியோ ஒழிப்புக்கான மருந்து கண்டறிந்தார். ஆனால், பெரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு அவர் அறிய முடியவில்லை. டொராண்டோவில் கனடிய விஞ்ஞானி டாக்டர் லியோன் ஃபார்ரெல் ‘‘டொராண்டோ மாதிரி’’ என்று பரவலாக அறியப்படும் ஆய்வில் ஈடுபட்டார். போலியோவுக்கான மூலகிருமிக்கு எதிரான மருந்தை அவர் கண்டறிந்தார். அதன் அடிப்படையில் நோய்த்தடுப்பை சல்க் கண்டறிந்து, அமெரிக்கா, கனடா, ஃபின்லாந்து ஆகிய நாடுகளில் 18 லட்சம் குழந்தைகளுக்கு 1954-55ம் ஆண்டுகளில் போலியோ தடுப்பு மருந்து அளிக்க முடிந்தது.

இன்று டாக்டர் சல்க் பிரபலமாக அறியப்படுகிறார். டாக்டர் ஃபார்ரெல் அறியப்படுவதில்லை. போலியோ ஒழிப்பில் அவரைப் போல் வெளிச் சத்திற்கு வராத மேதைகள் பலர் உண்டு. ஆனால் போலியோ இல்லாத உலகமே அவருக்கு நாம் செலுத்தும் மரியாதை ஆகும்.

கடந்த ஓராண்டில் ரோட்டரியும் பல்வேறு உலகளாவிய அமைப்பினரும் போலியோவை முற்றிலுமாக ஒழிப்பதற்காக $1.5 மில்லியன் அளித்துள்ளனர். அதில் $450 மில்லியன் ரோட்டரி அமைப்பின் பங்கு ஆகும். இந்த ஆண்டு $50 மில்லியன் இலக்கு ஆகும். ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு பில் & மெலின்டா கேட் ஃபவுண்டேஷன் $1 மில்லியன் அளிக்க இருக்கிறது என்று நெட்செல் கூறினார்.

*போலியோ இல்லாத உலகை அமைக்கும் பணியில் இணைய போவதாக கனடா பிரதமர் உறுதி அளித்துள்ளார்.*


**இயான் ரிஸ்லி**
RI *தலைவர்*

இந்தியாவின் ஆதித்ய பிர்லா சமூக மேம்பாடு - ஊரக வளர்ச்சி குழுமத் தலைவர் ராஜஸ்ரீ பிர்லாவின் தாராளமான மனப் பான்மையை ஃபவுண்டேஷனின் அறங்காவல் குழுத் தலைவர் பால் நெட்செல் பாராட்டினார். அந்நிறுவனம் அண்மையில் போலியோ ஒழிப்புக்காக மொத்தம் $11 மில்லியன் அளித்துள்ளதை வரவேற்றார்.

கடந்த ஐந்தாண்டுகளாக போலியோ இல்லாத நாட்டைச் சேர்ந்த பிர்லா இந்நிதியை அளித்துள்ளது நமது அதிர்ஷ்டம் என்றார் அவர்.

2025ம் ஆண்டில் $2.025 பில்லியனில் ஓர் அறக்கட்டளை நிறுவ வேண்டும் என்பது ரோட்டரி ஃபவுண்டேஷனின் கனவு லட்சியம். ஆண்டுக்கு $100 மில்லியன் வீதம் திரட்டினால் கூட அது நிறைவேறிவிடும். அதைக் கொண்டு, எதிர்காலத்தில் ரோட்டரி அமைப்புகள் தங்களது திட்டங்களை நிறைவேற்றலாம் என்றார் நெட்செல்.

இந்தியாவுக்கு வந்தபோது தனக்கு நேர்ந்த நெகிழ்ச்சியான அனுபவத்தை நினைவுகூர்ந்த அவர், போலியோவுக்கு ஆளான பரீக் என்ற 9 வயது சிறுவனும் அவனது பெற்றோரும் என் காலைத் தொட்டுக் கும்பிட்டபோது ஒரு கணம் உறைந்து போனேன்.



*கனடா பிரமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் RI தலைவர் இயான் ரிஸ்லியும்.*

அனைத்துக்கும் மேலானது சேவை என்ற அடிப்படைக் கோட்பாடு உங்களது அர்ப்பணிப்பை மட்டும் விளக்குவதில்லை. நாம் எல்லோரும் இணைந்தால் சாதிக்கலாம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுகிறது இது. நமது குழந்தைகள் போலியோ இல்லாத உலகத்தில் வாழவேண்டும்.

**ஜஸ்டின் ட்ரூடோ**
*கனடா பிரதமர்*

அது என் மனத்திலிருந்து அகலவில்லை. ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளிக்கும்போது இதையெல்லாம் நினைவில் கொள்ளுங்கள். நன்றி என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

நிகழ்ச்சியை ஒட்டி போலியோ ஒழிப்பு சேவைக்கான சிறப்பு விருது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவர் இயான் ரிஸலியும் சர்வதேச போலியோ பிளஸ் கமிட்டியின் தலைவர் மைக்கேல் மெக்கவர்னும் அளித்தனர்.

கனடாவில் போலியோ 20 ஆண்டுகளுக்கு முன்பே ஒழிக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் CAD $750 மில்லியன் அளித்துள்ளது. போலியோ ஒழிப்புக்காக உலக அளவில் நிதியாக $100 மில்லியன் 2017ம் ஆண்டு அளிக்கப்பட்டது. பாகிஸ்தானில் $20 மில்லியன் அளிக்கப்பட்டது. ஜூன் மாத தொடக்கத்தில் கனடா ஜி 7 உச்சி மாநாட்டுக்கு ஏற்பாடு செய்த கனடா நாடு ஜி 7 நாடுகளையும் இந்தப் பணியில் ஈடுபடுத்தத் தொடங்கியது. கனடா நாட்டு ரோட்டரி அமைப்பினர் $66.6 மில்லியன் அளித்துள்ளனர். அத்துடன் போலியோ பாதிப்பு அதிகமுள்ள நாடுகளுக்குச் சென்று உதவி வருகிறார்கள். போலியோ இல்லாத உலகை அமைப்பது குறித்த இயக்கத்தில் கனடா ரோட்டரி அமைப்பினர் முதலில் இடம்பெற்றனர்.

இந்தப் பணியில் இணையப் போவதாக கனடா பிரதமர் உறுதியளித்துள்ளார் என்று ரிஸ்லி தெரிவித்தார்.

பாராட்டுகளை ஏற்றுக் கொண்ட பிரதமர் பேசுகையில், கனடாவில் எங்கு சென்றாலும் ரோட்டரி பணிகளில் மக்கள் ஈடுபடுவதைக் காணலாம். ஆண்டுதோறும் 16 மில்லியன் தொண்டர்கள் ஈடுபடுவதற்கு பாராட்டுகள். ரோட்டரி சங்கம் மட்டும் $2 பில்லியன் பயன்படுத்தவில்லை. அரசாங்கத்தையும் மக்களையும் செயல்பட வற்புறுத்தியுள்ளனர். அதுதான் மாற்றத்துக்கு வழியேற்படுத்தியது, போலியோ ஒழிப்பு முன்னோடி விருது கிடைப்பது என்றால், உங்களுக்குத்தான் (பொதுமக்கள்) நன்றி கூறவேண்டும் என்றார்.

அனைத்துக்கும் மேலானது சேவை என்ற அடிப்படைக் கோட்பாடு உங்களது அர்ப்பணிப்பை மட்டும் விளக்குவதில்லை. நாம் எல்லோரும் இணைந்தால் சாதிக்கலாம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுகிறது இது. நமது குழந்தைகள் போலியோ இல்லாத உலகத்தில் வாழவேண்டும். பாலின சமத்துவம் உள்ள உலகம் உருவாக வேண்டும். எல்லோருமே வெற்றி பெற வழியுண்டு. கடுமையாக உழைத்து சிறந்த உலகைப் படைக்க வேண்டும். அனைவருக்கும் மிகவும் நன்றி (Merci beaucoup) என்றார்.

இந்த விருதினைப் பெறும் கனடாவின் மூன்றாவது பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே ஆவார். பிரதமர்கள் ஜேன் க்ரெடியென், ஸ்டீபன் ஹார்ப்பர் ஆகியோர் இதற்கு முன் விருது பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர, ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ ஆபே, ஜெர்மனி தலைவர் (Chancellor) ஆஞ்சிலா மெர்க்கெல் உள்ளிட்ட பல நாட்டுத் தலைவர்கள், பங்கேற்றனர். ■

# பள்ளி மாணவிகளுக்கு சைக்கிள் பரிசு

கிரண் ஜெஹ்ரா




RIDE *பரத் பாண்டியா மற்றும்* PDG *சாம் படிபண்ட்லா ஓர் மாணவிக்கு சைக்கிள் வழங்கும் காட்சி.*

RIDE பரத் பாண்ட்யா முன்னிலையில் RC ஹைதராபாத் கச்சிபவுலி (D 3150) சங்கத் தலைவராக TS சசிகலா பொறுப்பேற்றார். பரத் பாண்ட்யா இந்தியாவின் பெண்களின் தலைமையை ஊக்குவிப்பவர்.

பாண்ட்யாவை அழைத்து வர எடுத்துக் கொண்ட முயற்சிக்கு PDG சாம் படிபண்டாலா, TVR மூர்த்தி ஆகியோருக்கு பதவியேற்பு நிகழ்ச்சியில் TS சசிகலா நன்றி கூறினார்.

பள்ளியில் தேர்ச்சி பெற்று, வகுப்புகளுக்குத் தவறாமல் வந்த மாணவி களுக்கு சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது. இந்த மாணவிகள் தங்கள் வீட்டிலிருந்து 7, 8 கி.மீ. தூரம் பள்ளிக் குச் நடந்தே செல்ல வேண்டும். அதில் ஒரு நாளும் தவறியதில்லை. அந்த அர்ப்பணிப்பு உணர்வைப் பாராட்டியே சைக்கிள் பரிசு என்றார். சைக்கிள் பரிசுக்ககாக சங்கம் ரூ.45,000 பயன்படுத்தியது.

ஆயத்த ஆடை தொழிற்சாலைகளில் பகுதிநேரப் பணியாக தையல் வேலை செய்யும் ஏழைப் பெண்களின் வருவாயை அதிகரிப்பதற்காக இச்சங்கம் ரூ.30 ஆயிரம் செலவில் 6 தையல் இயந்திரங்களை வழங்கினர்.

மகளிர் கல்வி, மற்றும் மகளிர்க்கு அதிகாரமளித்தல் தொடர்பான பல்வேறு திட்டங்களில் இந்தச் சங்கம் 2008ம் ஆண்டு முதல் ஈடுபட்டு வருகிறது.

முற்போக்குச் சிந்தனைகள், சேவை மனம் ஆகியவையே உறுப்பினர்களின் தகுதிகள் ஆகும். பாரபட்சமின்றி பணியாற்றி வருகிறோம் என்று பெருமையுடன் TS சசிகலா கூறினார்.■



# ஒரு இதமான ரீயூனியன்

ஜெய்ஸ்ரீ

சாபு RI தலைவராக இருந்த 1991-92 ஆண்டின் ஆளுநர்களின் ரீயூனியனை கொண்டாட டொராண்டோ மாநாட்டில், ஒரு மதிய விருந்து நடைபெற்றது. PRIP KR ரவீந்திரன் மற்றும் வானதி, RIPE பேரி ரஸின் மற்றும் எஸ்தர், RID C பாஸ்கர் மற்றும் மாலதி, PRID YP தாஸ் மற்றும் PRID ஜான் போக் மற்றும் சாபுவின் சொந்த மாவட்டம் D3080ன் முன்னாள் ஆளுநர்கள் இதில் விருந்தினராகக் கலந்துகொண்டனர். ரவீந்திரன் மற்றும் ரஸின் கவர்னர்களாக இருந்த போது, பாஸ்கர் மற்றும் டொராண்டோ மாநாட்டுத் தலைவர் கோர்டன் R மெக்னால்லி க்ளப் ப்ரெசிடென்ட்டாக இருந்தார்கள். நைஜீரியாவைச் சேர்ந்த RIDE ஓலையின்கா பாபாலோலா ஒரு ரோட்டராக்ட் ஆளுநராக இருந்தார் என்று நினைவு கூர்ந்த சாபு, “நாம் அனைவரும் எவ்வளவு வயதானவர்கள் என்பதை இது காட்டுகிறது என்றார்!”

ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகழ்வு ரோட்டரி மாநாட்டின் போது நடைபெறுகிறது. முன்னால் கவர்னர்கள் மற்றும் மூத்த தலைவர்களுக்குக்கிடையே இருந்த தோழமையுணர்ச்சி மற்றும் சாபுவிடம் அவர்களுக்கு இருந்த அன்பும் மரியாதையையும் இந்த நெருக்கமான கூட்டத்தில் உணரமுடிந்தது.

### ஒரு நிதி திரட்டும் நிகழ்வாக மாறிய ரீயூனியன்

“இதில் ஒரு சுவாரஸ்யமான கதை இருக்கிறது,” என்று ரவீந்திரன் கூறினார்.1998ம் ஆண்டில், சாபு மற்றும் உஷா சண்டிகரில் அவர்களுடைய வீட்டிற்கு ரவீந்திரன் உள்பட சில PDGகளை அழைத்திருந்தனர், டெல்லியிலிருந்து அவர்கள் பயணம் செய்ய ரயிலில் முன்பதிவும் செய்து இருந்தனர்.

“இந்தப் பிரயாணத்தின்போது, அந்த தம்பதிகளுக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்று எங்கள் தலையை உடைத்துக் கொண்டிருந்தோம், அப்போது லூ (மார்சியானோ) ஒரு சிறப்பான யோசனையைச் சொன்னார். நாம் எல்லோரும் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு, மொத்தமாக அவர்களிடம் கொடுப்போம். அவர்கள் விரும்பிய படி அந்த பணத்தை அவர்கள் பயன்படுத்



*PRIP ராஜேந்திர சாபு மற்றும் உஷா சாபு D 3080 முன்னாள் ஆளுநர்களுடன். PRID YP தாஸ் அவர்களும் உடன் உள்ளார்.*

திக் கொள்ளட்டும், ஒருவேளை அவர்கள் அதை ஒரு சேவை திட்டத்திற்குப் பயன்படுத்தலாம் என்று அவர் சொன்னார்.''

எனவே அவர்கள் 20 பேரும் தலா 50 டாலர்கள் பங்களித்தார்கள், மேலும் மற்றொரு விருந்தினர் கொடுத்த $20 யையும் சேர்த்து, மொத்தமாக $1,020 அளிக்கப்பட்டது. சாபு அந்தப் பரிசை பாராட்டியதுடன், இந்த யோசனை உலகம் முழுவதும் இருக்கிற அனைத்து முன்னாள் கவர்னர்களுக்கும் கொண்டு செல்லப்படவேண்டும் என்றும் இந்த யோசனையை 1991-92 முன்னாள் கவர்னர்கள் அனைவருக்கும் தெரிவித்து $25,000 நிதி திரட்டும்படியும் மார்சியனோவிற்கு ஆலோசனை சொன்னார்கள்.

சாபு பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்துக் கொடுத்த கடிதத்தை மார்சியானோவும் அவரது மனைவியையும் அனைவருக்கும் அனுப்பினார்கள். ''எங்களுக்கு வந்த முதல் காசோலை $20,000 மற்றும் அடுத்தது $1,000 ஆகும்.'' மொத்தம் $25,000-30,000 பல காசோலைகளை ரவீந்திரன் அனுப்பினார். ''PDG ரவி வட்லாமணி மற்றும் அவரது மனைவி ராஜி (ராஜலட்சுமி) கூட... அவர்கள் எங்கள் குழுவில் உறுப்பினர்கள் அல்ல, இருந்தாலும் கடந்த 6-7 ஆண்டுகளாக, ஒவ்வொரு ஆண்டும் $1000 காசோலை அனுப்புகிறார்கள்'' என்று அவர் சொன்னார். இந்தச் செயலை கௌரவப்படுத்த, ரவி மற்றும் ராஜலட்சுமி வட்லாமனியை கௌரவ உறுப்பினர்களாக சேர்த்துக்கொண்டனர்.

காலப்போக்கில், இந்த நிதி ரோட்டரி பீஸ் சென்டர்கள் 2002, 2009, 2014 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் நான்கு பீஸ் பெல்லோஸ்களுக்கு நிதியளிக்கும் அளவிற்குக் கணிசமான மதிப்பை அடைந்து விட்டது. அவர்களில் மூன்று பேர் படிப்பை முடித்து விட்டார்கள், விரைவில் மற்றொருவர் பட்டம் பெற இருக்கிறார். ''நாங்கள் ரயில் வண்டியில் ஆரம்பித்த இந்த நிதியின் தற்போதைய மதிப்பு $561,804 மற்றும் சந்தை மதிப்பு $740,846 ஆகும். இந்த நிதியத்தைக் குறைந்த பட்சம் ஒரு மில்லியன் டாலர்கள் வரை உயர்த்த வேண்டும்'' என்று ரவீந்திரன் கூறினார்.

ரோட்டரியை ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் சிறப்பாக எடுத்துச் செல்ல சாபு எவ்வாறு கவர்னர்களை ஈடுப்படுத்தினார் என்று ரஸின் நினைவு கூர்ந்தார். மேலும் அவர் ''நமது சமூகத்தை ஒன்றாக இணைக்கும்போது, இந்த உலகத்தை ஒரு சிறந்த இடமாக மாற்றுவதற்கு எல்லா வழிகளும் நமக்குக் கிடைக்கும்.'' என்றும், ரவீந்திரனுக்கு உதவியாளரக பணிபுரிந்தபோது, ஒரு உலக ப்ரெசிடென்ட் எப்படி இருக்க வேண்டும் என்றும் உணர்ந்துகொண்டேன். ''நான், ராஜா மற்றும் ரவி போன்ற ஒரு நல்ல ப்ரெசிடென்ட்டாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன்,'' என்றும் அவர் கூறினார்.

இளைய தலைமுறையினரை கவர்ந்திழுக்கும்படி அனைத்துச் சங்க ப்ரெசிடென்ட்களையும் அவர் கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு சங்கமும் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று யூகித்து, அங்கு நாம் எப்படிப் போகப் போகிறோம் என்று சிந்திக்கவேண்டும். ஒவ்வொரு சங்கமும் துடிப்பாகவும், வலுவான சங்கம் என்பதையும் உறுதி செய்ய ஒரு வியக்கத்தக்க மாற்றதை கொண்டு வர வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நம்மைத் தாண்டி பார்க்க வேண்டும், நம்மைச் சுற்றி இருப்பவர்கள், நண்பர்கள் மற்றும் சமுதாயத்திற்கு ஒரு உந்துசக்தியாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் நாம் இருப்பதில் அனைவரும் சேரவிரும்புவதை உறுதிப் படுத்தலாம் என்று குறிப்பாக, இந்த வகுப்பில் உள்ளவர்களை கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

ஒரு நிறைவான மனநிலையில் சாபு, பிரதிநிதிகளுக்கு நன்றி தெரிவித்து பேசினார்.

1991ல் இன்டர்நேஷனல் அசெம்பிளியில் நான் முதல் முறை உரையாற்றும் வரை, இந்தியா போன்ற வளரும் நாட்டில் இருந்து வரும் ஒரு குள்ள மனிதனை உலகின் பிற பகுதிகளில் இருக்கிற ரோட்டேரியன்களின் இதயங்கள் ஏற்றுக்கொள்ளுமா? என்ற சந்தேகம் இருந்தது. நான் எனது கருத்தைப் பற்றிப் பேசியபோது, நான் ஒரு உறவை உருவாக்கியுள்ளேன் என்று எனக்குப் புரிந்தது - அவர்கள் எனக்கு சொந்தமானவர்கள் மற்றும் நான் அவர்களுக்குச் சொந்தமானவன் என்ற உறவு அது. அப்போதுதான் நான் 1991-92 நம் அனைவரின் நினைவில் இருக்கும் ஒரு ஆண்டாக இருக்கும் என்று உணர்ந்தேன். நாம் சேவை செய்வதற்கும் மீண்டும் மீண்டும் இப்படி ரீயூனியனில் சந்திப்பதற்கும் நமக்கு நீண்ட ஆயுள் இருக்கும் என்று நம்புகிறேன், மேலும் நமது தொடர்புகளைப் புதுப்பித்துக் கொள்ள எதையாகிலும் செய்ய வேண்டும், அப்பொழுதான் நாம் ஒருவருக்கொருவர் ஒரு உந்துசக்தியாக இருப்போம், கடவுள் உங்களை ஆசிர் வதிப்பாராக.''




புகைப்படங்கள்: ஜெயஸ்ரீ
வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

பேராசிரியர் மலாய் முகோபாத்யா நதிகளை பற்றிய ஆய்வு செய்யும் ஆய்வாளர். விஷ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியரான இவர், நமது வாழ்க்கையில் நதிகளைப் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நதிக்கரையில் வாழும் மக்கள், நதிகளை எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதை உணர்த்தவும், தேம்ஸ் உள்ளிட்ட ஐந்து நதிக்கரையோரம் நடந்து சென்று இருக்கிறார். டிசம்பர் 2017ல், அவரின் கீழுள்ள ஆராய்ச்சி மாணவர்களின் உதவியுடன், ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, கொப்பை நதிக்கரையோரம், அவர் தலைமையில் 40 நாளில், 110 கி.மீ. பயணம் மேற்கொண்டனர்.

அவர் நதிகளை ஒரு உயிரோட்டம் உள்ள ஜீவனாக பார்க்கிறார் மேலும் அவற்றுக்கு இழைக்கப்படும் எந்தத் தீங்கும், அவருக்கு வேதனையைத் தருகிறது. நோபல் பரிசு பெற்ற, ரவீந்திரநாத் தாகூர் ஆரம்பித்த விஷ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் உறைவிடமான சாந்திநிகேதனில் இருக்கும் RC தாகூர் லேன்ட் சங்கத்தின் உறுப்பினர் இவர். இந்த சங்கத்தில் அந்த பல்கலைக்கழகத்தின் பல பேராசிரியர்கள் உறுப்பினர்களாக இருகிறார்கள், அவர் மக்களின் கவனத்தை ஈர்க்கும் இந்தத் தனித்தன்மையான திட்டத்தை மேற்கொண்டார் என்று D 3240, PDG அசோக் குமார் அகர்வால் கூறினார்.

அவரின் தலைமையில் சில சங்க உறுப்பினர்கள், உடன் பணியாற்றுபவர்கள், மாணவர்கள் மற்றும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த சிலரும், ஒரு வாரகாலமாக, இந்த குறிக்கோள் கொண்ட, 110 கிலோமீட்டர் பயணத்தை கொப்பை நதி ஆரம்பம் முதல் சங்கமம் வரை மேற்கொண்டனர். சாந்திநிகேதன் வட பகுதியில் இருக்கும் சோடநாக்புர் மலை அடிவாரத்தின் மேற்கில் தோன்றி, கிழக்கில் பாய்ந்து, கடைசியில் மயூரக்ஷி நதியில் சங்க மிக்கிறது இந்த கொப்பை நதி.

RC தாகூர் லேன்ட்டின் ஆரம்ப உறுப்பினரான பேராசிரியர் முகோபாத்யா, ஏன் இந்தக் கொப்பை நதியைத் தேர்வு செய்தார் என்பதற்கான காரணம், சிறந்த கவிஞர் தாகூருக்கு மிகவும் பிடித்த நதி, “அடிக்கடி வெள்ள பெருக்கு எடுத்து மக்களை பயமுறுத்தும் இந்த நதிக்கு, கொப்பை என்ற பெயர் மாற்றினார்’’. ஆனாலும்



# கொப்பை நதியை கௌரவப்படுத்துவோம்

ரஷீதா பகத்

விவசாயத்திற்காக அதிகமான தண்ணீர் கொடுக்கும் மற்றும் அங்கு வசிக்கும் மக்கள் அதில் நிறையச் சடங்குகள் செய்வார்கள். உண்மையில் தாகூர் இந்த நதியின் மேல் மயங்கி, அதைப் பற்றி எழுதி இருக்கிறார்: “அமாதேர் சொட்ட நதி சலே அன்கே பான்கெய், பைசக் மசெய் டார் ஹன்டு ஜல தாக்கே. (எங்களுடைய இந்தச் சின்ன நீரோட்டம் வளைவுகளில் முன்னேறும், பைசக் மாதத்தில் முழங்கால் அளவு தண்ணீர் இருக்கும்).’’ தாகூர் மயங்கியதற்கு மற்றொரு காரணம் இந்த நதியின் பகட்டான அழகு, அவர் பிரசித்தி பெற்ற நதி ஆய்வாளர் Dr. ஆர்த்தர் கெடெஸ்சை, இந்த நதியைப் பற்றி ஆய்வு செய்ய அழைத்தார். ‘நான் 30 ஆண்டு களுக்கு முன் இந்த விஷ்வ பாரதி பல்கலைக்கழகத்தில் சேர்ந்தேன், அப்பொழுதே இந்த நதியைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து, பிறகு சிறிது காலம் கழித்து நதிக்கரையோரம், எனது மனைவி மற்றும் 3 வயது மகள் காயத்திரியுடன் பயணம் மேற்கொண்டேன், அவள் பெயர் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்று இருக்கிறது’ என்று பேராசிரியர் கூறினார்.

## நடை பயணம்

பேராசிரியர் முகோபாத்யாயின் ஆராய்ச்சி மாணவர்களில் ஒருவரான சஞ்சுதா பானிக், இந்த பயண ஏற்பாடு களைப் பற்றி விளக்கினார், இந்தக் குழுவில் 40 நிரந்தர உறுப்பினர்கள் இருந்தார்கள், அவர்களில் 6 பேர்கள் பெண்கள் மேலும் அவர்கள் முழுமையாக இந்த 110 கிலோமீட்டர் தூரத்தை நடந்தார்கள். பேராசிரியரின் 7 ஜெர்மன் சகாக்களும் இந்த பயணத்தில் சேர்ந்துகொண்டனர். மற்றவர்கள் பயணத்தின் வெவ்வேறு பகுதியில் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குச்

*நாங்கள் சென்ற எல்லாக் கிராமத்திலும், அவர்கள் ஒரு திருவிழாவை கொண்டாடுவது போல் நாங்கள் உணர்ந்தோம். அவர்கள் எங்களுக்குத் தேநீர், உணவு கொண்டு வந்து கொடுத்து, எங்களுக்கு வேறு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால், தானாகவே எங்களுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள் .*

*பேராசிரியர் மலாய் முகோபாத்யா ஆராய்ச்சி மாணவர்களுடன் கொப்பை நதியின் பாதையில்.*



சேர்ந்துகொண்டனர், இந்த வகையில் 15 முதல் 20 பெண்கள் இருந்தனர். இந்த 8 நாள் பயணம், அதில் பங்கேற்றவர்களுக்கு மிகவும் சிரமமின்றி அமைக்கப்பட்டு இருந்தது, இந்தக் குழு 8 கிராமங்களுக்கு அருகே நதி கரையோரங்களில் கூடாரங்களில் தங்கி, நதிகளைச் சுத்தமாகவும் உயிரோட்டத்துடனும் வைத்திருப்பதன் முக்கியத்துவத்தைக் கிராமவாசிகளுக்கு எடுத்து சொன்னார்கள்.

பயணம் மற்றும் பெண்களின் பங்கேற்பு மற்றும் அவர்கள் சந்தித்த சவால்களைப் பற்றி விவரிக்கும் போது, "ஒவ்வொரு நாளும் 30 கிலோமீட்டர் கடப்பது ஒரு மிகப் பெரிய சவாலாக இருந்தது மற்றும் குழுவில் 4 முதல் 82 வயது உள்ளவர்கள் இருந்தார்கள், அந்த 82 வயது நிரம்பியவர், பேராசிரியர் முகோபாத்யாயின் மூத்த சகோதரர்" இரவு நேரத்தில் எங்கள் பயண குழு கிராமங்களில் தற்காலிக கூடாரங்கள் அமைத்து தங்கினோம், மற்றும் "நாங்கள் தூக்கப் பைகளில் தூங்கினோம்.'' கழிப்பறை வசதிகள் பெண்களுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை, "ஏனெனில் பெரும்பாலான இடங்களில் நாங்கள் பள்ளி மைதானத்தில் தான் எங்கள் கூடாரங்களை அமைத்தோம், அங்கிருக்கும் கழிவறைகளை பயன்படுத்திக் கொண்டோம். பள்ளிகளில் தூங்குவது எங்களுக்கு பாதுகாப்பும் கொடுத்தது," என்று அவர் கூறினார்.

பேராசிரியர் முகோபாத்யா, ஒரு இரவு அவர்களின் ரோட்டரி சங்க வளாகத்தில் தங்கினோம் மேலும் அங்கு நாங்கள் 13 கூடாரங்கள் அமைத்தோம் என்று சொன்னார். கசூரி என்ற கிராமத்தில் இந்த நதி ஆரம்பிக்கும் இடத்தில், இந்தக் குழு ஒரு குறிக்கல் நட்டு வைத்தார்கள், அந்த குறிக்கல்லில் ரோட்டரி சின்னம் பெரிதாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பயணம் பல்வேறு கிராம மக்களுக்கு, நமது வாழ்க்கையில் நதிகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை மட்டும் ஏற்படுத்தவில்லை, நதிகள் அழிந்து







இரவு தங்குவதற்கு நதிக்கரையில் கூடாரங்கள்.





போகாமல் எப்படித் தடுப்பது என்றும் உணர்த்தப்பட்டது. மனிதர்களின் பேராசையால் இயற்கை நமக்கு அளித்த வரப்பிரசாதங்களும் சுற்றுப்புற சூழலும் எப்படி அழிகிறது என்ற எண்ணத்தை, இந்தப் பயணத்தில் நடந்த ரோட்டேரியன்களின் மனதில் எண்ண அலைகளை ஓட விட்டது என்று அவர் மேலும் கூறினார். அவரின் அழைப்பை ஏற்று இந்தப் பயணத்தில் இந்திய ஹெல்பி என்ற NGOவை சேர்ந்த ஜெர்மனியர்களும் கலந்துகொண்டார்கள்.

*25 ஆண்டுகளுக்கு முன்பு நதியைக் கொண்டாட பேராசிரியர் நிறுவப்பட்ட கல் இது என்று நினைவுபடுத்திய சில கிராமவாசி களை சந்தித்தபோது மிகவும் உற்சாகம் அடைந்தோம். அவர்களால் நிச்சயமாக அவரை அடையாளம் காண முடியவில்லை, ஆனால் பேராசிரியர் 25 ஆண்டுகளுக்குப் பிறகு கூட அவரது பயணம் நினைவுகூறப்பட்டது கண்டு சிலிர்த்துப் போனார், இதன் மூலம் இயற்கை வளங்களைக் காப்பாற்றும் முயற்சிகள் கவனிக்கப்படாமல் போகாது...*


## மனமுவந்த வரவேற்பு

கிராமவாசிகளின் வரவேற்பில் பயண குழுவினர் சந்தோஷம் அடைந்தார்கள் என்றார் சஞ்சுதா. நாங்கள் சென்ற எல்லாக் கிராமத்திலும், அவர்கள் ஒரு திருவிழாவை கொண்டாடுவது போல் நாங்கள் உணர்ந்தோம். எங்களுக்குத் தேநீர் மற்றும் உணவு கொடுத்து, வேறு ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால், தானாகவே எங்களுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள் . "இதுவே இந்தப் பயணத்தின் சிறந்த பகுதியாகும்.''

இந்தக் குழுவில் சிலருக்கு, கிராமவாசிகளிடம் பரிச்சியம் இருந்தது, ஏனென்றால் இந்தப் பயண திட்டத்திற்கு சுமார் ஆறு மாதத்திற்கு முன்பே பேராசிரியர் முகோபாத்யா, சஞ்சுதா உள்பட சில மாணவர்கள் இந்த நதிக்கரையில் ஒரு ஆய்வு நடத்தினார்கள், அந்த ஆய்வானது பயணத்தின் போது
இரவு தங்க ஏற்ற கிராமத்தை தேர்வு செய்யவும் மற்றும் கிராமவாசி களை சந்தித்து நதிகளைப் பற்றிய அவர்களின் புலனறிவை தெரிந்து கொள்வதற்கும் என்று அவர் கூறினார்.

ஏன் குறிப்பிட்டு இந்த நதியைத் தேர்வு செய்தீர்கள், இது அழிந்து கொண்டு இருக்கிறதா என்ற கேள்விக்கு, அவர், "அப்படி இல்லை, கொப்பை ஒரு வித்தியாசமான 110 கிலோமீட்டர் நீளமான சின்ன நதி. 25 ஆண்டுகளுக்கு முன், 1991 -ல் தான் எங்கள் பேராசிரியர் இந்த நதி கரையோரம் நடந்து சென்றார்; 2017 அதன் வெள்ளி விழா ஆண்டாகும், அதனால் இந்த நதியைக் கௌரவ படுத்தும் விதமாக ஒரு குழுவுடன் நடைப் பயணம் மேற்கொண்டார்.''

நதியில் போதிய அளவு தண்ணீர் இருந்ததா என்ற கேவிக்கு, அவர், சில பகுதியில் வறண்டும், சில பகுதிகளில் முறைகேடுகளும் நடந்து கொண்டிருந்தது என்றார். "உதாரணமாக, சாந்திநிகேதன் அருகில் ஆற்றுப் படுக்கை முழுவதும் கான்கிரீட் போட்டுக் கொண்டிருந்தார்கள்.''




## பெண்களின் மன பாங்கு

நதிகளைப் பற்றிய பெண்களின் மனப்பாங்கு மற்றும் கருத்து ஆண்களை விட மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அந்த நதிகளைப் பற்றி கிராமப்புற பெண்களின் கருத்துகளை ஆய்வு செய்வதும் இந்த ஆராய்ச்சியின் ஒரு பகுதியாகும்.

"முன்பெல்லாம் கிராமத்து பெண்களின் வாழ்வின் ஒரு அங்கமாக இந்தக் கொப்பை நதி இருந்தது, ஆனால் இப்பொழுது அவர்கள் நதிக் கரையில் இருந்து விலகி சென்று விட்டார்கள். அவர்கள் நதியை ஆண்டுக்கு ஓரிரு முறை ஏதாவது சம்பிரதாயத்திற்கு தவிர வேறு



*25 ஆண்டுகளுக்கு முன் கசூரி கிராமத்தில் நதிக்கரையில் குறிக்கல்லை மீண்டும் இந்தக் குழு சென்று பார்த்தனர்.*

எதற்கும் நாடுவதில்லை என்பதை நான் தெரிந்துகொண்டேன், இது மிகவும் வருத்தமான விசயம் என்றார்.''

மேலும், நதி ஆரம்பிக்கும் இடத்தின் அருகே முற்றிலும் விலகியும் அல்லது பிரிந்தும் இருப்பது தெரிந்துகொண்டேன்; "நதியின் நீரோட்டத்துடன் நாங்கள் நடந்து சொல்லும்போது, கொஞ்சம் இணைக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் அது மிகவும் சொற்பமானதே, முன்னர் இருந்ததுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது.'' பெண்கள் ஆண்களைவிட மிகவும் உணர்ச்சி ரீதியாக இணைக்கப்பட்டிருப்பதையும், கிராமவாசிகளிடம் பேசும்போது அவர் கண்டறிந்தார்.

"ஆண்கள் படுகையில் இருந்து மண் எடுக்கும் வேலை அல்லது அங்கு நடக்கும் சில கட்டுமானப் பணி, MNREGA 100 நாட்களுக்கு வேலைத் திட்டம் அல்லது அது போல வேறு திட்டங்களின் வாயிலாகக் கிடைக்கும் பணத்திற்காக மிகவும் சந்தோசமாக இருக்கிறார்கள், நதி வறண்டு போவதை பற்றியோ அல்லது அழிந்து போவதை பற்றியோ அவர்கள் கவலைப்படவில்லை. ஆனால் மறுபுறம், நதிகளின் அழிவைப் பற்றி பெண்கள் உண்மையில் கவலைப்படுவதை நான் கண்டேன். அவர்களின் குழந்தை பருவத்தில் நதி எப்படி அதன் முழு வலிமையுடன் பாய்ந்தது என்பதையும், அதன் சில பகுதிகள் இப்போது வறண்டு போய் இருப்பதைப் பற்றியும் கதை சொன்னார்கள். பெண்களுக்கு நதியின் மேல் அதிக உணர்வு இருக்கிறது...''

## முக்கிய கட்டம்

தேம்ஸ் நதியில் இருப்பதை போல ஒரு குறிக்கல்லை, 25 ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் முகோபாத்யாய் நிறுவிய இடத்தை அடைந்தது இந்தப் பயணத்தின் முக்கிய கட்டமாகும். "இது ஜார்கண்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நதியின் ஆதாரத்தை அடையாளம் காண்பிக்கும் ஒரு அடையாள குறிக்கல். நாங்கள் அந்த இடத்தை அடைந்தபோது, பல ஆண்டுகளுக்கு முன்பு-குறிப்பாக 25 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பேராசிரியர் வந்து, நதியைக் கொண்டாட நிறுவப்பட்ட கல் இது என்று நினைவு படுத்திய சில கிராமவாசிகளை சந்தித்தபோது மிகவும் உற்சாகம் அடைந்தோம். அவர்களால் நிச்சயமாக அவரை அடையாளம் காண முடியவில்லை, ஆனால் பேராசிரியர் 25 ஆண்டுகளுக்குப் பிறகு கூட அவரது பயணம் நினைவுகூறப்பட்டது கண்டு சிலிர்த்து போனார், இதன் மூலம் நமது இயற்கை வளங்களைக் காப்பாற்றும் முயற்சிகள் கவனிக்கப்படாமல் போகாது'' என்று சஞ்ஜுக்தா கூறினார்.

இந்த நதியோர நடைப் பயணத்தின் ஒரு உள்ளடங்கிய குறிக்கோள், நதியின் அருகில் உள்ள சில சுற்றுலாத்தலம் மற்றும் பாரம்பரிய இடங்கள்-சிறிய கோயில்கள் மற்றும் வரலாற்று அல்லது பண்பாட்டு மதிப்புள்ள மற்ற சுற்றுலா தளங்களை அடையாளம் காண்பது. அது பட்டியலிடப்பட்டு, அந்த அறிக்கையை இப்போது INTACH-கிற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது, இந்தப் பயணத்தின் சில அம்சங்களுக்கு அந்த நிறுவனம் நிதியளித்துள்ளது, என்று பேராசிரியர் முகோபாத்யாய் கூறினார்.

அடுத்த பயணம் அஜய் நதியின் கரையோரமாக நடப்பது, இந்த நதி ஆய்வாளரின் அஜய் நதியின் கரையோரம் மீண்டும் வெள்ளி விழா கொண்டாடப்படும்.

வடிவமைப்பு: N கிஷ்ணமூர்த்தி

# ட்ரினிடாட், பறவைகளின் பூமி

பிரீத்தி வர்மா லால்

“லைம் வேண்டுமா?” எனது ட்ரினிடாட் வழிகாட்டி கேட்ட முதல் கேள்வி.

“லைம்? வேண்டாம்.” எனக்கு ஒன்றும் குமட்டல் வரவில்லையே, பிறகு எதற்கு. என்றாலும், 14,330 கிமீ தூரம் கோவா முதல் போர்ட் ஆஃப் ஸ்பெயின் வரை நான் பறந்து வந்தது என்னவோ வாஸ்துவம் தான்.

“உங்கள் இடுப்பை கிரீஸ் செய்கிறீர்களா?” அடுத்த கேள்வி சட்டென வந்தது. என் காதுகளில் ஏதோ மணியடித்ததோ? CNNல் தொலைக்காட்சி, ட்ரினிடாட் பேச்சுச் சாயலை உலகிலேயே 10ஆவது வசீகரமான பேச்சுச் சாயல் என்று தரவரிசைப் படுத்தியது, ஆனாலும் இடுப்புக்கு யார் கிரீஸ் தடவுவார்கள்? கிரீஸ் தடவுவதற்கு, எனது நடு உடம்பு ஒன்றும் மோட்டரோ, ஈட்டிமரச் சாமானோ அல்லவே. “சரி, நாம் இரவு சாப்பாட்டுக்கு பஸ் அப் ஷாட் குடைவோமா?” வழிகாட்டி எதார்த்தமாக இன்னொரு ட்ரினிடாட் சொல்லை வீசினார், என் மனது போர்ட் ஆஃப் ஸ்பெயினில் மேலும் சிக்கிக் கொண்டது, அது கரீபியக் கடலில் உள்ள ஒரு குட்டிக் கயிறு-போன்ற தீவு, அதில் முதன் முதலில் களிமண் வீடு களே வாழ்வைத் தொடங்கியன, பிறகு நாளடைவில் அது ட்ரினிடாட் அன்ட் டோபாகோ (T&T) என்ற இரட்டைத் தீவுகளின் தலைநகரமாக முடிசூட்டிக் கொண்டது.

அன்றிரவு ட்ரினிடாடில், நான் அவர்களின் வினோதமான சொற்களைத் திரட்டிக் கொண்டிருந்தேன். ‘லைம் அல்லது லைமிங்’என்பது, ‘ஒன்றுகூடிச் சந்திப்பது’ அல்லது ‘சேர்ந்து சுற்றுவது’ என்று அர்த்தம்; ‘இடுப்பை கிரீஸ் செய்வது’ என்றால், நடனமாடுபவர்களின் இடுப்பு எண்ணெய் தடவியது போல லாவகமாக அசைவது; ‘பஸ் அப் ஷாட்’ என்றால், சுற்றி மடித்துக் கிழித்த ஒரு தட்டையான பிரெட், எனவே அது அலங்கோலமாக, செதில்-செதிலான சொரசொரப்புடன், கிழிந்த டீ-ஷர்ட் போலத் தோன்றும்.

இன்னும் இந்தப் பட்டியலில் பெஸ் (அசத்தல்), ஹட்டா (செய்ய வேண்டும்), ஊ யூ (நீங்கள் என்ன?), குனுமுனு (ஒரு முட்டாள்) என்ற வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். எனினும், இதற்குப் பதிலாக நான் ஒரு நோபல் பரி சாளரிடமிருந்து வார்த்தைகளை வாங்கிக்கொள்ள எண்ணினேன். அவர் தன் குழந்தைப் பருவத்தை ட்ரினிடாட் தலைநகரத்தில் தான் கழித்தார், பிறகு 1950 -இல் ஆக்ஸ்போர்டுக்குச் சென்றார். ட்ரினிடாட் பற்றிய எனது முதல் கற்பனைகள் இம்மனிதரின் கதையிலிருந்தே வந்தது. மூட நம்பிக்கையான ஆண்களும்,



எரிச்சலூட்டும் பெண்களும் அடைந்து போன வீடு, அதில் தன் சொந்த வீட்டுக்காக ஏங்கித் தவிக்கும் ஒரு மனிதர். இது, நான் முதன்முதலில் ட்ரினிடாடை காண உதவிய, Sr VS நைபாலின் புகழ்பெற்ற நாவல் திரு பிஸ்வாஸுக்கு ஒரு வீடு (ஏ ஹவுஸ் ஃபார் மிஸ்டர் பிஸ்வாஸ்).

அது ஒரு கற்பனை 'வீடாக' இருக்கலாம், ஆனால் TT கார்டியன் எழுத்தாளரும் எழுத்தாசிரியாருமான சீபர்சாட் நைபாலும் மனைவி திரௌபதியும் (VS நைபாலின் பெற்றோர்கள்) வசித்த குடும்ப இல்லமான வெள்ளை வீடு, இன்றும் தலைநகரத்தின் சென் ஜேம்ஸ் பகுதியில் நிலையாய் நிற்கிறது. நைபாலின் ட்ரினிடாட் வாசம் காலங் கடந்துவிட்டது, இன்று அவருடைய குழந்தைப்பருவ வீடு வெறிச் சோடிக் கிடக்கிறது. பூட்டுப் பிணைத்த இரும்புக் கதவு, இறுக்கமாக அடைத்த கண்ணாடி ஜன்னல்கள், சுவரோரக்



*பிரபல பாடகர் பாப் மார்லியின் முக அமைப்பில் ரம் பாட்டில்.*



கைப்பிடிகளின் மேல் அலங்கோலமாய் தொங்கும் கருப்பு மின் கம்பிகள். அந்த நிசப்தம் ஏமாற்றுவதாக இருந்தது - அதன் வெள்ளைச் சுவர்களுக்குள் ஒரு சிக்கலான கதை விஸ்வரூபம் எடுப்பதைக் கற்பனை செய்ய எனக்குத் தெம்பே இல்லை. ஆனாலும் நைபால் பிரியர்களோ, இந்த நோபல் பரி சாளருக்கு மரியாதை செலுத்தும் நிமித்தமாக அந்த ஒற்றைவழிப் பாதைத் தெருவில் புகுந்து நகர்ந்தனர்.

ஓர் எழுத்தாளரின் வார்த்தைகள் மட்டுமே வருடிக் கொடுப்பதாயில்லை, ட்ரினிடாடில்; அந்த கரீபியாவின் தெற்குக் கோடியிலே வெனிசூலாவுக்கு வெகு அருகே (வெறும் 11 கிமீ) ஒயிலாக உட்கார்ந்திருந்த தீவில். ஆதியில் குடியேறியவர்கள் அமெரிந்தியர்கள், அவர்களே அதற்கு லேனே, முனுமுனுப்புப் பறவைகளின் பூமி, என்று பெயரிட்டனர். அவர்கள் முனுமுனுப்புப் பறவையை புனிதமாகப் போற்றினர், அதனால் எவரொருவர் அதைக் கொன்றாலும் அவர் நரகத்தில் எறியப்படுவது உறுதி என்று நம்பினர். இன்றும்கூட, முனுமுனுப்புப் பறவையின் முனகல் ட்ரினிடாடுக்கு ஒரு இசைச் சூழலைக் கொடுக்கிறது. யேரட்டே முனுமுனுப்புப் பறவை சரணாலயத்தில் (மார்கஸ் பள்ளத்தாக்கு) நூற்றுக்கணக்கான முனுமுனுப்புப் பறவைகள் சிறகடித்துக் கொண்டு உள்ளேயும் வெளியேயும் நகர்ந்து, தியோ மற்றும் குளோரியா ஃபெர்குசனின் உல்லாச விடுதியில் சிவப்புத் தீனிக் கூண்டுகளிலிருந்து மலர்தேனை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தன. 17 வகையான முனுமுனுப்புப் பறவைகளில் குறைந்தது 13 வகையாவது யேரட்டேவில் காண முடிகிறது. அவை அத்துணை அவசரமாக கீச்சொலி எழுப்பிக் கொண்டும் சிறகடித்துக் கொண்டும் இருந்தன, எனவே சிறகுகளின் மஞ்சள், பச்சை நீல வண்ணங்களின் நிறப்பிரிகை விளைவை கண்ணுறக் கடினமாக இருந்தது.



*அனாட்டோ என்னும் இளஞ்சிவப்பு நிற பழம்.*

*மிகப்பெரும் கடல் ஆமைகளில் ஒன்றான 800-பவுன்டு தோல்முதுகு ஆமைக்கு மில்லியன் கணக்கான வருடம் ட்ரினிடாடே தாயகமாக இருந்துவருகிறது. மாபெரும் வனவிலங்குக் காப்புத் திட்டத்தின் கீழ் அவை பாதுகாக்கப்படுகின்றன.*



முனுமுனுப்புப் பறவைகளின் கீச்சொலியை கரைத்துவிடும் ஒரே ஓசை, ஸ்டீல் பேனின் ஊம்பா மேளம் தான், இது 20ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரே இசைக் கருவி. பல தசாப்தங்களுக்கு முன்பு, யாரோ ஒருவர் 55-காலன் ரச ாயனக் கலன் ஒன்றைத் தூக்கி, முதல் சுருதியை ஒலித்தார். ட்வாங், பேன் வாசிப்பவருக்குப் பரவசம் ஊட்டியிருக்க வேண்டும். விரைவில், அந்த வீசியெறியப்பட்ட காலன்களின் இதயங்களை அடித்து உள்ளீடற்றதாக ஆக்கி, ரப்பர் முனையுள்ள நேர்க் குச்சிகள் மூலம் இசை வாசிக்கப் பயன்படுத்தப்பட்டது. இந்த மேளம் எவ்வளவு ஈர்ப்பு கொண்டிருந்தது என்றால், சிறிது காலத்துக்குள் ட்ரினிடாடின் கைதேர்ந்த பேன் வாசிப்பவர்கள், தொழிற்சாலை டிரம்களை வைத்து கச்சேரி நடத்தத் தொடங்கினார்கள். இன்று, ட்ரினிடாட் என்றாலே ஸ்டீல்-பேன் இசை என்று அது பெயர் பெற்றுள்ளது, அங்கே ஸ்டீல் இசைக் குழுக்கள் இசைவிழாக் கச்சேரிகளுக்காக அவ்வருடத்தின் காலிப்சோவை இயற்றிக் கொண்டிருந்தனர். ட்ரினிடாடில் பிறந்த இன்னொரு இசை வகை, சட்னி சோகா, இது ஆங்கிலம், இந்தி, ஹிங்கிலீஷ் மற்றும் போஜ்பூரி ஒன்றிணைந்த ஒருவகையான இசை, இதில் வழக்கத்துக்கு மாறான இன்னிசையும், பாடல் வரிகளும் சேர்ந்து இந்திய இசைக் கருவிகளின் ஒரு கதம்பமாக காதுக்கு விருந்தூட்டுகிறது.

## அமைதி நேரம்

ஒரு நாள் இரவு ட்ரினிடாடில், நான் இசையை விட்டுவிட்டு, அமைதியாக





## ட்ரினிடாட் துணுக்குச் செய்திகள்

- *ராப் பாடகரும், பாடலாசிரியரும், பாடகருமான நிக்கி மினாஜ் செயின்ட் ஜேம்ஸில் தான் பிறந்து, ஐந்து வயது வரை தன் பாட்டியுடன் வாழ்ந்தார், பிறகு தன் பெற்றோர்களுடன் நியூ யார்க் நகருக்குக் குடிபெயர்ந்தார்.*
- *ட்ரினிடாட் அண்ட் டொபாகோ மட்டுமே, இன்னொரு நாட்டின் பெயரை தன் தலைநகரமாகக் கொண்ட ஒரே நாடு: போர்ட் ஆஃப் ஸ்பெயின்.*
- *ட்ரினிடாடில் உள்ள பிட்ச் ஏரி தான் உலகிலேயே மிகப்பெரிய இயற்கையான ஆஸ்பால்ட் படிமம் கொண்ட இடம், அது சுமார் 100 ஏக்கர் பரப்பும் 245 அடி ஆழமும் கொண்டது.*

நேரத்தைக் கழிக்க விரும்பினேன். மட்டூரா கடற்கரையில் ஓர் இருள் கவ்விய இரவின் நிசப்தத்தில் அரிதான தோல்முதுகுக் கடல்ஆமை அட்லாண்டிக் பெருங்கடலில் நீந்திக் கரையோரம் ஒதுங்குவதைக் கண்டேன், அது வெதுவெதுப்பான ட்ரினி மணலில் மென்ஓடு முட்டைகளை இட்டது. மிகப்பெரும் கடல் ஆமைகளில் ஒன்றான 800-பவுன்டு தோல்முதுகு ஆமைக்கு மில்லியன் கணக்கான வருடம் ட்ரினிடாடே தாயகமாக இருந்துவருகிறது. அன்றிரவு மட்டூராவில் கையில் சிவப்பு டார்ச்லைட் ஏந்திக்கொண்டு வெறுங்காலில் நடந்தவனாக, அந்த கனத்த, கர்ப்பமான தாய் ஆமையைத் தேடினேன். அவள் தன் பின்புறத் துடுப்புகளால் திறமையாகத் தோண்டிக் கொண்டிருந்தது, பிறகு முட்டையிடுவதற்குப் போதிய இடம் கிடைத்ததும், ஏறக்குறைய 100 மென்ஓடு முட்டைகளை இட்டு, அவற்றை மணலால் மூடிவிட்டு, நீந்திச் சென்றுவிட்டது. பிறகு திரும்பி வரவே இல்லை. ஆமைக் குஞ்சுகள் 60 நாளில் பொறிக்கப்படும். தோல்முதுகுத் தாய்-ஆமை அவற்றை இனி ஒருபோதும் பார்க்கப் போவதில்லை. ஆனால் ட்ரினிடாடில், ஆமைக் குஞ்சுகள் பாதுகாப்பாக இருக்கும். மாபெரும் வனவிலங்குக் காப்புத் திட்டத்தின் கீழ் அவை பாதுகாக்கப்படுகின்றன.

“ட்ரினிடாட் சிக்கல் மிகுந்த இடம் போலத் தோன்றலாம், ஆனால் அதைத் தெரிந்தவர்களுக்கு அது ஓர் எளிய, காலனிய, கலைநயமற்ற சமுதாயம்,” என்று எழுதினர் VS நைய்பால். குயின்ஸ் பார்க் சாவன்னாவில் உலகின் மாபெரும் போக்குவரத்துக் குறுக்குசாலை அருகே, நான் அந்த நோபல் பரிசாளருடன் வெட்டிச் சண்டையில் ஈடுபட்டேன். ஆம், ட்ரினிடாட் ஓர் எளிய, காலனிய இடம் தான், ஆனால் அது கலைநயமற்ற சமுதாயம் அல்ல. உங்கள் கருத்தைத் திருத்திக் கொள்ள வேண்டும், திரு நைய்பால் அவர்களே.

புகைப்படங்கள்: பிரீத்தி வர்மா லால்
வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி



# பாலூட்டும் தாய்மார்களின்
# தனியுரிமையும் கண்ணியமும்



வி. முத்துக்குமரன்

மருத்துவமனையில் அந்தக் காட்சியைப் பார்த்த (D 3011) RC ரெவாரி மெயின் தலைவர் பிரதீப் நருலாவும், செயலாளர் அருண் குப்தாவும் நெகிழ்ந்தனர். புற நோயாளிகளுக்கான இடத்தில் திறந்த வெளியில் சில தாய்மார்கள் தங்களது குழந்தைகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தனர். சில தாய்மார்கள் சேலை முந்தானையில் மறைத்துக் கொண்டு பாலூட்டிக் கொண்டிருந்தனர்.




வேறு சிலர் வெட்கப்பட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டனர். இப்படி மருத்துவமனைக்கு வரும்போது பாலூட்டும் தாய்மார்களுக்கு சங்கடம் நேராமல் இருக்கும் வழியைக் காண முடிவு செய்தோம் என்றார் அருண் குப்தா.

பாலூட்டும் தாய்மார்களுக்கு வசதியாக மகப்பேறு அறை (Matritiv Kaksh) திட்டத்தின் கீழ் மருத்துவ மனையின் புறநோயாளிகள் பகுதியில் 10 அடிக்கு 9 அடி பரப்புள்ள சிறிய அறையில் திரைச்சீலைகள், மேசை, நாற்காலிகள், கட்டில் என சுத்தமாகவும், சுகாதாரமாகவும் அமைக்கப் பட்ட அந்த அறையில் ஒரே நேரத்தில் ஆறு பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்ட லாம். குழந்தைகளுக்கு நிப்பிள்களும் வழங்கப் பட்டன. கைக்குழந்தை களைக் எப்படி கையாள்வது போன்ற செய்திகளைக் கொண்ட படங்களும் வைக்கப்பட்டுள்ளன.

தாய்-சேய் பந்தம், நலம் ஒன்றே நமது குறிக்கோள். குழந்தைகளைக் குஷி படுத்த மின்விசிறியில் கார்ட்டூன் படங்கள் வைக்கப்பட்டுள்ளன என்றார் குப்தா.

சிற்றறை குழந்தைகளுக்கான படங்கள், சுவரொட்டிகளுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், குழந்தைகளுக்குச் செய்யவேண்டியது, செய்யக் கூடாதாதது என்ன என்பதை இந்தியில் விளக்கும் செய்திகள் இடம்பெற்றுள்ளன. தாய்மார்கள் மகிழ்ச்சியுடன் இருக்க வகை செய்யப் பட்டுள்ளது என்று நருலா கூறினார்.

இந்தச் சிற்றறையைத் திறக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாவட்ட ஆளுநர் ரவி சவுத்ரி ரோட்டரி சங்கத்தின் புதுமையான, மக்களுக்குத் தேவையான செயல்பாடுகளைப் பாராட்டினார். இத்திட்டம் தாய்மார் களுக்குப் பெரிதும் உதவும் என்றார்.

தாய்மார்கள் பாலூட்டுவதற்கான சிற்றறையை அமைப்பதற்காக ரூ.80 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது என்று கூறிய அருண் குப்தா, இதைப் போல் எதிர்காலத்தில் ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்களிலும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி



# DISTRICT GOVERNORS 2018–2019




3141 Shashi Sharma
3142 Ashes Ganguly
3030 Rajiv Sharma
3262 Bhabani Prasad Chowdhury
3131 Shailesh Palekar
3132 Vishnu S Mondhe
3150 Ramesh Vangala
3170 Ravikiran Kulkarni
3160 Konidala Muni Girish
3020 Guddati Viswanadh
3182 Abhinandan A Shetty
3190 Suresh Hari S
3231 C R Chandra Bob
3232 Babu Peram
3181 Rohinath P
2981 S Piraiyon
3220
3202 E K Ummer
2982 Nirmal Prakash A
3291
3201 A Venkatachalapathy
3000 RVN Kannan
3211 E K Luke
3212 K Raja Gopalan
3220 Dushan Soza

# டோரண்டோ மாநாடு



RI தலைவர் இயன் ரிஸ்லி
**House of Friendship** துவக்க விழாவில்.





**PRIP** ராபர்ட் ஸ்காட், **TRF Trustee** தலைவர் பால் நெட்சல் மற்றும் **PRIP** ராஜேந்திர சாபு.



**TRF Trustee Elect** குலாம் வஹன்வதி, **RID C** பாஸ்கர் மற்றும் மாலா பாஸ்கர்.



**RIDNs** கமல் சங்க்வி, பரத் பாண்டியா மற்றும் மாதவி பாண்டியா.



ஜூலியட் ரிஸ்லி



**TRF** அறக்காவலர்கள் — அறங்காவலர் சுஷில் குப்தா மற்றும் அவர் மனைவி வினிதா அறிமுகப்படுத்தப்படுகிறார்கள்.



கனடா பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ.





**RI** தலைவர் இயன் ரிஸ்லி மறைந்த தலைவர் சாம் ஓவோரியின் மனைவி நோரா ஓவோரி மற்றும் மகனுக்கு ஓவோரியின் நினைவாக **RI** விருது வழங்கினார்.





தேசிய கொடிகளின் அணிவகுப்பு.



PRIDs அஷோக் மகாஜன் மற்றும் Y P தாஸ்.



RI தலைவர் இயன் ரிஸ்லியின் பேரக் குழந்தைகள்.

புகைப்படங்கள்: ஜெய்ஸ்ரீ, மைக் தோரன் மற்றும் Rotary International
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# உங்கள் ஆளுநர்களுடன் ஒரு சந்திப்பு

ரஷீதா பகத், ஜெய்ஸ்ரீ



## சவால்கள் அவருக்கு ரொம்பப் பிடிக்கும்

**பிங்கி பட்டேல்,** மைக்ரோடனலிங் மற்றும் கழிவு மேலாண்மை, RC பரோடா மெட்ரோ, D 3060

அவருடைய மைக்ரோடனலிங் தொழில் பெண்களுக்கு சற்று இயல்பானதல்லவே என்று கேட்கும்போது, பிங்கி பட்டேல் புன்னகையுடன் பதிலடி கொடுக்கிறார்: "சவால்கள் எப்போதுமே எனக்கு ரொம்பப் பிடிக்கும்." இந்தியாவில் ரோட்டரி டிஸ்ட்ரிக்ட் கவர்னர் பதவிக்கு உயர்ந்த அரிய பெண்மணிகளின் பட்டாளத்தில் இடம்பிடித்ததும் நிச்சயமாக அப்படிப்பட்ட ஒரு சவாலாகத் தான் இருந்திருக்க வேண்டும். இவர் தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட இன்னொரு சவால் என்னவென்றால், 102 சங்கங்களும் 4,300க்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் கொண்ட தனது டிஸ்ட்ரிக்டில் மேலும் 1,000 உறுப்பினர்களைச் சேர்க்கப் போகிறாராம். இந்தச் சவாலில் இன்னுமொரு சவாலும் ஒளிந்துள்ளது; இவர்களில் குறைந்தது பாதிப் பேர் பெண் உறுப்பினர்களாக இருக்க வேண்டுமாம்!

கவர்னர் என்ற வகையில் இந்த வருடம் பிங்கியின் முன்னுரிமைகள்: எழுத்தறிவு, பெண் அதிகாரம் மற்றும் பெண்களுக்குச் சுகாதாரம். 2001ல் அவர் ரோட்டரியில் இணைந்ததற்குக் 'காரணம், ''நான் சமுதாயத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினேன், ஆனால் அதைத் தனியாக என்னால் செய்திருக்க முடியாது.'' சரி, 17 வருடத்துக்கு முன்பு ரோட்டரியில் சேர்ந்த போது, அதுவும் அந்தச் சங்கத்தின் முதல் பெண் உறுப்பினராக நுழைந்த போது, சங்க உறுப்பினர்களிடம் எப்படிப்பட்ட வரவேற்புக் கிடைத்தது என்று அவரிடம் கேட்டோம், "ஆரம்பத்தில், அவர்கள் சற்றுத் தயக்கம் காட்டினார்கள், ஆனால் கூடிய சீக்கிரத்தில் அது மாறிவிட்டது." சுவாரஸ்யமான ஒரு விஷயம் என்னவென்றால், தன்னை ஆண் ரொட்டேரியன்கள் விரைவில் "ஏற்றுக்கொள்வதற்கு" ஒரு சாதுர்ய மான யுக்தியைக் கையாண்டார். "நான் சங்கக் கூட்டங்களில் வழக்கமாகக் கலந்து கொள்வேன், கூட்டம் தொடங்கும் முன் சரியான நேரத்தில் போய்ச் சேர்வேன், பிறகு விருந்துக்கு முன்னயே கிளம்பிவிடுவேன்... ஆண்களுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை அவர்களுக்குக் கொடுத்தேன்." அவருடைய யுக்தி வேலைசெய்தது, "மற்றவர்கள் தன்னை விசேஷமாக நடத்த வேண்டும் என்று நினைக்கிற பெண்ணல்ல இவள் என்று அவர்களுக்குப் புரிந்ததும் அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். நான்கு வருடம் நான் மட்டுமே எங்கள் சங்கத்தில் ஒரே பெண் உறுப்பினர்!"

ஆக, அவருக்கு ரோட்டரி எதை வழங்கியது? "ஓ, ரோட்டரி எனக்கு நிறையத் தந்தது; சமுதாயத்துக்குச் சேவை செய்ய ஒரு தளத்தை வழங்கியது, அத்தோடு எனது ஆளுமையில் முழு மாற்றம் ஏற்பட்டது. நான் ஒரு காலத்தில் இருந்ததைவிட இன்று எவ்வளவோ மாறியிருக்கிறேன், மிகுந்த பொறுமையும், நிறைய தன்னம்பிக்கையும், சிறந்த நிர்வாக மற்றும் தலைமைத்துவ திறன்களையும் வளர்த்துக் கொண்டேன்." அதுமட்டுமல்ல, மற்றவர்களின் கோணத்தில் விஷயங்களைப் பார்க்கவும் எனக்கு ரோட்டரி கற்றுத் தந்தது, என்கிறார் அவர்.

சரி, டிஸ்ட்ரிக்ட் கவர்னர் பதவியை அடைய எவ்வளவு கஷ்டத்தைச் சந்தித்தீர்கள்? "உண்மையாகச் சொல்ல வேண்டுமென்றால், அதற்காக நான் கஷ்டப்படவே இல்லை. பெண்களின் மனதில், 'நான் ஒரு பெண், அதனால் மற்றவர்கள் என்னை வேறு விதமாக நடத்த வேண்டும் அல்லது எனக்கு அதிகக் கவனம் செலுத்த வேண்டும்' என்ற மனப்பான்மை இல்லாவிட்டால், பிறர் உங்களை இலகுவாக ஏற்றுக்கொள்வார்கள்... ரொம்பச் சாதகமாகவும் நட்போடும் பழகுவார்கள்."

அவருடைய TRF இலக்கு எவ்வளவு? "நான் எனக்கும், என் டிஸ்ட்ரிக்டுக்கும் ரொம்ப அதிகமான இலக்கை அமைத்துக் கொண்டேன்; இதுவரை நாங்கள் எட்டாத $1 மில்லியனை திரட்ட விரும்புகிறேன், அதைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது," என்கிறார் அவர். அதற்குக் காரணம், "நான் ஒரு பெண்ணாக இருப்பதால், சுலபமாகப் பணம் கேட்க முடிகிறது; ரொட்டேரியன்களிடம் வெறுமனே: "தயவுசெய்து நிதி வழங்குங்கள்; அது எனக்குத் தேவை!" என்று சொன்னால் போதும் என்று கூறி முடித்தார்.

## "அதிசயப் பாதை"யில்

**ஷஷி ஷர்மா,** பொருள் கொள்முதல்,
RC பாம்பே ஈஸ்ட், D 3141



சமூகத்துக்கு நல்லது செய்ய வேண்டுமென்று 1992ல் ரோட்டரியில் இணைந்தார். TRFல் 'உலகச் சாதனையை' படைக்க ஓர் அசரவைக்கும் குறிக்கோளை வகுத்துள்ளார்; உலகில் மேலும் நன்மை செய்ய TRFக்கு உதவுவதற்காக $7 மில்லியனைத் திரட்டுவதே அந்நோக்கம். சென்ற வருடம், தனது டிஸ்ட்ரிக்டில் $2.5 மில்லியன் திரட்டப்பட்டது என்கிறார், இந்தத் தொகையை மூன்று மடங்காக உயர்த்த முடியும் என்று அவருக்குத் தன்னம்பிக்கை உள்ளது.

உறுப்பினர்களைக் கூட்டுவதற்கு ஏற்கனவே ஒரு திட்டம் தீட்டியுள்ளார், "நாம் ரோட்டரியில் உறுப்பினர் பற்றிப் பேசும்போது மக்கள் ரோட்டரி இயக்கத்துக்கு விசுவாசமாக இருப்பதில்லை என்ற அக்கறை குறிப்பாக என் மனதை உறுத்தியது. அந்த விஷயத்தில் நமது யுக்தி, உரையாடல் ஆகிய இரண்டையும் மாற்ற வேண்டும், மாற்ற முடியும் என்ற தன்னம்பிக்கை இருக்கிறது."

திட்டப்பணிகளைப் பொறுத்தவரை, "ரோட்டரியின் ஆறு சிறப்புக் கவன அம்சங்களிலும் நீடித்த தன்மை, வெளிப்படைத் தன்மை என இரண்டும் உள்ள திட்டப்பணிகளைச் செய்ய விரும்புகிறார். என்றாலும் ஒன்றைப் பற்றி தெளிவாக இருக்கிறார்; "நாம் எதைச் செய்தாலும், அதில் ஒரு சுவடு பதித்துச் செல்ல வேண்டும் என்பது உறுதியான குறிக்கோள். ஏற்கனவே எங்கள் டிஸ்ட்ரிக்ட், குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சையில் சேவை ஆற்றி வருகிறது. 400க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சையோடு நிறுத்திக் கொள்ளாமல், நான்கு இலக்கு எண்ணாக உயர்த்த வேண்டும்."

TRF நிதித் திரட்டல், நீடித்துழைக்கும் திட்டப்பணிகள் என்ற இரண்டுக்கும் யுக்திகளை வைத்துள்ள ஷர்மா, CSR மூலம் செலவழிப்பதற்காக கார்பரேட்களுடன் கைகோர்ப்பதற்கென்றே தனிக் குழுவை அமைத்துள்ளார், மும்பையில் தான் சில பெரும் கார்பரேட் நிறுவனங்களின் தலைமையகங்கள் இடம்பெற்றுள்ளன. "விசேஷக் கவனம் செலுத்தினாலொழிய; மற்றவர்களுக்கும் பொறுப்பைப் பிரித்துக் கொடுத்து அதிகாரம் அளித்தாலொழிய, பலன்கள் கிடைக்காது. நுணுக்கமாகத் திட்டமிடுவதே எனக்குள்ள தனி பலம், எல்லா திட்டங்களையும் வகுத்து விட்டேன். சமூகத்துக்கும், ரோட்டரிக்கும், எனக்கும் கூட உண்மையான வித்தியாசத்தை ஏற்படுத்தவிரும்புகிறேன்," என்கிறார்.

## நீர்நிலைகள் மேம்படச் செயல்படும் ராஜகோபால்

**K ராஜகோபாலன்**
கட்டடத் தொழிலதிபர், RC குற்றாலம், D 3212

1998ம் ஆண்டு நண்பர்கள் கேட்டுக் கொண்டதால், ரோட்டரி சங்கத்தில் சேர முயன்றபோது, இவரது விண்ணப்பத்தை அப்போதைய ரோட்டரி மாவட்ட ஆளுநர் நிராகரித்துவிட்டார். அப்போது விதிகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டன. தொடர்ந்து போராடி உறுப்பினர் ஆகிவிட்டேன்.

1971ம் ஆண்டு மாணவராக இருந்தபோது ரோட்டராக்ட் உறுப்பினராகவும் (Rotaractor), பிறகு 40 ஆண்டுகள் ஜேசி (Jaycee) உறுப்பினராகவும் இருந்த ராஜகோபாலன் வெளிநாட்டில் நான்கு ஆண்டுகள் இருந்துவிட்டு, தற்போது நாடு திரும்பி ரோட்டரியில் இணைந்துள்ளார்.

விவசாயத்தின் மீது அக்கறை கொண்டுள்ள அவர் நீர்நிலைகளையும் கால்வாய்களையும் புதுப்பிக்கும் திட்டத்தில் இறங்கியுள்ளார். எங்கள் ஊர் வானம்பார்த்த பூமி. அங்கே வறண்ட நிலத்தைப் பார்த்தால் வருத்தமாக இருக்கிறது என்கிறார்.



இதய நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 2012ம் ஆண்டு தங்க இதய திட்டம் (Golden Heart project) அறிமுகப்படுத்தி 620 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 3,212 குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

மாற்றுத் திறனாளிகளுக்காக சேவை புரிந்து வரும் அமர் சேவா சங்கம் தன்னார்வ இயக்கத்துக்கு சூரிய சக்தி உற்பத்திப் பிரிவை அமைக்க உலகளாவிய நிதி கிடைத்தது குறித்து மகிழ்ச்சி அடைந்துள்ளார் ராஜகோபால். இது போன்ற பணிகளுக்காக ஜோஹோ கார்ப்பரேஷன் (Zoho Corporation) என்ற நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பைப் பெற முயன்று வருகிறார்.

TRFக்கு 5.15 லட்சம் டாலர் (சுமார் ரூ.3.60 கோடி) அளிக்க இலக்கு நிர்ணயித்துள்ளார். முப்பது ரோட்டரி உறுப்பினர்கள் அதிகமாக நன்கொடை தர உறுதி அளித்துள்ளனர். 4 ஆயிரமாக உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை 10 ஆயிரமாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளார். பல்வேறு காரணங்களுக்காக ரோட்டரியின் செலவு அதிகரித்துள்ளதாலும் இது பெரிய சவாலாக உள்ளது என்றார் ராஜகோபாலன்.

அனைத்து மகளிர் ரோட்டரி சங்கங்களில் மொத்தம் 350 பெண் உறுப்பினர்கள் உள்ளனர். ராஜகோபாலின் மனைவி வாசுகி தேவி குற்றாலம் சக்தி அனைத்து மகளிர் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினர் ஆவார். ஒக்கி புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அந்த அமைப்பினர் பாராட்டத் தக்க தொண்டினை ஆற்றியிருக்கிறார்கள் என்றார்.

ரோட்டரி கூட்டங்களில் மதுபானம் வழங்குவது பெண்கள் பங்கேற்பதற்கு இடையூறாக இருக்கிறது என்றார் ராஜகோபாலன்.



## வெள்ளிவிழாக் காணும் கண்ணன்

**RVN கண்ணன்**
போக்குவரத்து வாகனங்களை இயக்குபவர், RC மதுரை டௌன்டவுண் D 3000

ரோட்டரியில் 1993-94ம் ஆண்டு இணைந்து 25 ஆண்டுகள் பணியைப் பூர்த்தி செய்து, வெள்ளிவிழாக் கொண்டாடும் இந்த ஆண்டு ரோட்டரி மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்கும் அவர் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறார். ரோட்டரியின் மூலம் ஏராளமான நண்பர்கள் கிடைத்துள்ளனர். குறிப்பாக 2009ம் ஆண்டு உடல் நிலை பாதிக்கப்பட்டபோது, என் மனைவிக்கு ஆறுதலையும், தைரியத்தையும் தெரிவித்தனர்.

இந்த மாவட்டத்திற்கு உட்பட்ட ஒவ்வொரு சங்கமும் ஒரு கிராமத்தை தத்தெடுத்துக் கொண்டு, அதற்கான திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். ஆண்டு இறுதியில் பல "ரோட்டரியின் மகிழ்ச்சி கிராமங்கள்" உருவாக்கப்படும் என்றார் கண்ணன். சர்வதேச மற்றும் அனைத்து மாவட்ட நட்புறவுப் பரிமாற்றத் திட்டங்கள், ரோட்டரி இளம் தலைவர் விருதுகள் (RYLAs), சார்க் நாடுகளுக்கான "அமைதி பிரசார இயக்கங்கள்" ஆகிய பல திட்டங்களுக்கு உலகளாவிய நிதியுதவி கிடைத்ததற்கு உற்சாகம் அடைந்துள்ளார்.

வானவில் திட்டத்தின் கீழ் அனைத்து ரோட்டரி சங்கங்களும் ஏழு திட்டங்களை மாதந்தோறும் செயல்படுத்தும் என்று கூறிய அவர், ரோட்டரி சங்கங்களுக்கு இடையில் நட்புறவை வலுப்படுத்த இது ஒரு வழியாகும் என்றார்.

மாவட்ட ரோட்டரியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளார். ரோட்டரியில் அதிக பெண் உறுப்பினர்களைச் சேர்க்க விரும்புகிறார். அத்துடன், தி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு 1.75 மில்லியன் டாலர் (சுமார் ரூ. 12.08 கோடி) பங்களிக்க இலக்கு நிர்ணயித்துள்ளார்.

கண்ணனின் மனைவி சரளா அனைத்து மகளிர் அமைப்பான மதுரை மல்லிகை ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார். பல ரோட்டரி சங்கத் தலைவர்களின் மனைவியர் ரோட்டரி திட்டப் பணிகளில் ஈடுபடத் தூண்டுகோலாக சரளா இருக்கிறார் என்றார் கண்ணன்.

## புதிதாக தலஸ்ஸீமியா உருவாவதை ஒழிப்பதே அவரது நோக்கம்

**ஆஷஸ் கங்குலி,** அனாலிட்டிகல் இன்ஸ்ட்ரூமெண்ட்ஸ் மார்கெட்டிங், RC தானே ஹில்ஸ், D 3142



தனது டிஸ்ட்ரிக்டில் உள்ள 3,200 உறுப்பினர் எண்ணிக்கையை குறைந்தது 15 சதவீதம் அல்லது இன்னும் 500 உறுப்பினர்களை அதிகரிக்க விரும்புகிறார், மேலும் "நாங்கள் சேர்க்கும் ஏழு உறுப்பினர்களில் குறைந்தது ஒருவராவது பெண்ணாக இருப்பதையும் உறுதிசெய்ய விரும்புகிறேன்."

ஃபவுன்டேஷனை பொறுத்தவரை, இலக்கு $1 மில்லியன்.

ஆஷிஸ் கங்குலி 1998ம் அண்டு IIT-கரக்பூரில் படிக்கும் போது சில நண்பர்களுடன் சேர்ந்து கொல்கத்தாவிலிருந்து சுமார் 18 கிமீ தூரம் உள்ள ராணிகஞ்சில் ரோட்டரி கூட்டத்தில் கலந்துகொண்டார், அதில் கவரப்பட்டு பிறகு ரோட்டரியில் இணைந்தார். 2006-07ல் பிரசிடென்டாக பொறுப்பேற்ற அவர், தொண்டுப் பணிகளுக்காக $10,000 அளவுக்கு நிதி திரட்டினார்.

உங்களுக்கு ரோட்டரி என்ன வழங்கியது என்று கேட்ட போது, டிஜி புன்னகைத்து, "முதன் முதலில், பொறுமையையும், மனிதர்களைத் எப்படி அரவணைத்து செல்வது என்பதையும், தன் தொழிலே வாழ்க்கைக்குச் சகலமும் அல்ல என்பதையும் கற்றுக் தந்தது. தற்போது இந்தியன் அனாலிட்டிகல் இன்ஸ்ட்ரூமெண்ட்ஸ் அசோசியேஷன் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. "ரோட்டரியில் நண்பர்கள் வட்டத்தை விசாலமாக்க வாய்ப்புத் தந்தது; ரோட்டரியால் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் என பல நண்பர்கள் உள்ளனர்."

கவர்னராகப் பொறுப்பாற்றும் வருடத்தில், டிஸ்ட்ரிக்டை பசுமையாக்க, "குறைந்தது 2,00,000 மரங்களை நடப் போகிறோம்." அடுத்ததாக, தலஸ்ஸீமியா தடுப்பதன் தேவை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான தீவிரப் பிரச்சாரத்தின் மூலம் "ஓராண்டுக்குப் பிறகு RID 3142ல் புதிதாக ஒருவருக்குக் கூட தலஸ்ஸீமியா உருவாகாமல் இருப்பதை உறுதிசெய்ய விரும்புகிறார். இந்த நன்னோக்கத்தை முன்னிட்டு, பல்வேறு சாரார்களிடையே, குறிப்பாகக் கல்லூரி மாணவர்களிடையே மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வுப் பிரச்சாரம் நடத்தப்படும். இந்த நோயை தவிர்ப்பதற்கு நெருங்கிய சொந்தத்துக்குள் திருமணம் செய்வதைக் கண்டிப்பாகத் தவிர்த்திடவும், மற்ற முன்னெச்சரிக்கைகளையும் எடுத்து இது புதிதாகத் தலைதூக்குவதை ஒழித்திட வேண்டும் என்று இளைஞர்களுக்கு ரொட்டேரியன்கள் கல்வியூட்டுவார்கள்.

மற்றொன்று திட்டப்பணியில், கண் பார்வையற்ற மாணவர்களுக்கு "விர்ச்சுவல் Eye" திட்டத்தின் மூலம் கணினிக் கல்வி வழங்கப்பட்டு, கைநிறையச் சம்பாதிக்கிற வேலைவாய்ப்புக்குத் தகுதியுள்ளவர்களாக மாற்றும் திட்டப்பணிக்காக, கார்பரேட் நிறுவனத்துடன் கைகோர்க்கத் திட்டமிட்டுள்ளார். "இந்த திட்டப்பணிகளுக்கு ரூ 8 முதல் 10 கோடி தேவைப்படும், இருப்பினும் நாங்கள் இந்த நிதியைத் திரட்டுவோம், கார்பரேட்களுடன் கூட்டுச் சேர்ந்து CSR நிதிகளைப் பெற்றுக் கொள்வோம்."

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# Subscribe NOW!

**Annual Subscription India**
**Rs.420**

## for Rotary News Print Version & e- Version

## For the Rotary year 2018 – 2019




Print version ☐ e- Version ☐

| | No. of copies |
|---|---|
| Rotary News (English) | |
| Rotary Samachar (Hindi) | |

For every new member the pro-rata is Rs 35 a month.

**As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.**

Please attach the TYPED list of individual members with their complete address and PIN Code. Intimate language preference (English / Hindi) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

Rotary Club of ........................................................................................................ RI District ..............................

Name of the President/Secretary ..............................................................................................................

Address ...................................................................................................................................................

...................................................................................................................................................................

...................................................................................................................................................................

City ........................................... State ...................................................... PIN ☐☐☐☐☐☐

STD Code ................................ Phone: Off. .................................... Res. ...............................................

Mobile ........................................................E-mail ........................................................................

Cheque/DD No. ......................................... Dated ......................................... for Rs. .......................................

Drawn on ..............................................................................................................................................

in favour of "ROTARY NEWS TRUST" payable at CHENNAI is enclosed.

Date: President/Secretary

Mail this form to:
Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# RI தலைவர்களின் பாராட்டு மழையில் இந்தியா

ஜெய்ஸ்ரீ

டொராண்டோ மாநாட்டில் RID C பாஸ்கரும் அவரது மனைவி மாலதியும் அளித்த வண்ணமயமான தெற்காசிய விருந்து விழாவில், ரோட்டரியின் மேல்மட்டத் தலைவர்கள் தங்களது பல்லாண்டுகால நீண்ட, மறக்கமுடியாத ரோட்டரி பயணத்தின் அனுபவங்கள், பசுமையான நினைவுகள், சாதனைகள் மற்றும் சவால்களை பகிர்ந்துகொண்டனர்.

“இத்தனை மூத்த தலைவர்கள் இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ளது உங்கள் பாக்கியம். தெற்காசியாவில் உங்கள் சேவைக்கு ரோட்டரி தலைமைத்துவம் எத்தனை மதிப்பு அளிக்கிறது என்பதை இது காட்டுகிறது. உங்கள் பிராந்தியத்தில் ஆற்றப்பட்ட சில தலைசிறந்த தொண்டுப் பணிகள் என்னையும் ஜூலியட்டையும்

*PRIP ராஜேந்திர சாபு RIPE பேரி ரஸினை கௌரவப்படுத்துகிறார். RID C பாஸ்கர் மற்றும் தெற்காசிய வரவேற்பு நிகழ்வின் தலைவர் R தீனச்சந்திரனும் உள்ளனர்.*



வியப்பில் ஆழ்த்திவிட்டன'' என்றார் RI பிரசிடென்ட் இயான் ரிஸ்லீ, அவர் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் மேற்கொண்ட தனது பயணத்தைப் பற்றி, குறிப்பாக உத்தரகாண்ட் வெள்ளத்துக்குப் பிறகு மறுசீரமைப்பு செய்யப்பட்ட பள்ளிகள் பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

இந்தியாவில் ஒருசில PETS நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டது மனதில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, அங்கே சங்க தலைவர்கள் மிகுந்த சுறுசுறுப்பும், அற்புதமான யோசனைகளும் கொண்டு பணியாற்றியதைக் கண்டார். ரோட்டரி நியூஸ் பற்றி விசேஷமாகக் குறிப்பிட்ட ரிஸ்லீ கூறியதாவது: ''இந்தப் பத்திரிக்கை பிரம்மாதமாக இயங்குகிறது... உங்கள் எல்லோருக்கும் வாழ்த்துக்கள்.''



இதற்கு முன்பு, தெற்காசிய ரிசப்ஷன் கமிட்டி தலைவர் ஆர் தீனச்சந்திரன் பங்கேற்பாளர்களை வரவேற்று, இந்நிகழ்ச்சி ஒவ்வோர் ஆண்டும் நாம் ஆவலாகக் காத்திருக்கும் ஒரு தருணம், இது உலகின் மறுபக்கத்திலிருந்து வரும் நிபுணர்களுடன் கலந்துபழகி, மேலும் சிறந்த உறவை வளர்த்துக்கொள்ள உதவுகிறது என்று கூறினார்.

PRIP ராஜேந்திர சாபூ தனது மனமார்ந்த வரவேற்புரையில், ''இன்று இங்கே ரோட்டரியின் மேல்மட்டத் தலைமை நம்மிடையே இருப்பது நமக்கெல்லாம் உண்மையிலேயே ஒரு கௌரவமான சந்தர்ப்பம்'' என்றார்; மேலும், எப்படி இந்த மாநாட்டுக்கான பதிவு 1983ல் 16,000 என்பதிலிருந்து இவ்வருடம் 25,000 என உயர்ந்து ள்ளது என்பதை வியந்து பேசினார். தான் RI தலைவராக இருந்த போது 1991-92ல் கவர்னராக பொறுப்பு வகித்த பேரி ராஸ்ஸினே இப்போது RI தலைவராக பதவியேற்கப் போகிறார் என்பது தனக்குப் பெருமையாக உள்ளது என்றார். ''ரோட்டரியில் எங்கள் பயணத்தை மறக்கமுடியாத, விலைமதிப்பற்ற ஒன்றாக ஆக்கிய எல்லா முன்னாள் பிரசிடென்ட்களுக்கும் மூத்த தலைவர்களுக்கும் நானும் உஷாவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். அதை ஞாபகப்படுத்திப் பார்க்கும் போது, ரோட்டரி எப்படி இத்துணை மனிதர்களின் வாழ்க்கையில் ஒரு புதுமாற்றத்தை ஏற்படுத்த எங்களுக்கு வாய்ப்பு அளித்தது என்று எண்ணி ஆச்சரியப்படுகிறேன், புதுமாற்றத்தின் ஒரு செங்கலாக இருப்பதில் எங்களுக்குப் பணிவான மகிழ்ச்சி.''

தெற்காசிய பிராந்தியத்தில் போலியோ ஒழிப்பு சந்தித்த சாதனைகளும் சவால்களும் பற்றி பேசும் போது, சாபூ அவர்கள் PRIP KR ரவீந்திரனைப் பாராட்டினார்; அவர், போரில் சிக்கித்தவித்த ஸ்ரீலங்காவில் போர் நிறுத்தத்தைக் கொண்டுவரக் காரணமாயிருந்து ''(சண்டைப் பகுதிகளில் வசிக்கும்) குழந்தைகள் போலியோ தடுப்பூசி பெற வழிசெய்தவர்.'' மேலும், வங்கதேச ரொட்டேரியன்களையும் அவர் பாராட்டினார், அவர்கள் ''இப்பகுதியின் போலியோ ஒழிப்பில் தங்கள் நாடே கடைசியாக இருக்கும் என்ற எங்கள் எதிர்பார்ப்பைப் பொய்யாக்கி விட்டார்கள். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், அவர்கள் போலியோ ஒழிப்பில் இந்தியாவை முந்திவிட்டனர். மிக விரைவில் பாகிஸ்தானும் போலியோ இல்லாத நாடாக உருவாகும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்றார்.

TRF ட்ரஸ்டீ தலைவர் பால் நெட்ஸல் இவ்வருடம் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்துக் குச் சென்றுவந்த பிறகு, தெற்காசிய ரோட்டரியின் துடிப்பையும் சக்தியையும் என்னுள் தார்மீகமாக உணர்ந்தேன் என்றார். ''மொத்த நன்கொடையாக $19.1 மில்லியனை வழங்கியுள்ள இந்தியா, TRF நன்கொடையில் உலகிலேயே 2ம் இடத்தில் இருக்கிறது. $1.5 மதிப்புள்ள CSR பங்கேற்பை பெற்றுத்தந்த உங்கள் முயற்சி வியப்புக்குரியது'' என்றார் அவர், தனது இந்தியப் பயணத்தைச் சுட்டிக்காட்டி; மேலும், சென்ற ஆண்டு TRF அறிமுகப்படுத்திய முன்னோட்டத் திட்டத்துக்கு நாட்டில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது என்று சொன்னார்.

நெட்ஸல் மேலும், RC கராச்சி மெட்ரோபாலிடன் உறுப்பினர் ரஃபீக் M ஹபீபுக்கு, ரோட்டரிக்கான அவரது விசேஷப் பங்களிப்புக்காக நன்றி தெரிவித்தார். நைஜீரியா உத்வேகத்துடன் தொடங்கியிருந்தாலும், அதைவிட விரைவில் பாகிஸ்தான் போலியோ இல்லாத நாடாக மாற அதிக வாய்ப்புள்ளது என்று கூறினார். 207 ரோட்டரி சங்கங்களில் 5,000 ரொட்டேரியன்களுடன், வங்கதேசத் தில் ரோட்டரியின் எதிர்காலம், உலகின் பிற பகுதிகளைப் போலவே பிரகாசமாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டார் நெட்ஸல். மாவட்டத்தில் 10 AKS உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு அசந்து போனேன்.''

புதிய ட்ரஸ்டீ தலைவர் ரான் பர்டன் ஒரு வேண்டுகோளை வைத்தார்: ''பால் (நெட்ஸல்) அவர்கள் புருவத்தை உயர்த்தும் அளவுக்கு நீங்கள் எவ்வளவு பெரிய பணிகளைச் செய்திருந்தாலும் சரி, இப்போது அதைவிடப் பெரிய சாதனைகளைப் படைத்து எனக்கு இன்னும் சிறப்பான புன்னகையைக் கொடுங்கள்'' என்றார்.




TRF அறங்காவலர் தலைவர் பால் நெட்ஸெல் TRF அறங்காவலர் சுஷில் குப்தா மற்றும் வினிதா குப்தா கௌரவிக்கின்றனர்.

தனது சமீப இந்தியப் பயணம் பற்றி நினைவுகூறிய RIPE பேரி ராஸ்ஸின், தன்னை "எட்டு நாட்களில் எட்டு டிஸ்ட்ரிக்ட்களுக்கு" அழைத்துச் சென்றதற்காக பாஸ்கரை பாராட்டினார்; மேலும், வருகிற ஆண்டுகளில் இந்தியாவே ஃபவுன்டேஷனின் நெம்பர் 1 நன்கொடையாளராக இருக்கும் என்ற தனது முந்தைய கருத்தை மீண்டும் வலியுறுத்தினார். இந்தியாவில் அவர் சென்ற சில பள்ளிகளில் மாணவர்கள் பின்பற்றிய கைகழுவும் பழக்கம் அவருக்கு ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. "குழந்தைகள் கைகழுவும் தொட்டிகளின் இரு பக்கமும் வரிசையாக நின்று, கூட்டமாகப் பாடிக் கொண்டே கைகளைக் கழுவினார்கள். அத்தோடு நின்றுவிடவில்லை. அந்தப் பாட்டை வீட்டுக்கும் கொண்டுபோய், குடும்பத்தினருக்கும் அந்தப் பாட்டோடு சேர்த்து கைகழுவும் பழக்கத்தையும் கற்றுத்தந்தார்கள். இது, சமூகங்களில் நடத்தை மாற்றங்களை அறிமுகப்படுத்த ஓர் அற்புதமான வழிமுறை." மாவட்ட கவர்னராக இருந்த போது சாபூவின் தலைமைத்து



*இடதுபுறத்திலிருந்து :* 2018-19 TRF *தலைவர் ரான் பர்டன்,* TRF *தலைவர் பால் நெட்ஸெல்,* PRID *ப்ரைன் ஸ்டைல்ஸ்,* RIDNs *கமல் சங்கவி மற்றும் பரத் பாண்டியா.*



PRIP K *ரவீந்திரன்* RI *தலைவர் இயன் ரிஸ்லி மற்றும் ஜூலியட் அவர்களை கௌரவிக்கிறார்.*
RID C *பாஸ்கர் மற்றும் விழா செயலாளர் ஜான் டேனியல் அவர்களும் உள்ளனர்.*



வத்தை குறிப்பிட்டுப் பேசுகையில், "தன்னைத் தாண்டி வெளியே வருவது என்றால் என்ன என்பதை அவர் உண்மையிலேயே எங்களுக்குக் கற்றுத்தந்தார். 'உந்து சக்தியாக இருப்போம்' என்ற எனது மையக் கருத்தின் ஒரு துண்டு அதில் ஒட்டிக்கொண்டு இருக்கிறது" என்றார் ராஸ்ஸின்

மேலும், தான் பிரெசிடென்ட்டின் உதவியாளராக இருந்தபோது பிரெசிடென்ட் பதவி வகித்த ரவீந்திரன் மீது பாராட்டு மழையை பொழிந்தார், அவர் ஸ்ரீலங்காவில் HPV ஒழிப்பதற்கு உற்சாகமாகத் தலைமைதாங்கியது பற்றி சுட்டிக்காட்டினார். "எங்கள் இறக்கைகளுக்கு இறகுகளாக இருந்த உங்களுக்கு நன்றி, என்று முன்னாள் தலைவர்களை நோக்கிக் கூறினார்.

"ஃபவுன்டேஷனுக்கு நமது நன்கொடை அதிகரித்து, நமது சங்கங்களை வலுப்படுத்தி, சமூகங்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய சில அர்த்தமுள்ள திட்டப்பணிகளை நடைமுறைப்படுத்தி" அருமையான ஆண்டை உருவாக்கித் தந்த மண்டல ரொட்டேரியன்களை இயக்குநர் பாஸ்கர் வாழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் மியான்மர், சிங்கப்பூர், மலேசியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பூட்டானிலிருந்து வந்த பங்கேற்பாளர்களும், இந்தியாவிலிருந்து வந்த ஒரு பெரிய அணியும் கலந்துகொண்டனர்.

விருந்து விழாவில் கலந்துகொண்ட ரோட்டரி தலைவர்கள், அதற்குப் பரிபக்குவமாக ஏற்பாடுகள் செய்திருந்த நிகழ்ச்சித் தலைவர் R தீனச்சந்திரன், செயலாளர் ஜான் டேனியல், RID C பாஸ்கர் மற்றும் மாலதி, PRIP KR ரவீந்திரன் மற்றும் வானதி, PRIP கேரி ஹுவாங் மற்றும் கோரின்னா, PRIP ஜான் ஜெர்ம் மற்றும் ஜூடி, TRF ட்ரஸ்டீ சுஷில் குப்தா மற்றும் வினிதா, PRIDகள் அசோக் மஹாஜன் மற்றும் YP தாஸ், RIDNகள் பரத் பாண்டியா மற்றும் மாதவி, கமல் சங்வி, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரஸ்டீ குலாம் வாஹன்வதி, மற்றும் உலகின் இதர பகுதிகளிலிருந்தும் வருகைதந்த ஏராளமான RI டைரக்டர்கள் மற்றும் TRF ட்ரஸ்டீக்கள்.

புகைப்படங்கள்: ஜெயஸ்ரீ
வடிவமைப்பு: N கிஷ்ணமூர்த்தி

# வாட்டர் வீல்கள் தண்ணீர் எடுப்பதை எளிதாக்குகிறது

V முத்துகுமரன்

குழாய்கள் அமைத்தல், நீர் நிலைகளைத் தூர் வாருதல் போன்ற நீர் திட்டப்பணிகள் நாடு முழுவதும் நடத்தப்படும் வேலையில், RC பம்பாய் ஹாங்கிங் கார்டன் D 3141ல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், “இந்த திட்டப்பணிகளில் வழக்கமான பராமரிப்பு, மின்சாரம் அல்லது தளவாடங்கள் போன்ற வைகளில் வரம்புகள் உள்ளன'' என்று கண்டு பிடிக்கப்பட்டது. மேலும், கிராமப்புற பெண்கள் இன்னமும் கடுமையான கஷ்டங்களுக்கு உள்ளா கிறார்கள், ஏனெனில் அவர்களது வீட்டுத் தேவைகளுக்கு ஒவ்வொரு முறையும் 1,525 லிட்டர் தண்ணீரை எடுக்க குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது 1.52 கி.மீ., நடக்க வேண்டும்.

இந்த பெண்களின் அவலத்தைக் கருத்தில் கொண்டு, திட்டப்பணித் தலைவர் அம்ரீஷ் தஃப்தாரி தலைமையிலான ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு, வாட்டர் வீல்களை கொள்முதல் செய்வதிலும் விநியோகிப்பதிலும் ஈடுபட்டுள்ளது - நீர் சக்கரம் என்பது உயர் அடர்த்தி பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டு, இழுப்பதற்கு ஒரு கைப்பிடி பொருத்தப்பட்டிருக்கும் ஒரு சிறிய சக்கரம், இதில் 45 லிட்டர் திறன் கொள்ளளவு கொண்டது - மகாராஷ்டிராவின் டிக்ராஸ், கர்ஜத் மற்றும் அகோலா தாலுகாவில் உள்ள குடும்பங்களுக்காக செய்யப்பட்டது. வாட்டர் வீல் திட்டப்பணியில் இதுவரை கடந்து வந்த உற்சாகமான பயணத்தை நினைவு கூறுகையில்,''ஒரு அமெரிக்க பெண் சிந்தியா கொயினிக் தயாரித்த ஒரு தனித்துவமான தயாரிப்பை *wellowater. org.* என்ற வலைத்தளத்தில் பார்த்து, அவருடைய



தயாரிப்புக்கு காப்புரிமை பெற்றிருப்பதால் நான் அவரை தொடர்பு கொண்டேன். வாபியில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளரான மிட்சுகேமுக்கு அவர் என்னை அறிமுகப்படுத்தினார், அவரிடம் இருந்து இப்போது நாங்கள் வாட்டர் வீல்களை வாங்கி வருகிறோம்.'' என்கிறார் தஃப்தாரி. ஒவ்வொரு வாட்டர் வீலும் 2,000 ரூபாய் ஆகிறது.

மார்ச் 2016 முதல், இந்த குழு 21 கிராமங்களில் 1,000 வாட்டர் வீல்களை 4,000 பயனாளிகளை கொடுத்துள்ளனர். ஏனெனில் ஒரு பெண் நான்கு நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு தண்ணீர் கொண்டுவருவதாகக் கருதுகின்றனர். வாட்டர் வீல் களானது, வீட்டிற்கு அருகே நீர் ஆதாரமில்லாமல் அங்கிருந்து 1-1.5 கி.மீ தூரத்தில் பயணம் செய்து தினமும் தண்ணீர் கொண்டுவர வேண்டியிருக்கும் பெண்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன.



*திட்டப்பணித் தலைவர் அம்ரீஷ் தஃப்தாரி மற்றும் Rtn அனிலா பள்ளை அனந்த்வாடி கிராம மக்களுக்கு வாட்டரர் வீல் வழங்கியபோது.*



### தலையில் சுமப்பதை வரலாறாக ஆக்குங்கள்

தலையில் சுமப்பதை வரலாறாகச் செய்வோம், என்ற கொள்கையோடு வேலை செய்யும் இந்தச் சங்கம் இதுவரை வாட்டர் வீல்களை விநியோகிப்பதற்காக ரூ.20 லட்சம் செலவிட் டுள்ளது. நன்கொடைகள் மற்றும் உறுப்பினர் பங்களிப்பு மூலம் நிதி திரட்டப்பட்டது. "அடுத்த ஆண்டு 65 கிராமங்களைக் கொண்ட கர்ஜத் தாலுக்கில் 2,000 வாட்டர் வீல்களை விநியோகிக்க உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பிக்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம்,'' என்கிறார் தஃப்தாரி.

இதற்கு அடையாளமாக, டிக்ராஸ் தாலுகாவில் கப்லேஷ்வர் கிராமத்தின் பயனாளிகளுக்கு 50 வாட்டர் வீல்களை அளிப்பதற்காக, RC மூர்ஸ்டவுன், D 7500, நியூ ஜெர்சி, அமெரிக்கா, $1,500ஐ நன்கொடையாக வழங்கியுள்ளது. உலக மானிய திட்டத்திற்காக இந்தசங்கம், உள்ளூர் சங்கத்துடன் சேர்ந்து பணியாற்ற உள்ளது

"பிளாஸ்டிக் வாட்டர் வீல்களை தொலைத்தூர இடங்களிலிருந்து தண்ணீ ரைக் கொண்டுவரும் அவர்களுடைய தினசரி துயரத்திற்கு முடிவு கட்டியுள்ளது'' என்கிறார் சங்கத்தின் பிரசிடென்ட் ரொட்டேரியன் திலிப் ஷா.

மும்பையில் நடைபெற்ற ரோட்டரி உலக தண்ணீர் தின கருத்தரங்கில் வாட்டர் வீல் திட்டப்பணி சிறந்த திட்டப்பணி விருதை வென்றது. "எங்கள் மாவட்டத்தில் நீர்ப்பாசன திட்டங்களில் விளக்கக் காட்சி அளித்த 12 குழுக்களில், அதிக பட்ச பயனாளிகள், நிலைத் தன்மை மற்றும் தனிச்சிறப்பு என்ற மூன்று விதிகளின் அடிப்படையில் சிறந்த விருதுக்காக நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோம். நாங்கள் ஐ.நா., அதிகாரிகளின் முன்னிலையில் பாராட்டுக் கள் பெற்றோம்'' என்கிறார் தஃப்தாரி.■



# *Our Esteemed Guest*

**Rtn Barry Rassin & Ann Esther**
RI President 2018–19

PASSION TO SERVE

Rotary Institute 2018
Chennai | 5-7th October
Zone 4, 5 & 6A

## Convener's Message



**RID Basker Chockalingam**
**Ann Malathi**

**Dear Rotary Leaders,**

Rotary Zone Institutes give opportunity to Rotary leaders, past, present and future, to meet and greet each other, exchange ideas and debate on how to take Rotary forward. **Malathi & I** deem it a privilege and pleasure, to invite you and your spouse, to Rotary Institute 2018, to be held during October 5–7, 2018, at **Hotel Leela Palace, Chennai**. With a set of wonderful speakers and world class entertainment, this will be truly an Institute with a difference. We will have the rare opportunity of having with us the Rotary senior leadership, who will make the event a memorable one for us. The dynamic Institute Chairman PDG I S A K Nazar and his wonderful team are making every effort, to ensure that, we all have a grand Rotary Institute 2018 — **Passion To Serve —** at Chennai.

With warm regards,
**RID Basker Chockalingam,** RI Director (2017–19)




## Chairman's Message



**Ann Afzalunnisa**
**PDG I S A K Nazar**

**Dear Rotary Leaders,**

Greetings from Team — Rotary Institute 2018.

It's a great opportunity given by Director / Convener Rtn C Basker to have our **Rotary Institute 2018** at Chennai, at the grand venue — **Hotel Leela Palace,** Chennai — on 5th, 6th and 7th October 2018. Please be ready to witness one of the most memorable Rotary Institute at Chennai. We are all set to deliver an outstanding and memorable Institute. With a galaxy of eminent speakers, a new experience in entertainment and all that a successful Rotary Institute can be remembered for, awaits you. On behalf of Rotary Institute 2018 Team, I welcome you to **Passion to Serve, Rotary Institute 2018.** Please register immediately.

**PDG I S A K Nazar**
Chairman — Rotary Institute 2018

**Please send this form duly filled by post / courier to:**

**Rtn PDG I S A K Nazar,** Chairman, Rotary Institute 2018
Manna Foods, 129, Z Block, 6th Avenue, Anna Nagar, Chennai – 600 040, Phone: 044 2683991, Mobile: 94449 76846
e-mail: rotaryinstitute.chennai2018@gmail.com, nazarisak@gmail.com

# REGISTRATION DATA SHEET

Name: Rtn. ............................................................ Call / Badge Name:............................................

Classification: ..................................................................................................................

Address: ............................................................................................................................

City: .............................................. Pin ......................................... Country ................................

Mobile: ................................................ e-Mail: ...........................................................................

*(Note: Include country and area code for Telephone / Fax Number)*

☐ PDG ☐ IPDG ☐ DG ☐ DGE ☐ DGN ☐ DRFC ☐ DMC ☐ DRC

Home Club: ............................................................ RI District: ..........................................................

Name of Spouse: ...................................................... Call Name: ..........................................................

| Food Preference | | | Collar size |
|---|---|---|---|
| | **Rotarian** | **Spouse** | |
| **Veg** | ☐ | ☐ | ☐ 38 ☐ 40 ☐ 42 ☐ 44 ☐ 46 |
| **Non Veg** | ☐ | ☐ | |

| REGISTRATION | | | Couple | Single | Amount |
|---|---|---|---|---|---|
| **Institute Registration** | **Couple** | **Single** | | | |
| Upto 30th June 2018 | INR 25000 | INR 15000 | | | |
| After 30th June 2018 | INR 26000 | INR 17000 | | | |
| | | | | | |
| GETS (Couple) | 2,3,4 October 2018 | INR 60000 | | | |
| DGs Training Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| DGN Training Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| Dist Trainers Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| COL Seminar | 4th October 2018 | INR 5000 per Person | | | |
| TRF Dinner | 4th October 2018 | INR 5000 per Couple<br>INR 3000 per Single | | | |
| TRF Seminar | 5th October 2018 | INR 5000 per Couple<br>INR 3000 per Single | | | |
| **HOTEL ACCOMODATION** | | | | | |
| The Leela Palace | Double Executive | INR 10000 Per Nite | | | |
| | Single Executive | INR 9000 Per Nite | | | |
| Ramada Plaza | Double Deluxe | INR 8000 Per Nite | | | |
| | Single Deluxe | INR 7000 Per Nite | | | |
| The Savera Hotel | Double Deluxe | INR 7000 Per Nite | | | |
| | Single Deluxe | INR 6000 Per Nite | | | |
| | | | Total | | |

**Kindly tick whichever is applicable.*

*Please note that the Accomodation is purely on first come first serve basis.

| The cheque and draft shall be in favour of **"Rotary Institute 2018"** payable at Chennai. | *Online payment details:*<br>**Account Name:** Rotary Institute 2018<br>**Bank:** Karur Vysya Bank **Branch:** Saidapet, Chennai - 15<br>**Account No.:** 1651155000067299 **IFSC Code:** KVBL0001651 |
|---|---|

The Institute registration covers the following:

a) Inaugural plenary on Friday, Oct 5, 2018 followed by dinner.

b) Lunch and dinner on Saturday, Oct 6, 2018.

c) Lunch on Sunday, Oct 7, 2018.

The other events such as GETS (Couple), DG Seminar, Membership Seminar, DGN Seminar, COL, TRF Seminar, Foundation Dinner have additional registration as mentioned above.

Date: ..........................................                                                    Signature: .................................

# FIFA சிதறல்கள்

## ஜப்பான் காணவந்தோரின் இதயங்களை வென்றது



ஜப்பானிய கால்பந்து அணியும், ரசிகர்களும் உலகெங்கும் உள்ள கால்பந்து ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டனர், ஜப்பான் ஆட்டத் தின் முன்நேரமே இரு கோல்களை அடித்து முன்னிலை வகித்தபோதிலும், கடைசி தருணத்தில் பெல்ஜியத்தின் கோலை தப்பவிட்டுத் தோற்றுப் போயினர், ஆனால் அவர்களின் கண்ணிய நடத்தையில் தான் என்னே அழகு. ஜப்பான் உலகக் கோப்பையில் இறுதி எட்டு அணிகளின் இடத்தைத் தவறவிடுவது இது மூன்றாம் முறை, இருப்பினும் அவர்கள் பிரம்மாதமாக விளையாடினர்.

பெல்ஜியம் ஓர் வியக்கவைக்கும் கோலை அடித்து ஜப்பானிய கால்பந்து வீரர்களை ஸ்தம்பிக்க வைத்தது, அதிர்ச்சியடைந்த பல வீரர்கள் மண்டியிட்டும், கண்ணீரில் நனைந்தனர். தாயகம் திரும்பும் முன், ஜப்பானியர்களின் ஒழுக்கமும் நன்னடத்தையும் முன்னுதாரணம் படைத்து உலகுக்கே வழிகாட்டிவிட்டுச் சென்றனர், உடைமாற்றும் அறையை தாங்களே சுத்தம் செய்து, ரஷிய உபசரிப்பாளர் களுக்கு ‘நன்றியை’ தெரிவித்துவிட்டு சோகத்தின் மத்தியிலும் ஸ்டேடியத்தை சுத்தம் செய்தனர்!

## உங்களுக்குத் தெரியுமா?

- முதல் உலகக்கோப்பை கால்பந்தாட்டம் 13 ஜூலை 1930 அன்று துவங்கியது, அதில் மெக்ஸிகோவை பிரான்சு 4-1 என வீழ்த்தியது.
- முதல் உலகக்கோப்பையில் 13 அணிகள் விளையாடின - உருகுவே, அர்ஜென்டினா, பெல்ஜியம், பிரேசில், பொலிவியா, சிலி, பிரான்சு, மெக்ஸிகோ, பாராகுவே, பெரு, ரோமானியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் யுகோஸ்லாவியா.
- இரு கண்டங்களைச் சேர்ந்த நாடுகள் மட்டுமே உலகக் கோப்பையை வென்றன: தென் அமெரிக்கா 9 முறையும், ஐரோப்பா; 12 முறையும் ஜெயித்தன.
- உலகக்கோப்பை வெற்றியாளர்கள் - பிரேசில் 5, ஜெர்மனி 4, இத்தாலி 4, உருகுவே 2, அர்ஜென்டினா 2, இங்கிலாந்து 1, பிரான்சு 2 மற்றும் ஸ்பெயின் 1.
- இரண்டாம் உலகப் போர் காரணமாக, 1938 முதல் 1950 வரை உலகக் கோப்பை போட்டிகள் நடைபெறவில்லை. அதனால் இத்தாலி 16 வருடம் (1932 முதல் 1950 வரை) உலகக்கோப்பை சாம்பியனாகத் திகழ்ந்து சாதனை படைத்தது.
- 1986ல், சட்டையை பரிமாறிக் கொள்வது அதிகாரப்பூர்வமாகத் தடைசெய்யப்பட்டது, ஏனென்றால் வீரர்கள் மைதானத்தில் தங்கள் வெற்று மார்புகளைக் காட்டக் கூடாது என்பது FIFAவின் விருப்பமாக இருந்தது.



## குரேஷியா அதிபரின் கொண்டாட்டம்



அண்மையில் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி நடந்து முடிந்தது. அதன் அரை இறுதிப் போட்டியில் இங்கிலாந்துடன் குரேஷியா மோதியது. அந்தப் போட்டியைக் காண குரேஷிய அதிபர் அதிபர் கோலிந்தா கிராபர் கிட்டாரோவிக் சாதாரண ரசிகரைப் போல் பங்கேற்றார். அத்துடன் அவர் வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டினார். இவை பலருக்கு வியப்பை ஏற்படுத்தின. ஐம்பது வயதுப் பெண் அதிபர் கோலிந்தா ஆரம்பத்தில் சாதாரண பார்வையாளர்களுடன் அமர்ந்திருந்தார். பிறகு, முக்கியப் பிரமுகர்களுக்கான மாடத்துக்கு அழைக்கப்பட்டார். அங்கே இருந்தபடி போட்டியை ரசித்தார். குரேஷியா கோல் போடும்போது உற்சாகமடைந்ததையும் பின்னடைவு ஏற்படும்போது நகத்தைக் கடித்தபடி இருந்ததையும் எல்லோரும் கண்டனர். அரை இறுதிப் போட்டியில் குரேஷியா வென்றவுடன் விறுவிறுவென்று வீரர்களின் அறைக்குச் சென்று கட்டித் தழுவி பாராட்டினார்.

## “ரப்பர் சிக்கன்”




குரோஷியாவுடன் அரை இறுதிப் போட்டியில் மோதுவதற்கு முன் இங்கிலாந்து வீரர்கள் விநோதமான பயிற்சியில் ஈடுபட்டனர். கால் பந்துக்குப் பதிலாக “ரப்பர் சிக்கன்” எனப்படும் ரப்பரில் வடிவமைக்கப்பட்ட கோழி பொம்மையைப் பந்து போல் கருதி கைகளால் வீசி விளையாடினர். இந்த வேடிக்கை விளையாட்டு அவர்கள் இறுதிப் போட்டிக்கு ஏற்ற மனநிலைக்குத் தயாராவதற்குத்தான் என்கிறார்கள். அதுசரி குரேஷியர்களுக்கு என்ன தரப்பட்டது? இங்கிலாந்து கேப்டன் ஹாரி கேன்தான் அறிவாரோ?

## மெஸ்ஸிக்கு ஆறுதல் அளித்த மனைவி

16 அணிகளின் சுற்றில் அர்ஜென்டினா பிரான்சிடம் காலிறுதியில் மண்ணைக் கவ்விய பிறகு, கால்பந்து சகாப்தம் லியோனல் மெஸ்ஸியின் மனைவி ஆன்டோநெல்லா ரோக்குஸோ தனது மனமுடைந்த கணவரை பார்சிலோனா விமான நிலையத்தில் சந்தித்து ஆறுதல் அளித்தார். அர்ஜென்டினா அணியில் மற்ற எல்லோரும் 18-மணிநேர விமானப் பயணத்தில் புயினோஸ் ஏர்ஸ் நோக்கிச் செல்ல, 31 வயது மெஸ்ஸி மட்டும் பார்சிலோனாவுக்குப் பறந்தார், அங்கே கவலை முகத்துடன் காட்சியளித்த கால்பந்து நட்சத்திரம் நிருபர்களிடம் பேச மறுத்தார், அவர் சமீபகாலத் தோல்விகளையடுத்து ஓய்வு பெறுவது பற்றித் தீவிர யோசனை செய்வதாக வதந்தியும் பரவியுள்ளது. இந்தப் போட்டிகளில் ஒரேயொரு கோல் மட்டுமே அடித்து, பெனால்டியையும் கூட தவறவிட்டு, ஐஸ்லாந்துடன் 1-1 சமநிலைக்குக் காரணமானார், அதையடுத்து குரோஷியாவுடன் 3-0 எனப் படுதோல்வி அடைந்தது வீழ்த்தமுடியாத அர்ஜென்டினா. பிறகு பிரான்சின் துடுக்கான 19 வயது கைலியான் பாப்பேயின் இரு கோல்களால் அர்ஜென்டினா உலகக் கோப்பைப் போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டது.

ஒருங்கிணைப்பு: ரஷீதா பகத்
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

மேலும் இரு பள்ளிகள்:

# குவாலியர் இம்பீரியல் ரோட்டரி சங்கம் தொடக்கம்

வி. முத்துக்குமரன்

குவாலியர் சிரோலில் உள்ள அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் பரிதாபமான நிலையை மாற்றி, மேம்படுத்தும்படி பல முறை வேண்டுகோள் விடுத்தும், புகார்கள் கூறியும் அரசுப் பள்ளி அதிகாரிகள் செவி சாய்க்கவில்லை. ஆனால், குவாலியர் இம்பீரியல் ரோட்டரி சங்கம் (D 3053) அந்த இரு பள்ளிகளையும் முற்றிலுமாக மாற்றி, மேம்படுத்திவிட்டது. இரு பள்ளிகளும் அடுத்தடுத்து உள்ளன. பள்ளிகளின் சிதிலமடைந்திருந்த கட்டடங்கள் புதுப்பித்து, வண்ணம் பூசப்பட்டு, சுற்றுச் சுவர்கள் எழுப்பப்பட்டன.

ஏற்கெனவே நாகா சந்திரவதனி என்ற இடத்தில் இரு பள்ளிகளைக் கடந்த ஆண்டு புதுப்பித்து மாற்றிய அனுபவம் குவாலியர் இம்பீரியல் ரோட்டரி சங்கத்துக்கு உள்ளது.

இந்த இரு பள்ளிகளையும் ஆறே மாதங்களில் முற்றிலுமாக மாற்றி அமைத்துவிட்டோம். அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. மாணவர்களின் கல்விக்கு உதவுவதற்காக புதிதாக மேசை, நாற்காலிகள், வகுப்பறைகளில் கரும் பலகைகள் அளிக்கப்பட்டன. பள்ளியில் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்று இச்சங்கத் தலைவர் அமித் ரதி கூறினார்.

இந்தப் பள்ளிகள் பிரதான சாலையில் அமைந்திருப்பதால், சுற்றுச் சுவர் இல்லாதது பள்ளி நிர்வாகிகளுக்குத் தொல்லையாக இருந்தது. இப்போது சுற்று சுவர் அமைக்கப்பட்டதால், மாணவர்களுக்குப் பாதுகாப்பு கிடைத்துள்ளது. 8 வகுப்பறைகளின் தரைகளும் புதுப்பிக்கப் பட்டுள்ளன. சுவர்களில் நல்ல கருத்துள்ள படங்கள் அழகாக வரையப் பட்டுள்ளன. போர்டுகள், LED பல்புகள், குப்பைக் கூடைகள் அமைக்கப்பட்டு நல்ல சூழலில் கல்வி கற்க வழி செய்யப்பட்டுள்ளது என்றார் ரதி.



*சிரோலில் ஒரு பள்ளியில் மாணவர்கள் தரையில் அமர்ந்துள்ளனர். குவாலியர் இம்பீரியல் சங்க உதவியுடன் மாணவர்களுக்கு மேஜை நாற்காளிகள் இப்போது வழங்கப்பட்டது.*

## சுகாதாரத்தில் கவனம்

பள்ளி வளாகத்தில் பாதாள கழிவுநீர்ப் பாதை அமைக்கப்பட்டு, நான்கு கழிவறைகளும் புதுப்பிக்கப்பட்டன. சுகாதாரக் கேட்டுக்குக் காரணமான கசிவுகளை அடைத்துவிட்டோம். மாணவிகளின் சுகாதாரத் துக்காக சானிடரி நாப்கின் கள் வழங்கப்படுகின்றன என்றும் ரதி தெரிவித்தார்.

சிரோலில் பள்ளிகளை மாற்றியமைக்க சங்கம் ரூ.6 லட்சம் செல விட்டுள்ளது. சங்க உறுப்பினர்களும் நிதியைத் திரட்டிக் கொடுத்துள்ளனர். மேசை, நாற்காலிகளுக்காக மாவட்ட நிதி ஒதுக்கீட்டி லிருந்து (DDF) 1,000 டாலர் பயன்படுத்தப்பட்டது என்றார் ரதி. பள்ளிகளை முற்றிலுமாகப்




புதுப்பித்ததால், அந்த வளாகத்தில் 250 மாணவர்கள் கல்வி கற்க நல்ல சூழலில் உற்சாகமாகப் படிக்க உதவும் என்று மகிழ்ச்சியுடன் கூறினார் சிரோல், அரசு தொடக்க பள்ளியின் தலைமை ஆசிரியர் ராம்பாபு சிங் ராணா.

சங்கம் தற்போது அந்தப் பள்ளியில் தோட்டத்தையும், விளையாட்டுத் திடலையும் அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

## தொடர் பணிகள்

நாகா சந்திரவதனியில் உள்ள நடுநிலைப் பள்ளியில் RC குவாலியர் இம்பீரியல் குடிநீர்த் தொட்டியையும், நிரந்தர மின்சார வசதியும் செய்து தந்துள்ளது. ஒவ்வொரு வகுப்பறையிலும் இரு மின் விசிறிகள் பொருத்தப் பட்டுள்ளன. நிறைய புத்தகங்கள் கொண்ட நூலகமும் அமைக்கப்பட்டுவிட்டது என்றார் ரதி.

கழிவறைகளில் நாள் முழுவதும் தண்ணீர் கிடைக்கும் வகையில் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. நாகா சந்திரவதனி பள்ளியை ‘மகிழ்ச்சிப் பள்ளியாக’ மாற்றுவதற்கு ரோட்டரி சங்கம் ரூ.6 லட்சம் பயன்படுத்தி யுள்ளது. இதனால், அங்கே படிக்கும் 275 மாணவர்கள் பயனடைவர்.

## ரத்த பரிசோதனை இயந்திரங்கள்

அந்தப் பகுதி மக்களிடம் நடத்திய ஆய்வு அடிப்படையில், மக்களுக்கு உதவுதற்காக மொரார் அரசு Civil மருத்துவமனையிலும் GR மருத்துவக் கல்லூரி மற்றும் JR குழும மருத்துவமனைகளின் ரத்த வங்கியிலும் மொத்தம் ரூ.9 லட்சம் செலவில் குருதியியல் பகுப்பாய்வு சாதனங்கள் (Hematology analysers) அளிக்கப் பட்டன. இது நலிந்தவர்களுக்கு உதவும்.

Civil மருத்துவமனையில் உள்ள ரத்த சோதனைக்கான கருவிகள் மூலம் மாதந்தோறும் 20,000 நோயாளிகளும், ரத்த வங்கியில் உள்ள கருவிகள் மூலம் மேலும் 20,000 பேர் இரத்த தானம் செய்யமுடியும் என்றார் ரதி. ரத்த ஆய்வகத்தின் மூலம் ரோட்டரி சங்கத்திற்கு நல்ல பெயரும் புகழும் கிடைத்துள்ளது.

இந்த ரோட்டரி சங்கத்தில் 126 ஆக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை 156 ஆக உயர்ந்துள்ளது. இது 24 சதவீத வளர்ச்சியாகும் இதையடுத்து, ரோட்டரி மாவட்ட ஆளுநர் ராஜ்குமார் புட்டோரியாவின் அங்கீகாரத்தை இச்சங்கம் பெற்றுள்ளது. ■

*புகார்கள் கூறியும் அரசுப் பள்ளி அதிகாரிகள் செவி சாய்க்கவில்லை. ஆனால், குவாலியர் இம்பீரியல் ரோட்டரி சங்கம் (D 3053) அந்த இரு பள்ளிகளையும் முற்றிலுமாக மாற்றி, மேம்படுத்திவிட்டது.*

# வண்ணமயமான அரக்குக் கைவினை

## அழிந்துவிடும் நிலையில்...

அனுபா அகர்வால்

லஹாரியா பாணியிலும், வண்ணங்களிலும் கிடைக்கும் புகழ்பெற்ற ஜெய்பூர் அரக்கு வளையல்கள் மீது இன்றைக்கு இளம் பெண்கள் அதிக மோகம் கொண்டுள்ளனர். இளஞ் சிவப்பு நகரமான வண்ணமயமான கலைப்படைப்புகள், குறிப்பாக அரக்கு ஆபரணங்களும் மிகச் சமீபத்தில் தொடங்கப்பட்ட அழகிய அரக்குச் சுவரோவியங்களும், இந்தியா முழுக்க மக்களால் பெரிதும் விரும்பி ரசிக்கப் படுகின்றன. ஆக்டேன்



போன்ற வண்ணமயமான கண்ணாடிக் கற்களும், சீனா, ஆஸ்திரேலியா நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கற்களும் மணிகளும் பதித்த பலவர்ண கழுத்தணிகள், காதணிகள், வெவ்வேறு வடிவக் காது வளையங்கள், அரக்கு வளையல்கள் எல்லாம் பாரம்பரிய ஆபரணங்களுக்கு அழகுசேர்க்கின்றன.

சமீப காலங்களில், நூதன நுட்பமுறைகள் மூலம் இத்தகு நயமான தயாரிப்புகள் செப்பு, உருக்கு, இன்னபிற மாற்று மூலப்பொருட்களால் கலைத்திறனோடு கைவினையாக்கம் செய்யப்படுவதால், பெரும்பாலான சமயத்தில் அசல் அரக்குத் தயாரிப்புகளிலிருந்து இவற்றைப் பிரித்துச் சொல்வது மிகவும் சிரமமாகிவிடுகிறது.

பாரம்பரிய இந்தியக் குடும்பங்களில், அரக்கு வளையல்களை சுஹாக், குலாளி அல்லது ஹரா சூடா என்ற அடையாளத்தாலும் போற்றப்படுகின்றன, மணமான புதுப் பெண்கள் குறிப்பிட்டதொரு காலத்துக்கு அணிகிறார்கள். இளஞ்சிவப்பு வண்ண வளையல்கள் ஹோலி பண்டிகையின் போது அணியப்படுகிறது. ஒட்டு மொத்தத்தில், இந்த வளையல்கள் மிகவும் சுபமங்களமானதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக தீஜ், கங்கவுர், கர்வா சௌத் மற்றும் இன்னபிற விசேஷ வைபவங்களுக்கு வாங்கப்படுகிறது.

அரக்குப் பொருட்களைத் தயாரிக்கும் கலை 300 ஆண்டுக்கு பழமையானது. ராஜஸ்தானில் அரக்குக் கலைத்தொழிலை தொடங்க, ஜெய்பூர் மஹாராஜா அரேபியாவிலிருந்தும், இந்தியாவின் இதர மாநிலங்களிலிருந்தும் கைவினைக் கலைஞர்களை வரவழைத்தார். ஜெய்பூர் நகரம் உருவான போது, இரண்டாம் மஹாராஜா ஜெய்சிங் அரக்குத் தொழில் கைவினை வல்லுநர்களை அஜ்மீரிலிருந்து ஜெய்பூருக்கு மாற்றினார், இன்று ஜெய்பூர் அரக்குத் தொழிலின் கேந்திரமாக உருவெடுத்துள்ளது.





ராஜஸ்தானில் பொதுவாக லாகேரா என்ற இந்துக் குடும்பங்களும், மனிஹார் கோத்திரங்கள் என்ற முஸ்லிம்கள் அரக்குப் பொருள் வணிகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மனிஹாரோன் கா ராஸ்தா என்பது இளஞ்சிவப்பு நகரில் கைவினைஞர்கள் குடியமர்த்தப்பட்ட தெரு, இன்று தேசியளவில் அரக்குத் தொழிலுக்குப் பெயர்போன இடமாக விளங்குகிறது. பழைய ஜெய்பூர் மாநகரின் திரிபோலியா பஜாரில் வீற்றுள்ள மனிஹாரோன் கா ராஸ்தா ஒரு குறுகலான, நெரிசலான தெரு, அங்கே நூற்றுக்கணக்கான அரக்குத் தொழில் கைவினைஞர்கள் தனித்துவமான கலைப் பொருள்களுக்கு உருவம் கொடுத்து உள்ளூர் விற்பனைக்கும், மொத்த ஏற்றுமதிக்கும் வழி வழங்குகின்றனர். இது அலுவல் மிகுந்த ஒரு தெரு, வாங்க வருபவர்களின் கூட்ட நெரிசலும், ஊறும் வாகனங்களின் ஹாரன் சப்தம் என ஓசைக் கதம்பத்துடன் தெருவைக் கடந்து செல்பவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். கைவினைஞர்களின் உலைகள் அல்லது மர அடுப்புகளில் எரியும் தீயும் சேர்ந்துகொள்கிறது, இப்படியாக ஏராளமான அரக்குப் பொருள் கடைகள் நிறைந்த இந்தத் தெருவே ஒரு தனி கதாபாத்திரத்தைப் பெறுகிறது.

அரக்குப் பொருள் களைத் தயாரிப்பதில் கொதிக்க வைத்தல்,

ஒன்றுசேர்த்தல், பிசைதல், சுத்தியலில் தட்டுதல், மற்றும் வார்ப்புகள் அல்லது கைகள் மூலம் வடிவித்தல் என பல கட்டங்கள் ஈடுபட்டுள்ளன.

இதற்கான மூலப் பொருள் அல்லது அரக்கு என்பது, சிறு பூச்சிகளின் துணைப் பொருளாக/ கழிவாகக் கிடைக்கிறது, மேலும் அரசமரம், அரும்பு, பிளாஸ்மா போன்றவற்றிலிருந்தும் கிடைக்கிறது. அரக்கு பிஹார், உத்தரபிரதேசம் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தக் கழிவை சுத்தம் செய்த பிறகு, அது பெரிய கலன்களில் கொதிக்க வைக்கப்பட்டு, கடினமான வட்டத் தட்டுக்களாக அமைக்கப்படுகிறது.

உலையில் கொதித்த அரக்கு ஒட்டுத்தன்மை போன்று இருக்கும். சிவப்பு, பச்சை, மஞ்சள் போன்ற இயற்கையான வண்ணங்களோடும், சில வேளைகளில் ஜப்பானீஸ் பொன்னிற அல்லது வெள்ளிநிற மினுமினுப்புப் பொருளோடும் கலக்கப்படுகிறது. சுத்தமான அரக்குகளால் வளையல்கள், பேனாக்கள், ஆடை ஊக்குகள் போன்ற பொருட்களை வடிவமைக்கலாம். சில சமயங்களில் இது காகிதக் கூழ் மொத்தையில் கலக்கப்பட்டு, அழகிய கலைபொருட்களாக வடிவமைக்கப்படுகிறது.

*பாரம்பரிய இந்தியக் குடும்பங்களில், அரக்கு வளையல்களை சுஹாக், குலாளி அல்லது ஹரா சூடா என்ற அடையாளத்தாலும் போற்றப்படுகின்றன.*



வேலைப்பாட்டுக்கு மிகுந்த துல்லியமும், கலைத்திறனும், கால அவகாசமும் வேண்டும், அதேபோல் பொருளுக்குப் பொருள் அரக்கின் விகிதம் மாறுபடும். பின்னர் தயாரான பொருட்களை மணிகள் அல்லது வண்ணமயமான கண்ணாடிகளால் அலங்கரிக்கின்றனர், இந்த வேலைப்பாட்டுக்கு நுண்ணிய நயம் தேவை, எனவே பெரும்பாலும் பெண்களே செய்கின்றனர். இந்த அலங்கார வேலையை சிபாயி என்பர்.

சூடாக்கிய அரக்கை நளினமாகப் புனைந்து, நாசூக்காக வார்ப்பது மூலம் வளையல்களை இலகுவாக மாற்றியமைக்கலாம்; அல்லது ஏதேனும் சிறு வெடிப்புகள் இருந்தாலும் அதைச் சரிசெய்யலாம். இந்தக் கைவினைஞர்கள் பெண்ணின் கைகளைப் பார்த்தே வளையலுக்கான அளவைச் கூறி விடுவார், அவ்வளவு திறமைசாலிகள். இருப்பினும், அரக்குப் பொருள்கள் சூட்டுக்கு உருகக்கூடியது, எனவே ராஜஸ்தானின் வெப்பச் சீதோஷ்ணம் இந்தக் கலைக்கு பெருந்தடையாக உள்ளது.



இளைய கைவினைக் கலைஞர்கள் தற்காலத்தில் பல்வேறு விதமாக அரக்குப் பொருள்களை வடிவமைக்கின்றனர். இந்தப் பொருள்களின் விலை ரூ10 முதல் ரூ2 லட்சம் வரை என எல்லா மட்டத்திலும் இருக்கிறது என்கிறார் ஷில்ப் குருவும், 2013 தேசிய



விருது பெற்ற ஆவாஸ் முஹம்மதும்.

ஆவாஸ் முஹம்மத், அவரது மனைவி அன்வர் ஜஹான், மகன்கள், மகள்கள் எனக் குடும்பம் சகிதமும் அரக்கு வேலைப்பாட்டில் ஈடுபட்டு வருகிறது. பல விருதுகளைப் பெற்று, உலகெங்கும் சுற்றியவர் என்ற வகையில் 57 வயது முஹம்மத் இப்படிக் கூறுகிறார், "நான் IIJ, மும்பை, அமிட்டி, இன்ன பிற மாநில NGOகளின் கைவினைஞர்களுக்கும் பயிற்சி அளித்திருக்கிறேன்." "அரசு போதியளவு ஊக்குவிக்காத காரணத்தாலும், இதற்கு ஈடான வேறு பொருள்களின் போட்டியாலும், இன்றைக்கு அரக்கு வேலைப்பாட்டுக்கு முன்பைப் போல நல்ல வரவேற்பு இல்லை. வருகிற காலத்தில் உணமையான, அசல் அரக்கு வேலைப்பாடு மறைந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது."

முஹம்மத் ஷம்ஷீர் ஒரு கைவினை வல்லுநர், அவருடைய மூதாதையர்கள் 200 வருடத்துக்கு முன்பு இந்தத் தொழிலைத் தொடங்கினர், இப்போது அவரது குடும்பமும் அரக்குப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது, 'இது ஒரு விசேஷ கால வேலை, இந்தப் பொருள்களின் விற்பனை பண்டிகைக் காலங்களிலும் முகூர்த்தக் காலங்களிலும் அதிகரிக்கிறது' என்கிறார். "அரசர் காலத்தில் நாங்கள் குலால் கோட்டா என்ற தனித்துவமான அரக்குக் கலைபொருளைச் செய்வோம், குறிப்பாக ஹோலி பண்டிகைக்கு. குலால் கோட்டா என்பது, மெல்லிய அரக்குத் தகட்டில் வண்ண மூலிகைகள் நிரப்பி அதைக் கொண்டு செய்யப்படுகிற ஒரு சிறிய பந்து அல்லது போட்லி. ஹோலி பண்டிகையை மேலும் குதூகலமாகக் கொண்டாட, இந்த வண்ணமயமான ஆனால் தீங்கற்ற போட்லிகளை எறிந்து விளையாடுவார்கள்."

அரக்குக் கலைத் தொழிலின் எதிர்காலம் பிரகாசமாக இல்லை என நினைக்கும் இவர், அதனால்தான் "என் குடும்பத்தையும் படிக்க வைத்தேன். எங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் ஆகிய எல்லோருக்கும் தவறாமல் முறையான கல்வியை கொடுத்தோம். அதிருப்தியான நிலைமைகள் இந்தக் கலைத்தொழிலைப் பாதிக்கிறது, வேலைக்குத் தேவையான உழைப்போ மிகவும் கடினமானது, வருவாயோ அதற்கு ஈடாக இல்லை, இதையெல்லாம் பார்க்கும் போது, எங்கள் வருங்காலத் தலைமுறைகள் இந்தத் தொழிலில் ஈடுபட மாட்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது," என்று பெருமூச்சு விடுகிறார்.




*இளைய கைவினைக் கலைஞர்கள் இப்பொழுது ரூ. 2 லட்சம் முதல் 10 லட்சம் வரை பல மட்டங்களில் பல்வேறு விதமான அரக்குப் பொருட்களை வடிவமைக்கின்றனர்.*

படங்கள்: அனுபா அகர்வால்
RC ஜெய்பூர், D 3054
வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary India Literacy Mission

# Literacy Focus



PRID **சேகர் மேத்தா**
RILM தலைவர்

RILM தலைவர் சேகர் மேத்தா, முதன்மை இயக்குனர் அலுவலர் (COO) Dr அப்கா சிங், திட்டத்தின் துணை இயக்குனர் ஜீலம் ராய் சவுத்ரி ஆகியோர் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரைச் சந்தித்தனர். அப்போது, டீச் (T-E-A-C-H) திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்து விவரித்தனர்.

RILM மின்வழிக் கல்வியான இ-சிக்ஷா திட்டத்தை மத்திய அமைச்சர் வெகுவாகப் பாராட்டினார். கோல்கத்தா சாஸ்திரி பவனில் நடைபெறும் இயக்கு டிஜிட்டல் வாரியக் கூட்டத்தில் பங்கேற்கும்படி RILM தலைவர் சேகர் மேத்தாவுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்தார். இதே போன்று பள்ளிக் கல்வி சிறப்புச் செயலர் ரீனா ராயுடன் சந்திப்பு நடந்தது. முதியோர் கல்விக்கான செயல்பாடுகள் குறித்து திருப்தி அடைந்த அவர், பயிற்சி முறை குறித்த வீடியோவை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். முதியோர் எழுத்தறிவுத் திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் நிதி ஒதுக்கும்படி அரசு ஊக்குவிப்பதாகவும் அவர் கூறினார்.



*RILM தலைவர் சேகர் மேத்தா, அமைச்சர் ப்ரகாஷ் ஜாவ்தேக்கர் மற்றும் ஜீலம் ராய் சௌத்ரி.*

## பஞ்சாப் பள்ளியில் மின்வழிக் கற்றல்

பஞ்சாபில் உள்ள 19,272 அரசு மற்றும், அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் மின்வழிக் கற்றலுக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்காக மாநில அரசுடன் RILM செயல்பட்டு வருகிறது. தொடக்கத்தில் இதற்கான புரிந்துணர்வு மூன்றாண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

இதன்படி பள்ளிகளுக்கு ஒலி-ஒளி சாதனங்களும், சாஃப்ட்வேரும் வழங்கப்படும். அரசு ஆண்ட்ராய்ட் கருவியுடன் டிவி, புரொஜெக்டர் ஆகிய கருவிகளை வழங்கி, பள்ளிகளில் ஆய்வகத்தை அமைக்கும். RILM மாநிலக் கல்வி திட்டத்துக்கு ஏற்ற மின்வழிக் கல்விக்கான உள்ளடக்கம் வழங்கும். நவீன கருவிகளை இயக்குவதற்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரும். மின்வழிக் கல்வி செயல்படுவது குறித்தும் மாணவர் தேர்ச்சி குறித்தும் மதிப்பீடு செய்யும். தற்போதைய நிலவரப்படி, மாநிலத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 13,322 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.

## மின்வழிக் கல்விக்கு பாரத ஸ்டேட் வங்கி ஆதரவு

RILM தானே ஹில் ரோட்டரி சங்கத்தின் அறக்கட்டளையான ட்ரையம்ஃப் ஃபவுண்டேஷனுடன் (TRIUMPH Foundation) இணைந்து மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் 171 பள்ளிகளில் மின்வழிக் கல்விக்கான வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் பாரத ஸ்டேட் வங்கி நிறுவனத்தின் நிதி ஆதரவில் 310 பள்ளிகளில் டிஜிட்டல் வகுப்பறைத் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டது. இதைப் போல் மற்ற பள்ளிகளிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின்வழிக் கற்றல் வசதி கர்நாடகத்தில் 50 பள்ளிகளிலும் மகாராஷ்டிரத்தில் 118 பள்ளிகளிலும்



D *3090 ரோட்டரியினர் ஒரு பள்ளியில் நூலகம் நிறுவினர்.*

அமைக்கப்பட்டுவிட்டன. உத்தரப் பிரதேசத்தில் உள்ள 142 பள்ளிகளில் 89 பள்ளிகளில் டிஜிட்டல் கற்றல் வசதி அமைக்கப்பட்டுவிட்டது. பள்ளிகளில் உள்ள புரொஜெக்டர்களில் மாநில பாடத் திட்டத்திற்கு ஏற்ப அந்தந்த மொழியில் பல்லூடக உள்ளடக்கங்கள் (Multi-media content) வடிவமைத்து அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இதற்காக இணையவசதி யும் (online portal) உருவாக்கி RILMன் இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இணையத்தை (portal) ரோட்டரி மற்றும் இன்னர்வீல் உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டவர்களும் மட்டுமே திறக்க இயலும்.

ரோட்டரியின் 3170, 3181, 3182, 3012, 3110, 3120 மற்றும் 3100 ஆகிய மாவட்டங்களுக்கு வாரி வழங்கிய நட்சத்திர நன்கொடையாளர்கள் ரோட்டேரியன்கள் கிஷோர் லுல்லா, விஜய் நாமதேவ், I S தோமர், D N ரைஸாடே, சுனீல் அகர்வால், லலித் மோகன் குப்தா, PDGs R S நாகார்ஜுனா, D S ரவி, ரஞ்சித் சிங், மாவட்ட எழுத்தறிவுக் கமிட்டித் தலைவர்கள் (DLCC) பிரஷாந்தா ராமச்சந்திரா, ஸ்வாதி குப்தா, ஆனந்த் முகர்ஜி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

## டொராண்டோவில் டீச் திட்டம்

டொராண்டோ ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டின் நட்புறவுக் கூட்ட அரங்கில் இந்திய ரோட்டரியின் RILM தனது டீச் திட்டத்தை (T-E-A-C-H) விளக்கியதன் மூலம் குறிப்பிடத் தக்க பணியை ஆற்றியிருக்கிறது.

அந்த ஸ்டாலில் மூத்த ரோட்டரி தலைவர்களும், மாநாட்டுப் பேராளர்களும் நிரம்பியிருந்தனர். அமெரிக்கா, இத்தாலி, மெக்சிகோ, நைஜீரியா, உகாண்டா, கானா, நேபாளம், வங்க தேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து ஏராளமானோர் அங்கு வந்திருந்தனர். டீச் திட்டம் குறித்து அறிந்துகொள்ள அவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். எழுத்தறிவு இல்லாத பகுதிகளில் அத்திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்தனர். இந்திய ரோட்டரியின் மகிழ்ச்சிப் பள்ளித் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருந்தது. அத்துடன், முதியோர் எழுத்தறிவுத் திட்டம், மின்வழிக் கல்வி ஆகியவற்றுக்கும் வரவேற்பு இருந்தது.

உலக அளவிலான எழுத்தறிவு, கல்வியில் T-E-A-C-H புரட்சியை ஏற்படுத்தும் என்று ரோட்டரியினர் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

## படிப்போம் பாரதம் - எழுத்தறிவு திட்டம்

RC மன்ஸா (D 3090) பஞ்சாபில் 200 அரசு பள்ளிகளில் நூலகங்களை அமைத்துள்ளது. அரசு உதவி பெறும் பள்ளிகளில் நூலகங்களை அமைப்பதற்காக D 3120 அமைப்பு RILMனிடமிருந்து 13,500 ஆங்கில கதைப் புத்தகங்களை வழங்கியுள்ளது. RILM டமிருந்து IWD (314) அமைப்புக்கு 3,000 புத்தகங்களை அளித்து; மேலும், 16 ரோட்டரி சங்கங்கள் 17 பள்ளிகளுக்கு 1,700 புத்தகங்களுடன் புதிய நூலகங்களை உருவாக்கியுள்ளன.

இன்னர்வீல் (329) மாவட்டத்துக்கு 5000 புத்தகங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. 13 ரோட்டரி சங்கங்கள் 14 பள்ளி களில் மொத்தம் 1,400 நூல்களை விநியோகம் செய்துள்ளன.■

# தவறான பழக்கத்தை விட்டு விடுங்கள்!

பாரத் மற்றும் ஷாலன் சவூர்



பழக்கவழக்கங்களை விட்டுத்தள்ளுவது மிகவும் கடினம், இல்லையா? நாம் அவற்றுள் உள்ளோம் மற்றும் அவை நம்முள் இருக்கிறது, நாம் கிட்டத்தட்ட பிரிக்க முடியாதவர்கள்! அல்லது அப்படித் தெரிகிறது.

நம்முடைய நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு பழக்கத்தில் நாம் இருக்கும்போது, பெரும்பாலும் நாம் ஒரு குழிக்குள் இருக்கிறோம் என்பது நமக்கே தெரிவதில்லை! மீண்டும் மீண்டும் செய்யும் போது அந்தக் குழி ஒரு வசதியான இடமாக மாறி விடுகிறது. நான் என் சுய பச்சாதாபத்தில் மிகவும் வசதியாக இருக்கிறேன், உதாரணமாக, ஒரு நலன் விரும்பி நான் ஏறுவதற்கு உதவ முயற்சிக்கும் போது, நான் எத்தகைய சூழ்நிலையில் இருக்கிறேன் என்று நீங்கள் புரிந்து கொள்ளவில்லை! நீங்கள் உணர்ச்சியற்றவர்! என்று நான் அவரிடம் கத்துகிறேன்.

என் கோபத்தின் மூலம் நான் உண்மையில் சொல்ல வருவது என்னவென்றால்: என்னிடம் கனிவாக இருங்கள் மற்றும் என்னை புரிந்து கொள்ளுங்கள். உங்கள் தீர்ப்பு - நான் வெளியே இழுக்கப்பட வேண்டும் என்ற என் வலியில் தழும்பு ஏற்படுத்துகிறது. எனக்குப் புரிகிறது என்று மற்றவரிடமிருந்து வரும் வார்த்தை, நம் மனம் மற்றும் உடலில் ஒரு சுய சிகிச்சைமுறை இயக்கத்தை தொடங்குகிறது. நாம் ஆதரவு மற்றும் பேணலை உணரும்போது, நாமே நம்மை குணப்படுத்திக் கொள்கிறோம்.

**நம்ப வைத்தலின் சக்தி:** புரிதல் நம்மை ஒரு இடத்திற்கு கொண்டு வருகிறது, அங்கு அந்த ஒரு பாய்ச்சலை, நம் மனதின் சொந்தப் புரிதலைக் கொண்டு ஒரு மேம்பட்ட ஆரோக்கியமான வாழ்க்கையாக நம்மால் மாற்ற முடியும். புகைபிடிப்பது ஆரோக்கியத்திற்கு தீங்கானது என்பதை அறிந்திருந்தும் புகைபிடிப்பதால் எனக்கு மன அழுத்தம் குறைகிறது என்று நான் நம்பினால், நடைமுறையில் அதை விட்டு வெளியேற நான் சக்தியற்றவனாகிறேன். எனவே, நான் நம்பிக்கையை மாற்ற வேண்டும். எப்படி? மூளைக்கு தினசரி நினைவூட்டல்கள் தேவை. மூளையானது ஹார்மோன்கள் மற்றும் நரம்பியக்கடத்திகள் மூலம் முழு உடலுடன் தொடர்புகொள்கிறது. எனவே, அதனை எடுத்துக் கொள்வதை நிறுத்திய மக்கள் மற்றும் அவர்களுடைய நுரையீரல் அவர்களுக்கு நன்றி சொல்வது போன்ற உதாரணங்களை தினசரி யூடியூப் (ஒரு உதாரணத்திற்கு) மூலமாக மூளை பெற்றால், உங்களுள் ஒரு பகுதி அவர்களுடைய குணமடையும் அனுபவங்கள் மூலம் வாழத் தொடங்குகிறது... நீங்கள் விட்டுவிட வேண்டும் என்ற உங்கள் மன உறுதி மெதுவாக வளர்கிறது.

**மன உறுதியை வலுப்படுத்துதல்:** இருப்பினும், என் மன உறுதி பலவீனமாக உள்ளது என்று நாம் சொல்லுவோம். நாம் கேலியாக நான் எந்த நேரத்திலும் இனிப்புகளை விட்டுவிட முடியும். நான் இதைப் பலமுறை செய்திருக்கிறேன் என்று சொல்வோம். உண்மை என்னவென்றால்: மன உறுதி என்பது ஒரு மன தசை. நாம் அதற்கு எவ்வளவு குறைவாக பயிற்சி கொடுக்கிறோமோ, அதை அவ்வளவு அதிகமாக பலவீனப்படுத்துகிறோம். மற்றும் நம் வாழ்க்கையில் மற்ற பகுதிகளை நாம் பார்க்கும்போது, நாம் களைத்து போயிருந்தாலும் ஒரு திட்டத்தை முடிக்க நாம் நம்மை எப்படி கட்டாயப்படுத்துகிறோம் என்று பார்க்கிறோம், நம் பணியிடத்திற்குத் போவதற்கு முன் செய்ய வேண்டிய



காரியங்களைச் செய்ய நாம் எப்படி விடியற்காலையில் படுக்கையை விட்டு கஷ்டப்பட்டு எழுகிறோம் என்று பார்க்கிறோம். ஒவ்வொரு முறை நாம் இதைச் செய்தபோதும், நாம் நம் மன உறுதியை பலப்படுத்தியுள்ளோம். அதேபோல், அதே தீர்மானத்துடன் உண்மையாக இனிப்புகளை விட்டு விடும் இந்த முடிவை எடுங்கள். தோட் டத்தில் செடியை நடுவது நாளையை நம்ப வேண்டும் என்பதற்காக, என்று நடிகை ஆட்ரி ஹெப்பர்ன் கூறியுள்ளார். தோட்டத்தின் ஒரு சிறு பகுதியில் இல்லைகள் என்பவற்றை நடுங்கள், மற்றும் முழுத் தோட் டத்திலும், தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதற்கு, ஆரோக்கியமான உணவை சாப்பிடு வதற்கு, குணப்படுத்தும் எண்ணங்களை வளர்த்துக்கொள்வதற்கு, மற்றவர் களுடன் நல்ல உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கும் ஆமாம்கள் என்பவற்றை நடுங்கள். உங்கள் தன்னம்பிக்கை வளரும்போது, உங்கள் ஆரோக்கியமும் அதிகரிக்கும்.

உண்மையில் எல்லோரும் புதிய பழக்கங்களை கடைபிடிக்க விரும்புகிறார்கள். அவர்களுக்கு இதன் நோக்கமும் தெரியும்: என் பிள்ளைகளுக்கு நான் ஒரு சுமையாக இருக்க விரும்பவில்லை. நான் எடையைக் குறைக்க வேண்டும். நான் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். ஆயினும்கூட, எவ்வளவு நல்ல எண்ணம் இருந்தாலும், எவ்வளவு புத்திசாலித்தனமான நோக்கமாக இருந்தாலும், அது இன்னுமும் பழக்கத்திற்கு வரவில்லை. இதை நினைவில் கொள்ளுங்கள்: ஒவ்வொரு நோக்கத்திற்கும் ஒரு செயல்முறை மற்றும் ஒரு முடிவு தேவை. உதாரணமாக, நீங்கள் ஒரு மாரத்தானில் ஓடும்போது, நீங்கள் கடைசியாக வந்து முடிவுக் கோட்டை தொடும் ஒரே ஓட்டக்காரராக இருந்தாலும், நீங்கள் இன்னும் ஒரு வெற்றியாளராக கொண்டாடப்படுகிறீர்கள். நீ ங்கள் இன்னும் ஒரு வெற்றியாளர் போல் உணர்கிறீர்கள். இந்த செயல் முறையில் ஏதோ ஒரு நுட்பமான வழியில், புதிய, இன்னும் உறுதியான, உங்களின் சிறந்த பதிப்பை, நீங்கள் கண்டறிந்துள்ளீர்கள். இதே போலதான் ஒரு புதிய, ஆரோக்கியமான பழக்கத்தை ஏற்றுக்கொள்வதும். ஒரு உணவுத் திட்டத்தில், நீங்கள் விரும்பிய அளவு எடை குறையாமல் இருக்கலாம், ஆனால் உங்கள் முயற்சிக்கு அங்கீகாரம் அளித்து, உங்கள் முன்னேற்றத்தையும் மற்ற மக்களின் பாராட்டுகளையும் உற்சா கப்படுத்துவது அவசியம். உங்கள் முயற்சிகளை தாழ்த்தாதீர்கள், மாறாக அவற்றை உயர்த்துங்கள். உங்கள் முயற்சி, உங்கள் உள் வலிமை மற்றும் முன்னேற்றத்தை தொடர்ந்து கொண்டாடுங்கள். உங்கள் முயற்சி கள் அனைத்தையும் மீறி, நீங்கள் விளைவை அடையத் தவறிவிட்டால், நீங்கள் மாற்றப்பட்டு, வளர்ந்து, உள் வெற்றிகளை அடைந்துவிட்டீர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள். அதாவது, நீங்கள் உங்கள் சொந்த செயலமர்வுகளை நடத்த ஆரம்பிப்பீர்கள், உங்கள் தலைப்பு, நிதி, மார்க்கெட்டிங் மற்றும் பலவற்றைப் பற்றி முடிந்தவற்றை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். உங்கள் செயலமர்வுகள் முன்னேற வில்லை என்றாலும் நீங்கள் இன்னும் அறிந்திருக்கிறீர்கள், மேலும், புதிய அறிவும் நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலிலும் பயன்படக்கூடிய திறன்களையும் பெற்றுள்ளீர்கள். நீங்கள் புகழ் மற்றும் அதிர்ஷ்டம் நிறைந்த சூரியனாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் செய்யும் அனைத்து செயல்களிலும் தொடர்ந்து ஜொலிக்கும் நட்சத்திரமாக இருக்கலாம்.

**உடற்பயிற்சியில் நண்பர்களை கண்டுபிடியுங்கள்:** இது மிகவும் அவசியம். உங்களிடம் ஒன்றாக உடற்பயிற்சி செய்வதாலும், ஒன்றாக உணவுத் திட்டத்தைக் கடைபிடிப்பதாலும் நண்பர்கள் ஆன ஒரு குழு இருந்தால், அதோடு... உடன்... இருங்கள்! எடை குறைப்பு, குறைந்த கொழுப்புள்ள உணவுகளை உட்கொள்வது, நேர்மறையாக எண்ணுவது, பழைய பழக்கங்களை விட்டுவிட்டு, புதிய முறைகளை பின்பற்றுவது போன்ற ஒருவரோடு ஒருவர் பகிரப்படும் பொது இலக்குகள் விலைமதிப்பற்றவை. உரிமை, பரிச்சயம், சுகாதார குறிப்புகள் மற்றும் சிரிப்பைப் பகிர்ந்து ஒருவருக்கொருவர் ஆதரவு தருவதில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அழகு, வலிமை மற்றும் கௌரவமும் இதில் அடங்கும். ஆனி ஃபிராங்க் மிகவும் எளிமையாக எடுத்து டுரைத்ததைப் போல: நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத் தோடு வாழ்கிறோம்; நம் வாழ்க்கை வித்தியாசமானவை, இருப்பினும் ஒரே மாதிரியானவை.

இறுதியில், உடற்பயிற்சி மற்றும் எழுத்துக்காக அர்ப்பணிக்கப்பட்ட என் வாழ்க்கையில் நான் கற்றுக்கொண்டது இது தான்: நன்றியுணர்வு உங்களை ஒளிரச்செய்கிறது. உடற்பயிற்சி உங்களை வலுவாக வைத்திருக்கிறது. உங்கள் குறைபாடுகள் உங்களை மனிதனாக வைத்திருக்கின்றன. எது முக்கியம் என்ற உணர்வை தக்க வைக்க உங்கள் தோல்விகள் உதவும். வெற்றியும் நல்ல பழக்கமும் உங்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்றன...


*இதன் எழுத்தாளர்கள், ஃபிட்னஸ் ஃபார் லைஃப் மற்றும் சிம்ப்ளி ஸ்பிரிட்சு வல் - யு ஆர் நேச்சுரல்லி டிவைன் நூல்களின் ஆசிரியர்கள் மற்றும் ஃபிட்னஸ் ஃபார் லைஃப் திட்டத்திற்கான ஆசிரியர்கள்.*

Wordsworld

# உள்ளங்களின் சங்கமம்

*சந்தியா ராவ்*

*இதுதான் எப்போதும் சிறந்த புத்தகங்கள் ஆற்றும் பங்கு. அவற்றை வாசிக்கும் போது, வேறுபட்ட யோசனைகளும் ஆழ்ந்த கருத்துக்களும் அடங்கிய மற்றுமொரு உலகத்தை நாம் சுற்றி வருகிறோம்*




நீங்கள் படிக்கும் பழக்கம் உள்ளவராக இருந்தாலும், இல்லாவிட்டாலும், புத்தகங்களை எப்படிச் சிறந்த நண்பர்களாக கருத முடியும் என்பதை புரிந்துகொள்வீர். வாசிப்பு என்பது பெரும்பாலும் அமைதியாக மேற்கொள்ளப்படும் உரையாடலே, ஆனால் நீங்கள் உரக்க வாசிப்பவராக இருந்தால் அது செவிக்கும் விருந்தாக அமைய முடியும். சிறந்த நண்பர்கள் என்றாலே, தயக்கமின்றி எல்லாவற்றையும் விவாதிக்கலாம் என்பதுதானே அர்த்தம். நீங்கள் உரைப்பதையெல்லாம் அவர்கள் கேட்பார்கள், பிறகு அவர்கள் உதிர்ப்பதையெல்லாம் நீங்கள் காதில் வாங்கிக் கொள்வீர்கள்.

சமீபத்தில் நான் எலிஃப் ஷஃபாக் எழுதிய ஏவாளின் முப்புதல்விகள் (த்ரீ டாட்டரஸ் ஆஃப் ஈவ்) என்ற புத்தகத்தை வாசித்தேன். ஷஃபாக் லண்டனில் வசிக்கும் ஒரு துருக்கி எழுத்தாளர், அவர் பெயரில் பல புனைவு இலக்கியங்களும், நிதர்சனக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. முதல் உலகப் போரில் உதுமானிய சாம் ராஜ்யத்தின் கீழ் துருக்கி அதிகாரிகள் அரங்கேற்றிய ஆர்மேனிய கூட்டுப் படுகொலைகளை முன்னிறுத்திக் காட்டும் மிகச் சிலரில் ஒருவரான இவர், தனது இஸ்தான்புல் வேசிமகன் (பாஸ்டர்ட் ஆஃப் இஸ்தான்புல்) என்ற புத்தகத்தில் இதைக் குறிப்பிடுகிறார். ஒரு புத்தகத்துக்கு, ஏன் திரைப்படம், ஓவியம், அல்லது இசைக்கும் கூட, கிடைக்கும் வரவேற்பு அவரவரைப் பொறுத்தது. ஆக, ஏவாளின் முப்புதல்விகள் நாவலின் நிறைகள் பற்றி முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்ற போதிலும், அது அரசியல், சமய, தத்துவ அக்கறைகளை எழுப்புகிறது என்பதில் ஐயம் இருக்க முடியாது, மேலும் ஒவ்வொரு வாசிப்பாளருக்கும் எது சுவாரஸ்யமாக இருக்கும் என்பது அவரவரின் மனப்பாங்கைப் பொறுத்தது.

இந்த நாவலின் மையப் பாத்திரம், நாஸ்பெரி என்றறொரு மங்கை, அவள் ஒருபக்கம் முற்போக்கு வாதியானவள். ஆனால் சுகபோகங்களில் மூழ்கிய அவளின் தந்தையும், மறுபக்கம் கண்டிப்பும் அளவுக்கதிகமான ஐதீகமும் கூடிய தாயும் சூழ வளர்ந்தவள். அவர்கள் இருவரும் தத்தமக்குரிய விதத்தில் தங்கள் செல்ல மகளுக்கு அன்பு செலுத்தினர் என்றாலும், வீட்டுச் சூழல் என்னவோ சுமூகமாக இருக்கவில்லை. பெரி ஆக்ஸ்போர்டுக்கு படிக்கச் செல்லும் சாக்கில் அங்கிருந்து தப்பித்துக் கொள்கிறாள். அங்கே இரு தோழிகளை நட்பாக்கிக் கொள்கிறாள், மேலும் ஓர் ஆளுமையும் ஈர்ப்பும் மிக்க பேராசிரியர் நடத்தும் ‘இறைவன்’ என்ற படிப்பில் சேர்கிறாள். அது ‘மதம்’ அல்ல, ‘இறைவன்’ என்பதை பேராசிரியரே மாணவர்களுக்கு நினைவூட்டுகிறார், இதுபற்றி எலிஃப் எழுதும்போது: “அந்தக்

காலங்களில் தத்துவயியலாளர்கள் மதத்தை விட இறைவன் பற்றிய கருத்தோட்டத்தையே அதிகம் அலசினர், ஆனால் இப்போது இது தலைகீழாகிவிட்டது.'' இந்தக் கருத்துச்சூழலில் தான் பேராசிரியர் அம்மாணவர்களை, 'நிச்சயத்தன்மை என்ற சீக்கு' குறித்து எச்சரிக்கிறார்.

எலிஃப் இதை இப்படி எழுதுகிறார், ''ஐகாரஸின் சிறகுக்கு சூரியன் எப்படியோ, அப்படித்தான் வினவும் ஆர்வத்துக்கு நிச்சயத்தன்மையும். ஒன்று பிரகாசமாக ஜொலிக்கும் போது, மற்றொன்று பிழைக்க முடியாது. நிச்சயத்தன்மை கர்வத்துக்கு வழிவகுக்கும்; கர்வம் குருட்டுத்தனத்துக்கு வழிவகுக்கும்; குருட்டுத்தனம் இருளுக்கு வழிவகுக்கும்; இருள் மென்மேலும் நிச்சயத்தன்மைக்கு வழிவகுக்கும். இதையே, நிச்சய நம்பிக்கைகளின் முரண் தன்மை என்று அவர் அழைத்தார். அந்த விரிவுரை வகுப்புகளில் அவர்கள் எதைப் பற்றியும் நிச்சயத்தன்மையுடன் இருக்கப் போவதில்லை, கருத்தரங்கின் பாடத்திட்டம் உட்பட, ஏனென்றால் அதுவும் கூட எல்லாவற்றையும் போல மாற்றத்துக்கு உட்பட்டது தான்...''

''அவர்கள் பிரயாணிகளே, பாதையின் மனிதர்களே, அதாவது ஒரு குறிப்பிட்ட இடத்தை இன்னும் சென்றடையாதவர்கள், அநேகமாக ஒருபோதும் அவ்விடத்தை சென்றடையாமலே தொடரலாம். அவர்கள் பாடுபடுபவர்களே, தேடுதலில் ஈடுபடுபவர்களே. ஆம், புரியாத புதிராக சிக்கல்விழுந்த உலகத்தில் இது ஒன்று மட்டுமே தெளிவாக இருக்கிறது: சும்மா இருப்பதைவிட சுறுசுறுப்பு மேல் தானே, அலட்சியத்தைவிட ஆர்வத் துடிப்புணர்வு சிறந்தது தானே. பதில்கள் முக்கியமல்ல, கேள்விகள் தான்; நிச்சயத்தன்மை உயர்ந்ததல்ல, வினவும் ஆர்வம் தான்.''

இந்த இரு பத்திகளை வாசித்த போது, எனக்கு அந்த ஒன்பது வயதுச் சிறுவன் சொன்ன கருத்தின் வியாக்கியானம் மனதில் ஓடியது. வகுப்பறையில் விவாதித்த போது அவன் சொன்னான், ''எங்களுக்கு பதில்கள் சொல்லத் தெரியும், ஆனால் கேள்விகள் கேட்கத் தெரியாது'' என்று. எலிஃபை வாசிக்கையில் அந்தக் கருத்தோட்டம் வெளிச்சத்துக்கு வந்தது, நமக்கு எவ்வளவு அதிகமாகத் தெரியும் என்று எண்ணுகிறோமோ உண்மையில் அவ்வளவு குறைவாகவே நாம் அறிகிறோம், இந்த அடிப்படை உண்மையை உணர்ந்துகொள்ள ஓர் ஆயுட்காலமே எடுக்கலாம், அல்லது அதை உணராமலே போகலாம். ஒரு புனைகதையின் பத்தியே எனக்குள் இந்த சுய-விழிப்புணர்வை தட்டியெழுப்பியது. தத்துவயியலாளர்கள் உரத்த குரலில் இதையே கத்திக் கொண்டிருந்தார்கள் என்றபோதிலும், அது என் காதுக்கு விழவே இல்லை. ஒரு புத்தகம் தான் அதை உணரவைத்தது.

மார்கஸ் ஜுசாக் எழுதிய புத்தகத் திருடன் (தி புக் தீஃப்) என்ற படைப்பில், மேக்ஸ் என்றதொரு கதாபாத்திரம், நாஜிக்களின் கண்ணில் பட்டுவிடுவோமோ என்ற அச்சத்தால் வீட்டின் உள் மூலையில் ஒளிந்து முடங்கிக்கிடந்தான். அப்போது, அவ்வீட்டின் மகள் லீசெல் அவனுக்கு ஆறுதல் அளிக்கும் வண்ணம் வெளியுலகத்திலிருந்து பொருட்களை வாங்கித் தந்தாள்:

''ஒருவருக்கு எப்படி இயற்கை வானத்தின் கற்பனையை மனதில் தூண்டுவது?

''பிப்ரவரியின் பிற்பகுதியில், அவள் மியூனிக் நகரத் தெருக்களில் நின்று, ஓர் ஒற்றை இராட்சச மேகம் மலைகளின் மீது தவழ்ந்து வெள்ளைப் பூதம் போல வருவதைக் கண்டு களித்தாள். அது மலையேறியது. சூரியன் மறைந்துபோனான், அதன் இடத்தில், பழுப்பு இதயமும் வெள்ளைத் தோலும் கொண்ட மிருகம் கீழே நகரத்தை நோட்டமிட்டது.

''அதோ பாருங்களேன்?' என்றால் அப்பாவிடம்.

''ஹேன்ஸ் தலையசைத்து, தனக்குப் புரிந்ததை வார்த்தையாக வெளிப்படுத்தினார். 'நீ இதை மேக்ஸிடம் கொடுக்க வேண்டும், லீசெல். மற்ற சாமான்களைப் போல இதையும் படுக்கையோர மேசை மீது விட்டுவர முடியுமா என்று பார்.'


''அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது போல அவரைப் பார்த்தால் லீசெல். 'ஆனால் எப்படி?'

''தன் விரல்களை மடக்கி லேசாக அவள் தலையில் கொட்டினார். 'அதை மனப்பாடம் செய். பிறகு எழுதி வை' என்றார்.''

நான் சமீபத்தில் வாசித்த இன்னொரு புனைவுப் படைப்பு, லெவிசன் வுட் எழுதிய ஹிமாலய நடைப்பயணம் (வாக்கிங் தி ஹிமாலயாஸ்). அதில் ஆசிரியர், பட்டுப் பாதை வழியே வந்த தனது நடைப்பயண அனுபவத்தை எழுத்தில் வடித்திருக்கிறார்.

ஷேர் அலி என்ற, ஹன்ஸாவைச் சேர்ந்த ஒரு பல்கலைப் பேராசிரியர் சொல்வதை வுட் பதிப்பிக்கிறார்: ''இங்கே நாங்கள் வித்தியாசமானவர்கள். நாங்கள் ஹன்ஸாகூத் - ஹன்ஸாவின் மக்கள். நூற்றாண்டுகளாக படையெடுப்பவர்களைத் தடுத்து இந்தப் பள்ளத்தாக்கை பாதுகாத்து வருகிறோம் - முஸ்லிம்களும் கூட ஒரு நூற்றாண்டுக்கு முன்புதான் இங்கே வந்தார்கள்.'' ஹன்ஸாகூத், தொலைதூரப் பகுதியில் வசிக்கிறார்கள் மற்றும் கல்வி அவர்களுக்கு நஞ்சு போன்றது எனப் பரவலாக நினைக்கப்பட்டாலும், ஏன் அவர்கள் வித்தியாசமானவர்கள் என்பதை ஷேர் அலி தெள்ளத் தெளிவாகக் கூறுகிறார்: ''நாங்கள் மிகவும் தாராளமானவர்கள் என்பதாலேயே எங்களால் செழித்தோங்க முடிந்தது. பாகிஸ்தானின் எழுத்தறிவு விழுக்காடு என்ன தெரியுமா?'' பிறகு, இவர் சொல்வதைவுட் மேற்கொள் காட்டுகிறார்: ''இது தேசத்தில் படிந்த கறை. நாங்கள் பெண்களைப் படிக்க விடாவிட்டால் எப்படி முன்னேறிய நாடுகள் பட்டியலில் சேர முடியும்? ... எங்கள் மத்தியில் அது தொண்ணூற்று ஐந்து விழுக்காடு. எல்லா பிள்ளைகளும் பள்ளிக்குச் செல்கிறார்கள், நூற்றுக்கணக்கானவர்களை நாங்கள் பல்கலைக் கழகத்துக்கு அனுப்புகிறோம். எல்லா சிறந்த அறுவைசிகிச்சை நிபுணர்களும் விமானப் பைலட்களும் ஹன்ஸாவைச் சேர்ந்தவர்களே.''

இது எனக்கு முன்பே தெரியும், இருப்பினும் வார்த்தைகளால் இந்தக் குறிப்பிட்ட ஓவியத்தைத் தீட்டியதற்கு ஆசிரியரைப் பாராட்டுகிறேன். இது நம்பிக்கை அளிக்கிறது, ஏனென்றால் இது ஒரு தப்பெண்ணத்தைக் கலைத்து, புது வழியை திறக்கிறது.■




Rotary

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 12,00,031 |
| Clubs | : | 35,678 |
| Districts | : | 543 |
| Rotaractors | : | 2,57,669* |
| Clubs | : | 11,203* |
| Interactors | : | 5,28,563* |
| Clubs | : | 22,981* |
| RCC members: | | 2,28,528* |
| RCC | : | 9,936* |

* As on July 1, 2018

## Membership Summary

As on July 2, 2018

| RI Zone | RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2981 | 113 | 4,553 | 186 | 63 | 228 | 170 |
| 5 | 2982 | 68 | 2,882 | 127 | 65 | 112 | 46 |
| 5 | 3000 | 126 | 4,995 | 416 | 296 | 670 | 195 |
| 4 | 3011 | 79 | 3,414 | 693 | 58 | 110 | 25 |
| 4 | 3012 | 85 | 3,389 | 650 | 41 | 129 | 56 |
| 5 | 3020 | 77 | 3,786 | 204 | 117 | 466 | 351 |
| 4 | 3030 | 89 | 4,653 | 534 | 84 | 304 | 164 |
| 4 | 3040 | 96 | 2,118 | 215 | 62 | 124 | 138 |
| 4 | 3053 | 71 | 2,784 | 469 | 19 | 56 | 95 |
| 4 | 3054 | 127 | 5,841 | 910 | 94 | 319 | 469 |
| 4 | 3060 | 98 | 4,100 | 482 | 62 | 123 | 137 |
| 4 | 3070 | 103 | 2,899 | 274 | 68 | 158 | 57 |
| 4 | 3080 | 77 | 3,241 | 216 | 73 | 216 | 108 |
| 4 | 3090 | 76 | 2,048 | 56 | 32 | 37 | 122 |
| 4 | 3100* | 68 | 1,647 | 81 | 11 | 72 | 146 |
| 6 | 3110 | 113 | 3,893 | 316 | 51 | 49 | 104 |
| 6 | 3120 | 74 | 3,169 | 381 | 38 | 61 | 52 |
| 4 | 3131 | 129 | 5,121 | 1,054 | 114 | 284 | 90 |
| 4 | 3132 | 97 | 3,655 | 353 | 66 | 211 | 149 |
| 4 | 3141 | 90 | 5,152 | 1,102 | 120 | 254 | 83 |
| 4 | 3142 | 89 | 3,135 | 514 | 72 | 195 | 65 |
| 5 | 3150 | 98 | 3,485 | 328 | 93 | 229 | 109 |
| 5 | 3160 | 71 | 2,436 | 122 | 27 | 48 | 81 |
| 5 | 3170 | 124 | 5,353 | 387 | 61 | 310 | 161 |
| 5 | 3181 | 73 | 3,015 | 235 | 35 | 181 | 105 |
| 5 | 3182 | 83 | 3,150 | 232 | 36 | 274 | 94 |
| 5 | 3190 | 128 | 4,758 | 564 | 155 | 359 | 51 |
| 5 | 3201 | 141 | 5,224 | 327 | 104 | 132 | 49 |
| 5 | 3202 | 129 | 4,800 | 232 | 105 | 436 | 46 |
| 5 | 3211 | 139 | 4,420 | 267 | 14 | 89 | 124 |
| 5 | 3212 | 99 | 3,967 | 347 | 114 | 280 | 142 |
| 5 | 3231 | 72 | 2,902 | 156 | 56 | 203 | 239 |
| 5 | 3232 | 107 | 4,297 | 632 | 150 | 320 | 80 |
| 6 | 3240 | 87 | 2,910 | 329 | 65 | 151 | 154 |
| 6 | 3250 | 97 | 3,717 | 631 | 51 | 209 | 183 |
| 6 | 3261 | 68 | 2,525 | 321 | 16 | 102 | 42 |
| 6 | 3262 | 90 | 3,283 | 391 | 47 | 73 | 75 |
| 6 | 3291 | 145 | 3,665 | 672 | 82 | 132 | 594 |
| **India Total** | | **3,696** | **1,40,382** | **15,406** | **2,817** | **7,706** | **5,151** |
| 5 | 3220 | 65 | 1,799 | 231 | 85 | 200 | 76 |
| 6 | 3271 | 77 | 1,351 | 233 | 54 | 16 | 13 |
| 6 | 3272 | 161 | 2,847 | 403 | 46 | 37 | 38 |
| 6 | 3281 | 204 | 5,494 | 797 | 237 | 92 | 187 |
| 6 | 3282 | 141 | 3,984 | 433 | 133 | 48 | 41 |
| 6 | 3292 | 117 | 4,369 | 632 | 123 | 118 | 108 |
| **S Asia Total** | | **4,461** | **1,60,226** | **18,135** | **3,495** | **8,217** | **5,614** |

**Non-districted.*

*Source: RI South Asia Office*

# திருவண்ணாமலை பேர்ல்ஸின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

RC திருவண்ணாமலை பேர்ல்ஸ் (D 3231) கடந்த ஆண்டு 11 விருதுகளைப் பெற்று சாதனை புரிந்தது. தற்போது புதிய ஆண்டில் மேலும் 12 பெண் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.

சென்னையில் இரு ஊராட்சிப் பள்ளிகளின் குழாய்களைப் பழுதுபார்த்து, சுற்றுச் சுவர்களைப் புதுப்பிப்பதற்காக ரூ.50 ஆயிரத்தை ரோட்டரி சங்க உறுப்பினர்கள் அளித்து உதவியுள்ளனர்.

மாவட்ட முன்னாள் ஆளுநர் சம்பத்குமார் அவர்களின் தலைமையில் சில மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள்களை நன்கொடையாக வழங்கினார். அத்துடன், திருவண்ணாமலை அருகே இலந்தளிர் என்ற இடத்தில் 100 மரக்கன்றுகளை இச்சங்கத்தினர் நட்டிருக்கின்றனர்.■



*காலிழந்த ஒருவருக்கு மூன்று சக்கர வாகன உதவி.*

# கார்ப்ரேட் உதவியுடன் புதுபிப்பு பணிகள்




DG *ப்ரோஜோ குண்டு புதுப்பித்த பள்ளியை துவக்கி வைத்தார்.*

கொல்கத்தா ஹூக்ளி மாவட்டம் செரம்பூர் கிராமப் பகுதியில் RC கொல்கத்தா யுவிஸ் (D 3291) கடந்த ஜனவரி 2017ல் தூய்மைப் பணித் திட்டம் (WinS project) குறித்த களப்பணி செய்து கொண்டிருந்தபோது காயத்ரி ஹிந்தி வித்யாலயா பள்ளியின் சிதைந்த கட்டடம், தரமற்ற வகுப்பறைகள், கழிவறையின் கழிவுநீர் வெளியேறி சுகாதாரக்கேடு ஏற்பட்டிருந்தது.

சங்கத் தலைவர் வீரேந்திர சவுத்ரி தலைமையில் பள்ளியை புதுப்பிக்கும் பணி துவங்கப்பட்டது. ஜெயஸ்ரீ டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் கார்ப்பரேட் சமூகப் பங்களிப்புப் பிரிவான ஆதித்ய பிர்லா ஜன சேவா விடமிருந்து ரூ.20 லட்சம் பெறப்பட்டு பள்ளிக் கட்டடம் புதுப்பித்து; கழிவறைகள் சீரமைக்கப்பட்டு; வண்ணம் பூசப்பட்டது. குடிநீர், தொட்டிகள் அமைக்கப்பட்டது. புதிதாக மேஜைகள், நாற்காலிகள் வழங்கப்பட்டன. ஆசிரியர்களுக்கு கூடுதல் வசதிகள் அளிக்கப்பட்டு வகுப்பறைகளில் கரும் பலகைகள் பொருத்தப் பட்டன.

இதையடுத்து புதுப்பிக்கப் பட்ட பள்ளியை மாவட்ட ஆளுநர் ப்ரோஜோ கோபால் குண்டு திறந்துவைத்தார். ரோட்டரி - கார்ப்பரேட் உதவி யுடன் இணைந்து செய்யும் பணிகள் குழந்தைகள் தரமான கல்வியைப் பெறுவதற்கும் சாதகமான சூழல் அமைவதற்கு உதவியுள்ளது. புதுப்பிக்கப்பட்டுள்ள பள்ளியில் படித்து பயன் பெறுவார்கள் என்று சங்கத் தலைவர் தெரிவித்தார்.■



**RC நாகப்பட்டினம் விங்ஸ் — D 2981**
கோடை காலத்தைச் சமாளிப்பதற்காகப் பொதுமக்களுக்கு நீர்மோர், பழச்சாறு ஆகியவை விநியோகம் செய்யப்பட்டன. நகரின் மையத்தில் உள்ள சந்தைப் பகுதியில் இளம்பிள்ளைவாத நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பிரசாரத்துக்கான பெரிய பதாகை (பேனர்) வைக்கப்பட்டது. இதுபோன்ற நற்பணிகளால் சங்கத்தின் புகழ் அதிகரித்தது.

**RC நாமக்கல் கோழிப்பண்ணை — D 2982**
நாமக்கல் அருகே அலங்காநத்தம் என்ற கிராமத்தில் கால்நடைகளின் நலனுக்காக மிகப் பெரிய மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. அதில் 70க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது.





**RC சோனிப்பட் மிட் டவுண் — D 3012**
ஆலன் டீசல் இந்தியா நிறுவனத்தின் கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு நன்கொடையின் உதவியுடன் ஹரியானா சோனிப்பட் ரோட்டரி சமுதாய நலக் கூடத்தில் ரூ. 5.05 லட்சம் செலவில் 5 கிலோவாட் சக்தியுள்ள சூரிய மின்சக்தி உற்பத்திப் பிரிவு அமைக்கப்பட்டது. இந்தப் பிரிவை மாவட்ட ஆளுநர் சுபாஷ் ஜெயின் திறந்துவைத்தார்.

**RC புதுக்கோட்டை — D 3000**
ஏழைப் பெண்களுக்கு சமையல் எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டன. அத்துடன் புதுக்கோட்டை அருகில் உள்ள கிராமத்தில் ஓர் அரசுப் பள்ளியில் குடிநீர் வடிகட்டும் சாதனம் அமைத்துத் தரப்பட்டது. மேலும், அப்பள்ளி பெண்களின் நேப்கின்களை அழிப்பதற்கான எரிதொட்டியும் அளிக்கப்பட்டது. இப்பணிகளுக்காக ரூ.75 ஆயிரம் பயன்படுத்தப்பட்டது.



# சங்க சேவைகள்

### RC மருதரா — D 3053

RC மருதரா, பிகானிர் ரவுண்ட் டேபிள் மற்றும் 18 அமைப்புகளுடன் இணைந்து மஹாதான் என்ற தலைப்பில் ரத்த தான முகாமை நடத்தியது. 95 பேரிடமிருந்து ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இந்த ரத்த தான முகாமை மத்திய அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தொடங்கிவைத்தார்.



### RC பரோடா சாயாஜி நகர் — D 3060

குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க பரோடா சாயாஜி நகர் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் சங்கம் சார்பில் படிப்பு அறைகள் அமைக்கப்பட்டன. சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ஏழைச் சிறுவர்களுக்காக தனிபயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



### RC ஜம்மு மிட் டவுண் ரோட்டரி சங்கம் — D 3070

ரோட்டரி சங்கத்தின் சார்பில் அக்கம்பக்கத்தில் உள்ள நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைப் பள்ளியில் சேர ஊக்குவிக்கும் வகையில், நம் பள்ளிக்குச் செல்வோம் என்ற பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் அப்பகுதியில் அடிப்படை எழுத்தறிவு, சுகாதாரப் பயிற்சி, ஆரோக்கிய நடவடிக்கை ஆகியவையும் கற்றுத் தரப்பட்டன.

### RC மத்திய சண்டிகர் — D 3080

சிவில் டிஸ்பென்சரியில் மருத்துவப் பரிசோதனை, கண் பரிசோதனையும் நடத்தப்பட்டன. கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் நடத்தும் யுவீகேன் ஃபவுண்டேஷன் முகாமில் புற்றுநோய் பரிசோதனைகளை நடத்தினர். JP கண் மருத்துவமனையிலிருந்து மருத்துவர்கள் சேவை புரிந்தனர்.





### RC மத்திய மொராதாபாத் — D 3100

RC மொராதாபாத் சார்பில் அப்பகுதியில் பள்ளியில் கைகழுவு (WinS) முகாம் நடத்தப்பட்டது. கைகழுவுவதன் அவசியம், சுகாதாரத்தின் முக்கியத்தை உணர்த்தும் வகையில் பெண்கள், குழந்தைகளுக்கு சோப்புகள் வழங்கப்பட்டன.



# ரோட்டரி

## RC கிரேட்டர் ஃபைஸாபாத் — D 3120

குருநானக் புரா என்ற இடத்தில் குருத்வாரா குரு சிங் சபாவுக்கு குளிரூட்டும் சவப்பெட்டியை டாக்டர் இந்திராணில் பானர்ஜி தனது தந்தை டாக்டர் பி. பானர்ஜியின் நினைவாக நன்கொடையளித்தார். சடலங்களைப் பாதுகாக்க மேலும் 100 பெட்டிகளை வழங்குவதற்கு சங்கம் முடிவு செய்துள்ளது.




## RC புனே வெஸ்ட் எண்ட் — D 3131

ரொட்டேரியன் ஆதித்ய டேவிதார் யோசனை படி புனேயில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் 80 முதல் 100 மாணவர்கள் அமரும் வகையில் ரூ.18 லட்சம் செலவில் அறிவியல் கலந்துரையாடல் மையம் அமைக்கப்பட்டது. இந்த மையத்தில் 60 திட்டங்கள் உள்ளன.



## RC முலன்ட் ஹில்ஸ் — D 3141

மானவ் சேவா ஆதரவற்றோர் இல்லத்தை சேர்ந்த 150 குழந்தைகளை மகிழ்ச்சியூட்டும் வகையில் நீர் கேளிக்கை மையத்திற்கு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். சுத்தம் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வுக்கு உதவும் சிறு பைகளும் (hygiene kit) வழங்கப்பட்டன. மாயாஜாலக் காட்சிகளும் நடத்தப்பட்டன.



## RC ஹிரநந்தானி எஸ்டேட் — D 3142

போக்குவரத்து போலீசாருக்கு 300 மழைக் கோட்டுகள் வழங்கப்பட்டன. இதற்கான நிகழ்ச்சியில் மாநகர போக்கு வரத்து இணை ஆணையர் மதுகர் பாண்டே, சங்கத் தலைவர் பல்ஜிந்தர் சிங் குமார் ஆகியோர் பங்கேற்றனர்.



## RC மத்திய மங்களூர் — D 3181

மங்களூர் நகர் ரோட்டரி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரபல துளு நடிகர் தேவதாஸ் காபிகட், நவீன் D. படில் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மாநகர மேயர் பாஸ்கர் மோலி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.



# சங்க சேவைகள்

### RC உடுமலைப்பேட்டை தேஜஸ் — D 3202

காவல் துறையின் துணையோடு சாலைப் போக்குவரத்து வாரத்தை ஒட்டி, டிரைவர்களுக்காக ரத்த தானம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதில் 200க்கும் மேற்பட்டோர் பயன்பெற்றனர்.



### RI District 3211

கேரள மாநிலம் ரோட்டரி சார்பில் விளையாட்டுத் திறன் மேம்படுவதற்கான ரோட்டரி முன்முயற்சி (RISE) நிகழ்ச்சியை அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரா தொடங்கிவைத்தார். ரூ.10 லட்சம் செலவில் 134 சங்கங்களின் நல்லுறவை வளர்க்க செஸ், பாட்மிண்டன், கிரிக்கெட் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.






### RC சென்னை மிட் டவுண் — D 3232

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் அறக்கட்டளை மருத்துவ மனையில், உலகளாவிய நிதியுதவியில் ரூ.22,60,428 செலவில் பல் மற்றும் தசை இயக்கத்துக்கான கருவிகள் வழங்கப்பட்டன. சர்வதேச அளவில் மலேசியாவின் RC மேலாவட்டி (D 3300) உதவியது. PDG R ஸ்ரீநிவாசன், மடத்தின் தலைவர் சுவாமி கவுதமானந்தர், மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலர் Dr. J ராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.



### RC குவாஹத்தி சிட்டி — D 3240

குவாஹத்தியில் ஷெம்ஃபோர்டு ஃப்யூச்சரிஸ்டிக் பள்ளியுடன் இணைந்து 60 மரக்கன்றுகளை மாணவர்கள், ஆசிரியர்கள், சங்கத்தினர் நட்டனர். எனது பசுமை யான உலகம் (My green world) என்ற தலைப்பில் குழந்தைகளுக்கான ஓவியப் போட்டியும் நடத்தப்பட்டது.




### RC ஜபல்பூர் தெற்கு — D 3261

சாலையில் நடந்துசெல்வோருக்கு உதவுவதற்காக நடைபாதைகளில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டன. இதன் மூலம் ரோட்டரி சங்கத்துக்கு மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்,
வடிவமைப்பு: L குணசேகரன்

# புத்தகங்கள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம்

LBW

TCA ஸ்ரீனிவாசராகவன்

சில நாட்களுக்கு முன் ஒரு நண்பர் தான் நாவல், சிறுகதை போன்ற புத்தகங்களைப் படிப்பதில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அது எனக்கு நாற்பது ஆண்டுக்கு முன் ஏற்பட்ட அனுபவத்தை நினைவுபடுத்தியது.

நான் நாவல்கள், சிறுகதைகள் படிப்பதில் நாட்டமில்லாதவன். இதை அறிந்த எனது தோழி நான் ஏதோ தாகூர், சரத்சந்திரர், ஜீன் பால் சாத்ரே போன்றோரின் நூல்களைப் போல் வலுவான கதைகளைப் பார்த்துப் பயந்துபோய் கதைப் புத்தகங்களைப் படிப்பதில்லை என்று நினைத்துக் கொண்டாள். நானோ அவளிடம் எனக்கு நாவல்களைப் படிப்பதற்கே விரும்பவில்லை என்று கூறிவிட்டேன். நீண்ட தூர ரயில் பயணத்தில் ஜேம்ஸ் ஹாட்லி சேஸ், குல்ஷன் நந்தா போன்றோரின் நாவல்களைப் படிக்கத் தந்தபோது மறுத்துவிட்டேன். அவள் வெறுத்துப் போனாள். பின்னர், நாளடைவில் புத்தகம் படிக்கும் பழக்கத்துக்கு மாறினேன்.

இது இப்போது சாதாரணமாகத் தோன்றலாம். அந்தக் காலத்தில் புத்தகங்கள் எளிதில் கிடைக்காது. ஆனால், இப்போதெல்லாம் நிறைய புத்தகங்கள் கிடைக்கின்றன. அது மட்டுமல்ல, மற்ற பொருட்களைப் போல் புத்தகங்களும் பெரிதாகி வருகின்றன. மூன்றே நாட்களில் 250 பக்க நூல்களைப் படித்து முடிப்பது மாறிவிட்டது. தூக்கிச் செல்ல முடியாத 800 பக்க புத்தகங்கள் இடத்தைப் பிடித்துக் கொண்டது. இதெல்லாம் முன்னேற்றத்தின் பலன் என்று முடிவு செய்துகொண்டேன். இதெல்லாம் அமெரிக்கர்களின் வழி. பெரிய புத்தகங்கள் இருந்தால், அதற்குப் பண மதிப்பு என்று ஆகியுள்ளது.

*அந்தக் காலத்தில் புத்தகங்கள் எளிதில் கிடைக்காது. மற்ற பொருட்களைப் போல் புத்தகங்களும் பெரிதாகி வருகின்றன.*

## தடிமன் புத்தகங்கள்

குழந்தைகளுக்கான புத்தகங்கள் 200 பக்கத்துக்கு மேல் இருக்காது. ஏன், அதை விடக் குறைவாகத்தான் பல நூல்கள் இருக்கும். அதற்கு மாறாக, JK ரவ்லிங் எழுதி 1997ல் வெளியான ஹாரி போட்டர் முதல் பாகமே 350 பக்கங்கள்! அதையடுத்து வெளியான பாகங்களின் பக்கங்களும் அதிகமாகவே இருக்கின்றன.

டுவிட்டர், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் மூழ்கியிருக்கும் இந்தக் காலத்தில் குழந்தைகளின் கவனம் திரும்பியிருக்கிறதா என்று வியப்பாக யோசித்தேன். அல்லது அவர்கள் கதைக்காகப் படிக்கிறார்களா, புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்ற நோக்கில் படிக்கிறார்களா என்றும் தெரியவில்லை.

JK ரவ்லிங் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் ராபர்ட் கால்ப்ரைத் என்ற புனைபெயரில் கதைகளை எழுதுகிறார். அப்படி எழுதிய முதல் புத்தகமே 450 பக்கங்கள். ஜேஃப்ரி ஆர்ச்சரும் இதே மாதிரிதான். அவர் ஆரம்பத்தில் எழுதிய புத்தகங்கள் 300 பக்கங்கள் கொண்டவை. தற்போது தலா 400 பக்கங்கள் கொண்ட ஆறு பாகங்களை எழுதுகிறார்.

ஏன், புகழ்பெற்ற எழுத்தாளர்களும் இப்படித்தான் எழுதுகிறார்கள் என்பதைப் பார்க்கலாம்.

பயணத்தின் போதெல்லாம் இப்படி கனமான புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு போக முடியாது. படுக்கையில் இருந்தபடி படிக்கவும் முடியாது. ஒரே மூச்சில் படித்துவிடவும் இயலாது.

அதனால்தானோ என்னவோ இந்திய எழுத்தாளர்கள் இதற்கு மாறாக பெரிய பெரிய புத்தகங்களை எழுதுவதில்லை. சுலபமாக எடுத்துச் செல்லவும், விரைவாகப் படித்து முடிக்கவும் எழுதுகிறார்கள்.

இந்திய நூல்களில் மொழிபெயர்ப்பு நூல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இந்திய மொழிகளிலிருந்து மொழியாக்கம் செய்யப்படுபவை நூற்றுக் கணக்கில் உள்ளன. அற்புதமான கதைகளும் உள்ளன. ஒரு சில நூல்கள் அலுப்புத் தட்டக் கூடும். பல இந்திய மொழி நூல்களின் ஆங்கில மொழியாக்கம் நன்றாகவே இருக்கின்றன. அதனால், ஆங்கிலம் நாட்டின் பண்பாட்டை இணைக்கும் மொழியாகவே தோன்றுகிறது.

ஆனால், அத்தகைய நூல்கள் கிடைப்பது கடினமாக இருக்கிறது. புத்தகக் கடைகளில் அவை இருப்பதில்லை. ஏன் அவை பற்றிய அறிவிப்புப் பலகைகள் கூட இல்லை. காரணம், அவற்றுக்குப் போதிய கமிஷன் கிடைப்பதில்லை.

அந்த நூல்கள் எல்லாமே இப்போது ஆன்லைன் வழியாக மலிவான விலையில் கிடைத்துவிடுகின்றன என்பது இப்போது நல்ல செய்தி! ■

# பெல்காவியில் போலீசாருக்கு நுரையீரல் பரிசோதனை

ரோட்டரி செய்திக்குழு



போலீஸார் ஒருவரை மருத்துவர் பரிசோதிக்கிறார்.

RC பெல்காம் மிட் டவுண் (D 3170) சார்பில் நகரில் உள்ள போக்குவரத்துப் போலீசாருக்கு நுரையீரல் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது.

போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டுள்ள போலீசாரின் ஆரோக்கியத்திற்காக முகாம் நடத்தப்பட்டது. ஆரோக்கியமாக இருந்தால்தான் குடும்பங்களுடன் அவர்களால் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும் என்று சங்கச் செயலாளர் SM நாயக் குறிப்பிட்டார்.

மருத்துவ முகாமில் ஆண்கள், பெண்கள் என்று 150க்கும் மேற்பட்ட போக்குவரத்து போலீசார் பங்கேற்றனர். காவலர்களின் நலனில் அக்கறை கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது இதுதான் முதல் முறை என்று ஒரு போலீசார் கூறினார். அரசாங்கம் இது போல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நகர காவல் துறை துணை ஆணையாளர் DC ராஜப்பா, உதவி ஆணையர் லட்சுமி நாராயணன் ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து பணியாற்றினர். ரோட்டரி சங்கத் தலைவர் விலாஸ் பதாமி, திட்டத் தலைவர் டாக்டர் விஜய் புஜார் ஆகியோர் மருத்துவ முகாம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

போக்குவரத்துக் காவலர்களுக்கு மருத்துவ முகாம் நடத்தும் யோசனையை பேராசிரியர் உதய்சிங் ரஜ்புத் தெரிவித்தார். போக்குவரத்து போலீஸார் பெல்காவியில் சுற்றுச்சூழல் மாசடைந்த தெருக்களில் தினந்தோறும் 8 மணி நேரத்துக்கும் மேல் போக்குவரத்துப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்.■

---

# ஹாம்பர்க் ரோட்டரி மாநாட்டில் விவாத அமர்வு (Breakout)




ஜெர்மனி, ஹாம்பர்க் நகரில் நடைபெறும் ரோட்டரி மாநாட்டில் Breakout அமர்வுகளில் பங்கேற்க விரும்பும் உறுப்பினர்கள் இப்போது விண்ணப்பிக்கலாம். தங்களது கருத்துகள், திட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் இது அமையும்.

ரோட்டரி அமைப்பினர் புதிய திட்டங்கள், நிதியுதவி, உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரித்தல் போன்றவற்றுக்கான புதிய யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளவும் அந்தக் களம் துணை புரியும். இச்சந்திப்பு ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன், இத்தாலியன், போர்ச்சுகீஸ், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் நடைபெறும். இது தொடர்பாக அறிந்துகொள்ள இணையதளம் : *https://on.rotary.org/IC19-sessions.*

திட்டம் குறித்த விண்ணப்பங்கள் ஆன்லைன் வழியாக வந்து சேர வேண்டிய கடைசி நாள்: ஞாயிற்றுக்கிழமை, 30 செப்டம்பர், 2018.■




WHERE LUXURY MEETS NATURE




**Saj By The Lake**

**Office :** Navkar Plaza, Bajaj Road, Vile Parle (West), Mumbai - 400056. **Tel.:(022)26203399 / 26202299**
E:enquiry@sajresort.in | www.sajresort.com

**Resort :** Kalyan Ahmadnagar Road, Malshej Ghat, National Highway 222, Village - Karanjale, Taluka - Junner, Pin Code No.412409.

**Special Package available for Rotary Members**

## கன்வென்ஷனுக்கு ரிக்ஷா சவாரி

*RC ஃபேர்வ்யூ ஹைட்ஸ் (இல்லினாய்) தலைவர் Rtn ரால்ஃப் சூக் ரோட்டரி கன்வென்ஷனுக்கு 1,285 கி.மீ. மிசௌரி செய்ன்ட் லூயியிலிருந்து டொரன்டோ வந்தடைந்தார். 22 நாட்கள் பயணித்து, $22,000 TRF போலியோ நிதியிற்காக வசூல் செய்த இவரை RI தலைவர் இயான் ரிஸ்லி மாநாட்டிற்கு வரவேற்று கௌரவித்தார்.*

*படம் :ரோட்டரி இன்டர்நேஷனல்*





# Rotary
District 3012

## Subhash Jain AKS
District Governor 2018-19

BE THE INSPIRATION

**Sansthapan (Installation Ceremony)**
1st July 2018, Le Meriden, New Delhi







DG HOME CLUB




AGREEMENT FOR e-LEARNING CLASSES WITH TATA TECHNOLOGY, PUNE



Rtn. Brijesh Mathur & Rtn. Pankaj Jain -AKS Declarant Honored by Gold Pin

## START WITH ACTION
1ST JULY 2018, INAUGURATION OF MEDICAL VAN DONATED TO VARDAN HOSPITAL, GHAZIABAD



• RC SAHIBABAD • RC GHAZIABAD GREATER • RC GHAZIABAD INDUSTRIAL TOWN

## Project Launch by DG Subhash Jain on 1st July 2018

- 7 Dialysis Machines Partnership with Sharda Hospital, Project Cost 50,000 USD Approx.
- CT Scan Machine to Vardan Hospital Project Cost 1,60,000 USD
- Mobile Mammography Bus Project Cost 90,000 USD Approx. Will Be Donated to Sharda Hospital
- WinS Programme (15 Schools) Project Cost 50,000 USD Approx.
- Eye Cataract 1000 Surgery & Eye Camps Project Cost 50,000 USD Approx.
- 4000 Injections for Cervical Cancer Project Cost 84 Lacs Approx.
- Singer Sewing Machine (10 Vocational Training Centre) 300 Machines